# பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்

இரா. இளங்குமரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்

இரா. இளங்குமரன்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Pāvāṇar kaṭavuḷ nampikkaiyum camayac cālpum |
| Author | : | Pulavar R. Ilankumaran<br>Thiruvalluvar Thavacchalaai, Thiruchirappalli |
| General Editor | : | Prof. Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 614 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2008 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x+94 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Tamil Religion |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

தமிழ் இலக்கிய, மொழி வரலாற்றுக்குப் பாவாணரின் பங்களிப்பு அளப்பரியது. அளவிலாதது. பாவாணரின் இத்தகு பங்களிப்புகளைப் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் பல நோக்கில் ஆய்ந்து வருகின்றனர். இந்நிலையில் தகைசால் புலவர் இரா. இளங்குமரனார் அவர்கள் பாவாணரின் கடவுட் கொள்கை பற்றியும் தமிழ்ச் சமயச் சால்பு பற்றியும் இச்சொற்பொழிவு நூலில் ஆழங்கால்பட்டு எழுதியுள்ளார். இது போற்றுதற்குரியது.

இப்பொழிவு நூலில், பாவாணர் முதலில் கிறித்துவச் சமயச் சார்புடன் தம் படைப்புகளில் குறிப்பிட்டுள்ள செய்திகளை, தொடர்களை ஆய்ந்து எழுதும் இந்நூலாசிரியர் பின்பு மறைமலை அடிகளாரும் ந.சி. கந்தையா அவர்களும் தமிழர் சமயம் குறித்து ஆய்ந்துள்ள கருத்துகளோடு தமிழர் சமயம் பற்றிய பாவாணர் கருத்துகளையும் ஒப்பிட்டுப் பல்வேறு தலைப்புகளில் மிகச் சிறப்பாக விவாதித்து விளக்கியுள்ளது புதுமையாகும்.

சான்றாக, ந.சி. கந்தையா அவர்கள் கருத்தாவது:

> ஆரியத் தெய்வங்கள், ஆரியர் தமிழரை அடிமைப் படுத்திய வகைகள் ஆரியத்தால் விளைந்த கேடுகள் என அவ்வியலில் ஆய்வுகள் நிகழ்த்துகிறார். வெளிநாட்டில் இருந்து இந்தியத்தில் முதற்கண் புகுந்த அயன் மொழியாளர் ஆரியர். அவர் சமயம் வைதிகம். அதன், புலை கொலை கேள்வி சடங்கு என்பவற்றை ஒப்பாமையால் இந்தியத்துள் கிளர்ந்த சமயங்களே புத்தமும் சமணமும். இம்மூன்றற்கும் முற்படத் தமிழிந்தியமாக இருந்த பெரும்பரப்பில் மட்டுமன்றி உலகளாவிய பரப்பிலும் ஞாயிற்றுக் கடவுள் வழிபாடும் சிவவழிபாடும் அம்மை வழிபாடும் இருந்தமையைச் சைவ சமய வரலாறு என்னும் தம் நூலில் விரிவாகக் கூறுகிறார் ந.சி.க.

என இந்நூலாசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

சிவனியம், மாலியம் எனும் தமிழர் சமயக் கருத்துகளே காலப்போக்கில் பலவாக மாறின என்றும், ஆரியத்தாக்கத்தினால் தமிழர் சமயம் இந்தியாவெங்கும் ஆரியமயமாக்கப்பட்டது எனும் இவ்வறிஞர்களின் கருத்துகள் இங்குப் பதிவு செய்யப் பெற்றுள்ளன.

> தமிழர் மெய்யியல் கொள்கைகளையெல்லாம் தன் கொள்கையாக எடுத்துக் கொண்டு, தன் பூதவழி வேள்விச் சடங்குகளையெல்லாம் சிவனியம் மாலியம் என்பவற்றில் புகுத்தி, கடவுட்சமயம் என்னும் நிலையை முற்றிலும் மாற்றிச் சடங்குச் சமயம் என்பதை நிலைநாட்டி வந்திருப்பதும் அவ்வழியே வழியாய்த் தொடர்வதும் கண்கூடு. இவ்வழியால், பொருந்தாததும் பகுத்தறிவுக்கும் இறைமைக்கும் ஏலாததுமாம் தொன்மப் புனைவுகளை உருவாக்கித் தமிழர் வாழ்வியல் அடையாளமாகிய மொழியையும் மொழிக்கு அரணமாம் இலக்கண இலக்கியங்களையும் சிதைத்தது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப் பெற்றுள்ள அறக்கட்டளைகளில் அதிகமான சொற்பொழிவுகளையும் நூல்களையும் பெற்றுள்ளது மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் பெயரில் நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளையே. இந்நிலையில், இதை நிறுவிய சிங்கப்பூர்த் தமிழன்பர் கோவலங்கண்ணனார் மிகுந்த பாராட்டுக்குரியவர்

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், இந்நூலின் மெய்ப்புத் திருத்தம் செய்த பதிப்பு மேற்பார்வையாளர் முனைவர் ஆ. தசரதன், கணிப்பொறியாளர் திருமதி ந. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

## ஆசிரியர் குறிப்பு



பெயர் : இரா. இளங்குமரன்

பிறப்பு : 30-01-1930

பிறந்த ஊர் : முகவை மாவட்ட வாழவந்தாள்புரம்

புலவர் பட்டம் பெற்று, திருப்பரங்குன்றம் மு.மு.உ. பள்ளியில் தமிழாசிரியராகத் திகழ்ந்து, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் பணியாற்றியவர். பாவாணர் பற்றாளர்; தனித்தமிழ் போற்றுபவர். 'புலவர் மணி' எனப் போற்றப் பெறுபவர். சைவ சித்தாந்தக் கழகப் புலவர். திருச்சி மாநகரில் திருவள்ளுவர் தவச் சாலையை நிறுவித் தமிழுக்குச் செம்மாந்த உழைப்பை நல்கிவருபவர்.

தெளிந்த அறிவும், கொண்ட கொள்கையில் உறுதியும், செயலில் திருத்தமும், வாழ்வில் செம்மையும், எந்த நேரமும் தமிழ்ச் சிந்தனையும், ஓய்விலா உழைப்பும், சோர்வறியாப் பயணமும், தன்னை முன்னிலைப்படுத்தாது தமிழை முன்னிலைப்படுத்தும் பண்பும் மிக்கவர். வாழ்வின் முழுப்பொழுதும் தமிழ் வாழத் தம் வாழ்வை ஈகம் செய்யும் பெருமகன்.

அன்பும் அறிவும் (சிறுவர் பாடல்), இரத்தக் கறை (நாடகம்), நாவலர் பாரதியார் (வரலாறு), தென்னாட்டு வாணிகம், முப்பெரும் புலவர்கள், அண்ணல் ஆபிரகாம், திருக்குறள் கதைகள் கட்டுரைகள், காப்பியக் கதைகள் (ஒவ்வொன்றும் பத்துத் தொகுதிகள்), முல்லாவின் கதை முப்பது, இன்ப வாழ்வு, மேல் நாற்பது கீழ் நாற்பது (கவிதை), காக்கை பாடினியம், தகடூர் யாத்திரை, பெரும்பொருள் விளக்கம் எனப் பல்வேறு துறைகளில் நூல்களை அருளியவர். தொல்காப்பிய வாழ்வியல் விளக்கம் என்னும் நூல் தனிச்சிறப்பு வாய்ந்தது. தமிழ் மரபு தழுவிய இவரின் ஆழ்நிலை உணர்வுகள் எதிர்காலத் தமிழ் உலகிற்கு ஒரு கலங்கரை விளக்கமாகும்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பொழிவாளர் புகல்வு | 1 |
| 1. ஆய்வின் அடிமனை | 5 |
| 2. பாவாணர் கடவுள் நம்பிக்கை | 8 |
| 3. பாவாணர் சமயச் சார்பு | 17 |
| 4. சார்பும் சால்பும் | 23 |
| 5. சமயச் சார்பர் நிலை | 32 |
| 6. சமயச் சால்பர் நிலை | 40 |
| 7. தமிழர் சமய ஆய்வர் | 46 |
| 8. தமிழர் சமய முடிபு | 59 |
| 9. பாவாணர் சமய ஆய்வு | 64 |
| 10. பாவாணர் சமயச் சால்பு | 77 |
| 11. முடிநிலை | 88 |

# பொழிவாளர் புகல்வு

சமயம் நெறியயில் நிலையமாகக் காட்சி வழங்கியது ஒரு கால்! அதனால் தொண்டின் உயிர்ப்பகமாகத் திகழ்ந்தது. பின்னாள், தமிழர் சமயம் தடம் மாறியது. தன்னிலை கெட்டது; தமிழை மறந்தது; தமிழ் நெறியாம் பிறப்பு ஒப்பைப் பிறழ விட்டது. தன்னலத்தார் வகுத்த சாதிக்கும், பொருள் உணர்ந்து ஓதற்கு இடமிலா வேற்றுமொழி வழிபாட்டுக்கும் இடமளித்தது. தூய சமயம் கொடுமுடியினின்று, குப்புற வீழ்ந்து தீயசமயமாகி விட்டது.

வீழ்ந்ததை எழுப்புதல் வேண்டும். ஆம். விழிப்புறுத்த வேண்டும். உறங்குவாரை எழுப்பலாம். உறங்குவாராக நடிப்பாரை எழுப்புவது எளிமையா? உறக்கமும் ஒரு நாள் இருநாள் - ஓராண்டு, ஈராண்டு - உறக்கமா? நெட்டிடையாகப் பட்டமரமென உறக்கம்! உயிர்மட்டும் தாங்கி உணர்வெதுவும் இல்லா மயக்க நிலைப்பட்ட பேருறக்கம்! எல்லாம் மறந்த பேருறக்கம்.

தமிழ் என்பதை மறந்து, தமிழினம் என்பதை மறந்து, தமிழர் சமயம் என்பதை மறந்து மொழியாலும் வழியாலும் வேற்று மொழிக்கும் வேற்று வழிக்கும் கொத்தடிமைப் பட்டுவிட்ட தன்னிலை மறந்த மயக்கம்! எப்படி எழுப்புவது? வெற்றி கிட்டுமா?

தவத்திரு மறைமலையடிகளார் கிளர்ந்தார். தமிழ் வடிவாக - தனித்தமிழ் வடிவாகத் திகழ்ந்தார். அவர்க்குத் தமிழின் தனித்தன்மை விளங்கிற்று! தமிழர் சமயம் விளங்கிற்று! தமிழர் நெறி விளங்கிற்று! அவர் மெய்கண்டார் ஆனார்! நக்கீரர் ஆனார்! சிவஞானமுனிவரானார்! வள்ளுவரும் தொல்காப்பியமும் புன்முறுவல் பூத்து வாழ்த்துக் கூற வழிகண்டார்.

மெய்கண்டார், 'பிறர் என்ன எண்ணுவரோ' என எண்ணித் தாம் கண்ட மெய்ம்மையை மறைப்பரோ? மறைப்பின் நெஞ்சகம் ஒழித்த வஞ்சகர் என்னும் பொய்யராவரே அன்றி மெய்யர் ஆவரோ?

தமிழையும் தமிழர் சமயத்தையும் இருகண்களென - கண்மணிப் பாவைகளெனக் கொண்டார்! 'இசையும் வசையும் வாய்மை நோக்கர்க்கு வருபொருளே' எனத் துணிந்தார். எழுதினார்;

பொழிந்தார்; தாம் கண்ட மெய்ம்மங்களைத் தமிழுலகம் அறியச் செய்தார்.

மறுப்புகள்! வெறுப்புகள்! எதிர்ப்புகள்! ஏசல்கள்! பழிப்புகள்! தூற்றல்கள்! எல்லாம் எல்லாம்! எவரிடமிருந்து? தமிழரிடமிருந்து? ஏன்? தமிழர் அத்தகைய மூளைச் சலவைக்கு ஆட்பட்டுக் கிடந்தனர்! கிடக்கின்றனர்! ஆயினும், நிமிர்ந்து நின்றார்; நிலைத்து நின்றார்; வாடையும் கோடையும் தாமே அடங்கும் வரை தனித்து நின்று தாங்கினார்; கொண்டலும் தென்றலுமாக நின்று நிலைப்பணி செய்தார்.

அடிகளார் பணிக்கு - இருதிறப் பணிக்கு - வழிமுறை வேண்டாவா? இல்லாக்கால் கண்ட வளமை மூடுண்டன்றோ போம். சமயக் கண்காக்கக் கிளர்ந்தார் கா. சுப்பிரமணியனார்; மொழிக்கண் காக்க முகிழ்த்தார் பாவாணர்.

ஓர் ஆலமரத்து, அதுவும் மூதாலமரத்து - இணையிலா இரு கிளைகள் எனக் கா.சு.வும் பாவாணரும், பரந்தும் விரிந்தும் ஊன்றியும் உறைத்தும் பணித்திறம் பூண்டனர். அடிகளார் பணிக்கு வழிஞர் பணித்திறம் ஊட்டமளித்தது! ஊற்றமளித்தது.

அடிகளார் தமிழர் மதம் இயற்றினார். சாதி வேற்றுமையும் போலிச் சைவமும், பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா என்னும் நூல்களும் இயற்றினார்; கட்டுரைகளும் பலப்பல இயற்றினார்.

"எந்நிலையில் நின்றாலும் எவ்வேடம் கொண்டாலும் மன்னிய சீர்ச்சங்கரன் தாள் மறவாத" செல்வர் கா.சு. அப்பணிக்கே தம்மை ஒப்புக் கொடுத்தார்! அவர்தம் நூல்கள் எல்லாமும் சமயக் கீர்த்தி சாற்றுபவை எனின் சாலும்! அவற்றுள் ஒன்றே தமிழர் சமயம்!

பாவாணரும் 'தமிழர் மதம்' இயற்றினார். தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழர் திருமணம், தமிழர் விளையாட்டு, தமிழ் நாகரிகமும் பண்பாடும் எனப் பல யாத்தார்! தனித்தமிழ்த் தந்தையார் மறைமலையடிகளார் என்றால், தனித்தமிழ்க் கோவேந்தர் பாவாணர் எனத் திகழ்ந்தார்.

ஈழத்துப் பேரறிஞர் ந.சி. கந்தையா அவர்கள் அயரா உழைப்பாளர்! தமிழ் சார்ந்த அரிய பெரிய புதையல்களை யெல்லாம் உலகளாவிய பார்வையில் கண்டெடுத்து, அருமணி

மாலையன்ன நூல்களை அன்னைக்கு வழங்கினார். தமிழர் சமயம் எது? சைவசமய வரலாறு, இந்து சமய வரலாறு, சிவன் முதலியவை அவர் ஆய்ந்து வழங்கிய சமயம் சார்ந்த நூல்கள்.

முதுபேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அளவு பெரிது. சமயங்கள் வளர்த்த தமிழ், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், கிறித்தவமும் தமிழும் என்னும் நூல்களும் வேறு பல நூல்களும் இயற்றியவர்.

இவற்றின் ஆய்விலும் தோய்விலும் ஊன்றிய பொழிவு நூலே "பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச்சால்பும்" என்பது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அறக்கட்டளைகளுள் ஒன்று, பாவாணர் அறக்கட்டளை. சிங்கபுரியில் வாழ்ந்தாலும் செந்தமிழ்ப் பற்றுமையும் பாவாணர் பற்றுமையும் தமிழ்ப் புரவாண்மையும் கொண்ட கோவலங் கண்ணனார் அதனை நிறுவினார். அவ்வறக்கட்டளையின் பொழிவு நூலாக முன்னரே, "தேவநேயப் பாவாணர் சொல்லாய்வுகள்" என்னும் என் நூல் வெளிவந்தது.

நல்ல தமிழறிஞரும் சிறந்த செயன்மையரும் ஆகிய தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் தமிழ்த் திரு. ம. இராசேந்திரனார், மேனாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முழுதுறு கூடுதல் பொறுப்பாளராம் இயக்குநராகத் திகழ்ந்தவர். பொழிவின் போதே நூல் வெளியீடும் செய்யும் மரபுக் கடனை மாறாது போற்றும் அவர்தம் அருமைத் தூண்டல் வெளிப்பாடே, 'பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்' என்னும் இந்நூல்.

இந்நூலைப் பாவாணர் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெறும் இந்நாளில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வெளிப்பட வைத்தவர் இந்நாளைய இயக்குநர் பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன் ஆவார். இவ்இருபெரும் தகையாளர்களுக்கும் எம் நன்றி.

இத்தகையதொரு பொழிவும் நூலும் இந்நாள் நாட்டு நிலைக்கும் தமிழர் நிலைக்கும் கட்டாயம் தேவை என்பது என் ஆழ்ந்த எண்ணம். விருப்பு வெறுப்பற்ற நடுவுநிலைப் பார்வை, படைப்பார்க்கு மட்டுமன்றிப் படிப்பார்க்கும் கட்டாயம் வேண்டும்! தாம் கொண்டிருந்த கருத்துகளுக்கு மாறுபட்டும்

வேறுபட்டும் செல்பவை உண்டு என்றால் பல்லாற்றானும் மெய்ம்மம் காணமுயல வேண்டுமேயன்றி ஒரு முடிவுக்கு வந்து விடலாகாது; புகையுண்டும், அழுக்குண்டும், புதையுண்டும் கிடக்கும் கருத்துகள், பார்த்த பார்வையில் பளிச்செனப் புலப்பட்டு விடா! வண்டி சென்ற தடம் தெரியும்! ஆனால், வண்டு சென்ற தடம் தெரியவில்லையே! அதனால் தடம் இல்லை எனலாமா?

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

இரா. இளங்குமரன்

# 1. ஆய்வின் அடிமணை

ஒருவரைப் பற்றிய ஆய்வுக்கு அவர் வரலாறு அடிமணை. அவ்வரலாறும் அவராலேயே எழுதப்பட்டிருப்பின் அது ஒப்பிலா ஆவணமாகக் கொள்ளத்தக்கதாம். அவ்வகையில் பாவாணர் வரைந்த தம் வரலாறு நான்கு. நான்கும் சுருங்கியவையே. அவற்றுள் ஒன்று வரலாற்று ஆவணம்.

வாழும் புலவர்கள் வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுக்கும் முயற்சியை 1970இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியர் தாமரைச் செல்வர் **வ. சுப்பையா பிள்ளை** மேற்கொண்டார். அதற்குப் பாவாணர் எழுதிய **'என் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்'** என்பது வருமாறு:

> **தேவநேயன், தோக்கசு** (Stokes) என்னும் துரைமகனாரால் எடுத்து வளர்க்கப் பெற்ற **தோக்கசு ஞானமுத்தனார்** என்னும் கணக்காயனார்க்கும், அவருடைய இரண்டாம் மனைவியராகிய **பரிபூரணம்** என்னும் கணக்காய்ச்சியார்க்கும் 1902 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் பக்கல் வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு, பத்தாம் பிள்ளையாகவும், நான்காம் மகனாகவும் பிறந்ததாக நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த **சங்கர நயினார் கோயிலில்** பதிவு செய்யப் பட்டுள்ளது.
>
> ஐயாட்டைப் பருவத்திலேயே என் தந்தையாரை இழந்து விட்டமையால் வடார்க்காடு மாவட்டம் **ஆம்பூரி**லிருந்த எமக்கையாரிடம் சென்று அங்குள்ள மிசௌரி நல்லஞ்சல் உலுத்தரின் விடையூழிய (M.E.L.M.) நடுநிலைப் பள்ளியிற் கல்வி முடித்தபின் முகவை மாவட்டச் சோழபுரத்தையடுத்த சீயோன் மலையில் விடையூழியராயிருந்த **யங் (Young) துரை மகனாரின் கடனுதவி பெற்று,** பாளையங் கோட்டைத் **திருச்சவை விடையூழியக் கழக** (C.M.S.) உயர்நிலைப் பள்ளியில் மூவாண்டு பயின்று வழிநிலைக் கல்வி முடித்து, மேற்படி **சீயோன் மலையில்** உள்ள நடுநிலைப் பள்ளியில் முதற்படிவ ஆசிரியராக அமர்ந்து ஈராண்டு பணியாற்றினேன். அதன்பின், யான் முன்பு மாணவராயிருந்த **ஆம்பூர்** சென்று அங்கிருந்த கிறித்துவப் பள்ளி உயர்பள்ளியான பின் அதில் 1922ஆம் ஆண்டு உதவித் தமிழாசிரியராக அமர்த்தப் பட்டேன். 1924-இல் **மதுரைத் தமிழ்ச் சங்க** பண்டிதத் தேர்வெழுதித்தேறிய பின்னர்

சென்னைத் திருவல்லிக்கேணிக் கெல்லற்று உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டு உதவித்தமிழாசிரியராகவும் சென்னைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் மூவாண்டு தமிழாசிரியராகவும், மன்னார்குடி பின்லேக் (Findlay) கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஆறாண்டும், திருச்சிப்புத்தூர் ஈபர் மேற்காணியார் (Bishop Heber) உயர்நிலைப் பள்ளியில் ஒன்பானாண்டும், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டும், தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றிய பின், தமிழ்ப் பற்றே வடிவெடுத்தாற் போன்றவரும், தமிழ்ப் பண்பாட்டில் தலை சிறந்தவரும், என் மொழி நூலாராய்ச்சி முற்றுவதற்கு ஒரு பெருந் துணையாய் இருந்தவரும் ஒப்பற்ற முதல்வருமான காலஞ் சென்ற பேரா. அ. இராமசாமிக் கவுண்டரின் பேரன்பினால் சேலங் கல்லூரியில், தமிழ்த்துறைத் தலைவனாக 1944ஆம் ஆண்டு அமர்த்தப் பெற்றேன்.

அங்குப் பன்னீராண்டு பணியாற்றிப் பேராசிரியனான பின் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழிநூல் துறை வாசகனாக (Reader) அமர்த்தப் பெற்று.... செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பு தடுக்கப்பட்டு 1961ஆம் ஆண்டு என் பணியும் இழந்தேன்.

அதன்பின் தமிழன்பர் பலர் தண்டித் தந்த பொருளுதவி கொண்டு இசைத் தமிழ்க் கலம்பகம், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், தமிழ் வரலாறு, வடமொழி வரலாறு, இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?, வண்ணனை மொழி நூலின் வழுவியல், திருக்குறள் தமிழ் மரபுரை என்னும் தமிழ் நூல்களும் **The Primary Classical Language of World, The Language Problem of Tamil Nad and its Losical Solution** என்னும் ஆங்கில நூல்களையும் வெளியிட்டேன்

என்று வரையும் பாவாணர்,

இறைவன் அருளால் நான் தமிழ்நாட்டு அரசால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக (Director) 1500 உருபாச் சம்பளத்தில் நாலாண்டிற்கு அமர்த்தப்பட்டுள்ளேன். நேற்றே வேலை ஒப்புக் கொண்டேன்

என்று 9.5.1974இல் எழுதிய அஞ்சலில் குறித்துள்ளார். 16.1.1981இல் பேரா. இயற்கை எய்துகின்றார்.

**சார்பு நிலை**

இவ்வரலாற்றுச் சுருக்கத்தில், பாவாணர் தம் மனைவி, மக்கள், வாழ்வியல் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை எனினும் அவர் தம் கல்விக்கு உதவியவர்கள், பணிவாய்ப்பளித்த நிறுவனங்கள் என்பவற்றை மேலோட்டமாக நோக்கினாலும் அவர்தம் **'கிறித்தவச் சார்பு'** புலப்படும்! ஆனால், **அச்சார்பு தம்மளவில் நின்றதா? பிறரளவில் சென்றதா?** என்பதை மேலே விரிவாக அறிய வாய்க்கின்றது.

# 2. பாவாணர் கடவுள் நம்பிக்கை

முன்னே கொண்டவாறு கிறித்தவச் சார்பு பாவாணர்க்குப் பெரிதும் இருந்தும் **தெய்வம், இறைவன், கடவுள்** என்னும் பொதுமைச் சுட்டையே தம் கடிதங்களிலும் வாழ்த்துகளிலும் கொள்கிறார்.

## கடவுட் பொதுமை

> *கொடுமுடி போய் அங்கு இரு வாரம் இருந்து இந்த மாதம் என் மனைவியுடனும் குழமகனுடனும் **கடவுள் அருளால்** இங்கு (மன்னார்குடி) சுகமாய் வந்து சேர்ந்தேன் (7.1.1932; வ.சு.)*

> *என் மகன் சென்ற இரண்டு வாரமாய் வயிற்றளைச்சலால் பெரும்பாடுபட்டுப் போனான். இன்று **தெய்வத் திருவருளால்** சுகமாயினும் பணமுடை பெரிதாய் விட்டது (17.1.33; வ.சு.)*

இவை குடும்பம் பற்றியவை.

1941இல் திருச்சித் தமிழ்ப் புலவர் கழகம் என ஒன்று பாவாணரால் நிறுவப்படுகிறது. அவ்விழாவில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களுள் ஒன்று (16).

> ***தமிழர் இனி எப்போதும் கடவுள் வணக்கம்** முதலான எல்லாத் துறைகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும் என்றும், பிற மொழிகளில் எந்தச் சடங்கும் செய்யலாகாது என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.*

என்பது (21.12.41). பாவாணர் தாம் ஆழமாக எண்ணி எழுதும் நூல்களை,

> *"இனிமேல் வருகின்றவை **இறைவன்** வெளிப்படுத்திய உண்மைகள் ஒத்தவை"*

என்கிறார் (12.1.49; வ.சு.).

> *வடமொழி வரலாறும் தலைநாகரிகமும் புகழ் வேண்டி எழுதுபவை அல்ல. தமிழை வடமொழி யினின்று மீட்டற்கு எழுதுபவை. இத்துணைக் காலமும் (20 ஆண்டுகளாக) இதே நோக்குடன் கற்றும் ஆராய்ந்தும்*

> இருக்கிறேன். இதற்கென்றே **கடவுள்** என்னை ஏற்படுத்தியிருக்கிறார் என்பது எனது உணர்ச்சி. அந்த இருநூல்களும் கண்டால்தான் தங்கட்கு இவ்வுண்மை விளங்கும்

என்று தம் நூல்களைப் பற்றி எழுதுகிறார் பாவாணர் (6.4.49; வ.சு.). முதல் தாய்மொழி என்னும் தம்நூல் முப்பதாண்டு ஆராய்ச்சியின் விளைவு என்றும், அதனால்தான் எதிர்காலத் தமிழுக்கு ஆக்கம் உண்டாகும் என்றும் கூறும் பாவாணர்

> இனிமேல் எந்நாட்டிலும் எழுதப்படும் மொழிநூலுக்கும் இதுவே அளவையும் அடிப்படையுமாகும். இது **இறைவனால் வெளிப்படுத்தப்பட்டது.**

என்கிறார் (26.5.52; வ.சு.). பாவாணர்க்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வாசகர் பணி கிட்டுகின்றது.

> எனக்கு **இறையருளால்** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழியாராய்ச்சித் துறை வாசகர் (Reader) பதவி கிடைத்துள்ளது. அடுத்த வாரம் அங்குச் செல்கின்றேன்

என்கிறார் (4.7.56; வ.சு.). பாவாணரின் கண்ணறுவைக்கு நன்கொடை ஓரன்பர் வழங்குகிறார். அதனை,

> திரு எசு.கே. வேலாயுதம் ஆசிரியர் நன்கொடை உரூபா 422 வந்து சேர்ந்தது. இது, **இறைவன் திருவருள்** என்றே கருதுகின்றேன்

என்கிறார் (13.12.66; மி.மு.சி). ஒரு துயரச் செய்தி பாவாணரை எய்துகிறது.

> இன்று வந்த தங்கள் திருமுகச் செய்தி மிகத் துயரந் தருவதே. **இறைவனை ஊக்கமாய் வேண்டுக.** வெற்றி கிட்டும். இது என்பட்டறிவு.

என்கிறார் (நா.செ.நளி 1. 1997 (1966)). பாவாணர் இயற்றிய திருக்குறள் **தமிழ் மரபுரை**, பறம்புக்குடி உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட இருந்தது. அதனைப் பாராட்டக் கடவுள் நம்பிக்கை இல்லாத ஒருவர் பெயர் கருதப்பட்டது. அப்பொழுது பாவாணர்,

> என் தி.த.ம. உரை பாராட்டுவோர் **கடவுள் நம்பிக்கையராகவும் இருத்தல் வேண்டும்**

என்றார் (20.12.1969; த.கு.). பாவாணர் தம் கல்வி தெளிவு ஆய்வு என்பவை தொண்டொடு கைகோத்து வீறு பெற்று விளக்கமுறும் நிலைகள் உண்டு. அவற்றுள் ஒன்று:

> நான் ஒருவன் இன்றேல் எதிர்காலத்தில் தமிழ் இருக்குமென்று கருதுகிறீர்களா? நான் தமிழுக்காகப் பட்டபாட்டை **இறைவன் தான்** அறிவான். என் பணிக்கு **இறைவன் துணையுண்டென்னும் நம்பிக்கையினாலேயே இன்னும் இதில் ஊன்றி நிற்கின்றேன்.**

என்று வரைகின்றார் (20.8.70; வ.சு.). மேலுமொரு வீறு:

> மறைமலையடிகளும் யானும் ஒரு தனி வகையரேம். எம் வாழ்வைத் தமிழ் வாழ்வொடு ஒன்றுவித்துக் கொண்டேம். தமிழை வடமொழியினின்று மீட்கவே **இறைவனாற் படைக்கப்பட்டேம்.** தமிழ் - ஆரியப் போராட்டத்திற்கு ஆங்கில அறிஞர் ஒருவரும், பிராமணர் ஒருவரும், சிவநெறியார் ஒருவருமாக மூவர் எனக்குமுன் தோன்றினர். மேலையர்க் கறிவிக்க நான் ஏற்பட்டுள்ளேன்.

என்கிறார் (4.11.71; கா.இ.). கடவுள் மறுப்பாளரை **நாத்திகர்** என்றனர். ஆனால் பாவாணர் கடவுள் மறுப்பாளரும் ஒரு மதத்தவரே என உலகளாவிய பார்வை வழியாகக் கண்டார். அதனால், அவரை **'நம்பா மதத்தர்'** என்றார். இதனை ஒரு கடிதத்தில்,

> கடவுள் இல்லை என்பதும் ஒரு மதம் என்று தமிழர் மதம் 5 ஆம் இயலில் காட்டப்பட்டுள்ளது. ஆதலால், **கடவுளை நம்புவாரை** மதவெறியர் என்று எவரும் குறை கூற இடமில்லை. நம்பா மதத்தாரே இன்று மத வெறியராய்த் தம் மதத்தை எங்கும் பரப்ப முனைகின்றனர்.

என்கிறார் (5.8.72; கா.இ.).

பாவாணர்க்குச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநர் பதவி, தமிழ்நாட்டு அரசால் வழங்கப்பட்டது. நெடுநாள் வேண்டலும் தூண்டலுமாக இருந்த அது வாய்க்கப்பெற்றமை கண்ட பாவாணர்,

> **இறைவனருளால்** நான் தமிழ்நாட்டு அரசால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக (Director) 1500 உரூபாச் சம்பளத்தில் நாலாண்டிற்கு அமர்த்தப்பட்டுள்ளேன். நேற்றே வேலை ஒப்புக் கொண்டேன். இடம் இன்னும் ஒதுக்கவில்லை. ஆதலால் ஒதுக்கும் வரை மறைமலையடிகள் நூல் நிலைய மேல் மாடியிலேயே தங்கிப் பணி செய்வேன்.

என எழுதினார் (9.5.74; க.பொ.).

அகரமுதலிப் பணியில் ஊன்றியிருந்த பாவாணர் அயலிடம் சென்று பொழிவு செய்தலையும் தவிர்த்தார். அதனால்,

> இறைவன் என்னையே இறுதித் தொண்டனாக அமர்த்தியிருப்பதால் இனிமேல் அகரமுதலிப் பணியிலும் தமிழ்ப் போராட்டத்திலுமே ஆழ்ந்து ஈடுபடவொண்ணும்.

என எழுதுகிறார் (5.7.79; கு.பூ.).

தம் பிறப்பும் தம் செயற்பாடும் **இறையருளால்** நிகழ்வனவே எனக் கொண்ட பாவாணர்,

> திருவள்ளுவர் பிராமணர் ஏமாற்றத்தை வெளிப் படுத்தித் தமிழ நாகரிக உயர்வை நாட்டினார். **மறைமலையடிகள்** தமிழ் தனிமொழியென்று காட்டினார். **பெரியார்** கல்லாத் தமிழரிடைத் தன்மான உணர்ச்சி ஊட்டினார். **நான்** தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்று நாட்டிப் பிராமணியப் பேயைத் தமிழ் நாட்டினின்று ஓட்டுவேன். இதற்கு **இறைவனே** என்னைத் தோற்றுவித்திருக்கிறான். இது என் செயலன்று. **இறைவன் செயலே.**

என வரைகிறார். மேலும்,

> நான் எல்லா வகையிலும் மிக எளியவன். **இறைவன்** திருவருள் இன்றித் தமிழ் வேர்ச்சொல் காணும் திறமையை நான் பெற்றிருக்கவே முடியாது. ஆதலால், என் தொண்டின் பெருமை எல்லாம் **இறைவனையே சாரும்**

என்றும் எழுதுகிறார் (அ.வா.வெ.செ., 2.5.80.).

பாவாணர் இளந்தைப் பருவமுதலே இசைப்பற்றும், இசைப் பயிற்சியும், இசைப்பா இயற்றும் ஆற்றலும், கருவி கொண்டு பாடுதலும் கைவரப் பெற்றவர். கிறித்தவக் கீர்த்தனம், இசைத் தமிழ்க் கலம்பகம் இசையரங்கின்னிசைக் கோவை என்பனவெல்லாம் இயற்றினர். அவ்விசைத் தமிழ்த் திறத்திலேயே அமைந்துவிட்டார் அல்லர். **இசைப்பித்தனாக இருந்த என்னை இறைவன் மாற்றினான்** என்கிறார். இதனால் தம் மொழி யாய்வுக்குத் தூண்டலாக இருந்தவன் **இறைவனே** என்கிறார்.

பாவாணர்க்கு அணுக்கமாக இருந்தவர், அவர்க்குத் தொண்டும் உதவியும் புரிவதில் ஆர்வமிக்கோராக இருந்தவர், அவ்வப்போது தங்கள் இல்லத்து மங்கல நிகழ்வுகளின் அழைப்பிதழ்களை விடுத்தனர். அவற்றுக்குப் பாவாணர் விடுக்கும் வாழ்த்துகளில் **இறைப்பொதுமை** விளங்கியமைந்தன. அவர்தம் நம்பிக்கைச் சான்றும் ஆயின.

தமிழர் திருமணம் எனப் பாவாணர் இயற்றிய நூலில் திருமண **இறைவணக்கம்** பாடுகிறார் பாவாணர்.

துங்க நல்லறத் துணையை நாடியே
இங்க மர்ந்துள இம்மண மக்களை
மங்க லம்மிகு மணவினைப் படுத்தவே
எங்கும் தங்கிய இறையடி பணிகுவாம்

என்பது அது. பாவாணர்க்கு அன்பராகவும் தனித்தமிழ் அரிமாவாகவும் திகழ்ந்த மி.மு. சின்னாண்டார் அன்னையார் உடல் நலம் குன்றியிருந்த செய்தியறிந்த பாவாணர்,

தாயும் தந்தையும் தானெனும் தம்பிரான்
சேயைக் காத்தருள் சீரென இன்னினே
தாயும் நோயறத் தண்ணருள் பொழிகென
ஆயி ரம்மவன் அடியிணை வீழ்ந்தனம்

எனப் பாடுகிறார்.

இறையருள் பாங்கா யில்லறம் புகூஉம்

எனவும் (15.1.1976).

எங்கணும் தங்கும் இறைவன் திருவருளால்

எனவும் வாழ்த்துகிறார் (13.8.1980). பாவாணர் தம் இசைத்தமிழ்க் கலம்பகத்தில்,

குமரி நிலத்தெழுந்த கோமொழி யேனும்
தமிழர் அடிமைத் தனத்தால் - சிமிழ்த்திருக்கும்
சூரிய ஞாட்பின் அருந்தமிழை மீட்கவொரு
சீரிய மீட்பன் துணை

என்று கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். அதன் பாயிரத்தில், "முந்திய இறைவனும் முழுதுற அருளவே" எனப் பாடியுள்ளார். தமிழர் மதம் என்னும் நூலில்,

எண்ணிற்கும் எட்டா இடங்காலத் தேங்காவி
கண்ணிற்கோ எட்டும் கனப்பொருளாம் – வண்ணிக்கக்
கூடாமல் அன்றோ குறித்தார் கடவுளென
நாடாமல் உண்டென நம்பு

என்று கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். கடவுள் என்னும் சொல் விளக்கம் புலப்பட அமைக்கப்பட்ட பாடல் இது.

இறைவன், கடவுள், தெய்வம் எனப்பொதுமை மணங் கமழப் பாடிய பாவாணர், தம் நூல்களில் உவமையாகவும், பொன்மொழி போலவும் வழங்கியவை பலவாம்.

நாள் கோள்களின் இயக்கத்தால் மழையும் மழையின்மையும்
போல நன்மை தீமை விளைவது உண்மையாயினும்,

> அவ்விளைவை அவ்வியக்கத்திற்குக் காரணமான **எல்லாம் வல்ல இறைவன்** ஏற்பாடாகக் கொள்வதல்லது ஞாலம் போல் உயிரற்ற அஃறிணையிடப் பொருள்களாய நாள் கோள்களின் செயலாகக் கொள்வது எங்ஙனம் பொருந்தும்.

என்று தமிழர் திருமணத்தில் வரைந்துள்ளார் (பக். 53).

> ஒருவன் காலையில் எழுந்தவுடனும், பின்னர் உண்ணுமுன்னும், ஓரிடத்திற்குப் புறப்படுமுன்னும், ஒரு வினையைத் தொடங்கு முன்னும், ஒரு நன்மை கிட்டிய போதும், தீங்கு நேர்ந்த போதும், உறங்கப் புகுமுன்னும் **இறைவனை ஒரு நிமையம் எண்ணினாலும் இறைவழிபாடு செய்ததாகும்.** இங்ஙனம் மனநிலையிலேயே இருக்கக்கூடிய மதத்தை எவரும் அழிக்க முடியாது

என்று **மண்ணில் விண்** என்னும் நூலில் எழுதுகிறார் (பக். 46).

> சில துறவியர் வரையிறந்து பெண்ணை வெறுத்துப் பெண் இன்பத்தைப் பழித்திருப்பர். அது துறவியர்க்கே கூறிய தென்று இல்லறத்தார் பொருட்படுத்தாது விட்டு விடல் வேண்டும். விலைமகள் உறவையும் நெறி திறம்பிய காம நுகர்ச்சியையும் பழிக்கலாமேயன்றி, பெண்ணின்பம் தன்னையே பழித்தல் கூடாது. அங்ஙனம் பழிப்பவர். **இறைவன் ஏற்பாட்டையும் தம் பெற்றோர் வாழ்க்கையையும் பழிப்பவரே ஆவர்**

எனத் **தமிழர் திருமணத்தில்** (பக். 2) வரைகிறார்.

> **இறைவனுக்கு ஏற்றது** எங்கும் என்றும் உருவமின்றி நேரடியாய்ச் செய்யும் தாய்மொழி வழிபாடே

எனத் தமிழர் மதத்தில் விளக்குகிறார் (பக். 193).

> உலகில் எத்துணை நாகரிகப் பண்பாட்டு நாடாயினும் இரவில் நகர விளக்கு அரைமணி நேரம் எரியாது போயினும், ஐந்து நிமையம் அரசன் அதிகாரம் இல்லாது போயினும் காட்டு விலங்கினும் கேடாக நாட்டு மக்கள் நடந்து கொள்கின்றனர். அங்ஙனமிருக்க, உயிரற்ற பன்னிரு கோள்களும் பற்பல நாண்மீன்களும் இடைவிடாது பெருவெளியில் ஒழுங்காய் இயங்கி வருவது இயக்குவான் ஒருவன் இன்றி இயலுமா? **கடவுள் உண்மையைக் காட்ட இதுபோல் வேறு சான்றுகள் எத்துணையோ இருப்பினும் இஃதொன்றே போதுமாம்**

என்கிறார் (தமிழ் இலக்கிய வரலாறு, பக். 318).

> கடவுள் உண்மையை எல்லாரும் நம்புமாறு நாட்டற்குப் போதிய சான்றுகள் இல்லை எனின், அதை மறுத்தற்கும் போதிய சான்றுகள் இல்லை என்பதை உணர்தல் வேண்டும்

என்கிறார் (மண்ணில் விண். 47).

> காணப்பட்ட பொருள்களைப் பற்றியே கருத்து வேறுபாடு இருக்கும்போது காணப்படாத கடவுளையும் மறுமையையும் பற்றிக் கருத்து வேறுபாட்டிற்கு மிகுந்த இடமிருப்பதால் கடவுளை நம்புகிறவரும் நம்பாதவரும் ஒருவரை ஒருவர் குறை கூறாதும் வெறுக்காதும் உயர்திணைக்குரிய உடன்பிறப்புப் பண்பு பூண்டு ஒழுகல் வேண்டும்.

என்று கூறுகிறார் (தமிழர் மதம். 192).

> ஓர் ஆடவனும் ஒரு பெண்டும் கணவனும் மனைவி யுமாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேர்வதே மணமாம். மணத்தல் கலத்தல் அல்லது கூடுதல். மணவாழ்க்கைக் கென்றே இறைவன் மக்களை ஆணும் பெண்ணுமாய்ப் படைத்திருப்பதாலும், அதனிடத்து மிகுந்த அறப்பொறுப்பு இருப்பதாலும் அது ஆயிரங்காலத்துப் பயிர் ஆகையாலும் வாழ்க்கைத் துணைவர் இருவரும் தெய்வத்தின் முன் அல்லது தெய்வத்தின் பேரில் பலரறிய ஆணையிட்டுக் கூடுதலாலும், மணம் தெய்வத் தன்மை பெற்றுத் திருமணம் எனப் பெற்றது.

என்பது தமிழர் திருமண முன்னுரை.

> மதம் என்பது இம்மை மறுமை கடவுள் என்னும் மூன்றையும் பற்றி ஒருவன் மதித்துக் கொள்ளும் கருத்தேயன்றி வேறன்று

என்று மதத்தைப் பற்றியும் (மண்ணில் விண். 46)

> கனவு காணாது உறங்கும் நேரம் தவிர, மற்றெல்லா நேரத்திலும் இருப்பினும் நடப்பினும் வேலை செய்யினும் உரையாடினும் உண்ணினும் இறைவனை நினைக்கவும் வழுத்தவும் வேண்டவும் இயலுமாதலின் மனம் உள்ளவரை மதத்தை ஒருவராலும் அழிக்க முடியாது

என, மதம் அழிபடாமை பற்றியும் (தமிழர் மதம், 191)

> ஒரு நாட்டில் அல்லது ஊரில் கொலை களவு கொள்ளை கற்பழிப்பு முதலியன பெரும்பாலும் இல்லாதிருப்பதற்கு அரசன் அல்லது அரசு தண்டிக்கும் என்னும்

> அச்சமேயன்றி வேறொன்றும் கரணியமன்று. அங்ஙனமே பலர் தீயொழுக்கத்தை விட்டு நல்லொழுக்கத்தை மேற்கொண்டிருத்தற்கும் மறுமையில் **இறைவன்** எரிநரகில் இட்டுத் தண்டிப்பான் என்னும் அச்சமே கரணியமாகும். பண்பாடின்றி மக்கள் முன்னேற முடியாது. ஆதலால் **மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படையேயாகும்,**

என்று மதத்தின் மதிப்பையும் (**மண்ணில் விண்.** 45).

> கூட்டு வழிபாடும் ஓய்வு நாளில் அல்லது நேரத்தில் பொதுவிடத்தில் அல்லது ஒருவர் இல்லத்தில் பலர் கூடிச் செய்யலாம். இங்ஙனம் எளிய முறையில் **அரசிற்கு எவ்வகை இடர்ப்பாடும் விளைக்காது இயங்கக் கூடியது மதம்**

என மத இயக்கத்தையும் (மண்ணில் விண். 46).

> மதச் சார்பாக எவர் தடை நிகழ்த்தினும் அரசு ஒப்புக் கொள்ளுதல் கூடாது. வேண்டியவற்றை மட்டும் வைத்துக் கொண்டு வேண்டாதவற்றை விலக்கிவிடுகிறான். வேண்டிய வற்றையும் தன் தேவைப்படி வெவ்வேறளவில் வைத்திருக்கிறான். தலைமுடி பெண்டிர்க்குப் போல் ஆடவர்க்கும் நீண்டு வளர்வது இயற்கையே. **இறைவன் ஏற்பாடே.** ஆயினும் ஆடவன் தன் தலைமுடியை விரும்பியவாறெல்லாம் மட்டுப்படுத்திக் கொள்கிறான். இனி, தாடியும் மீசையும் ஒக்க வளரினும் முன்னதை நீக்கிவிட்டுப் பின்னதைப் பேணுகிறான். இச்செயல்கள் **இறைவன் ஏற்பாட்டிற்கு எதிர்ப்பாகா.** இங்ஙனமே மண்ணுலகில் படி நிகர்க்கும் அரசு, காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு மக்கட் தொகையை மட்டுப்படுத்துவதும் உண்மையான மதத்திற்கு மாறாகாது

என **மலடாக்கமும் இறைமைக்கு மாறன்று** என்றும் (**மண்ணில் விண்.** 67) கூறுகிறார்.

இனித் தமிழில் வழிபாடு செய்தலை,

> முருகன் வழிபாடு, சிவன் வழிபாடு, திருமால் வழிபாடு, அம்மன் வழிபாடு ஆகிய நால்வகை வழிபாட்டு முறை களையும் அவற்றிற்குரிய போற்றி (அர்ச்சனை)களையும் தனித்தமிழில் தொகுத்து ஓதுவாரைக் கொண்டு திருக்கோவில் வழிபாடு நடத்துவித்தல் வேண்டும்

என்கிறார் (**தமிழ் இலக்கிய வரலாறு**, 311).

**வழிபாட்டு ஒழுங்கினை வரிசைப்படுத்துகிறார் பாவாணர்**

1. கோவில் வழிபாடு தமிழிலேயே நடைபெறல்
2. அவ்வம் மத நம்பிக்கையும் தெய்வப் பத்தியும் கல்வித் தகுதியும் பணிப்பயிற்சியும், தூயவொழுக்கமும் உள்ள பலவகுப்பாரும் பூசகராக அமர்த்தப் பெறல்
3. பூசகர் பதவியிலும் கைஉடஞர் (Trustees) பதவியிலும் தொடர் மரபு (Hereditariness) நீக்கப்படல்
4. அறிஞரும் ஆராய்ச்சியாளரும் அறிக்கையாளரும் உயர் பதவியாளரும் பெருமக்களும் அரசரும் திருவுண்ணாழிகை அல்லாத கோவிலகத்துட் புகவுச் சீட்டுப் பெற்றுப் புகவிடல்.
5. பெருங்கோவில்களின் வருமானத்தில் ஒரு பகுதியைப் பொது நலப்பணிக்குச் செலவிடல்.
6. அறநிலையப் பாதுகாப்புத் துறையமைச்சர் கடவுள் நம்பிக்கை உடையவராய் இருத்தல்.
7. உருவிலா வழிபாட்டைப் படிப்படியாய்ப் பொது மக்களிடைப் புகுத்தல்.

என்கிறார் (தமிழர் மதம், 194-195). வாழ்நாள் நீட்டிப்புக்கு வகுத்துக் கூறும் பாவாணர்,

> திருவருள், பெற்றோர் உடற்கட்டு, நல்லுணவு, உடற்பயிற்சி, அகமலர்ச்சி, கவலையின்மை, சினமின்மை, நல்லொழுக்கம், அறிவுடைமை, வரம்பு கடவாமை முதலியவற்றாலேயே மக்கள் வாழ்நாள் நீடிக்கும் என்பதை அறிதல் வேண்டும்

என்கிறார் (**தமிழர் திருமணம்**: 55). அவர் கூறும் பதின்மையுள் முதன்மை, **'திருவருள்'** என்றே சுட்டுகிறார்.

> சிவநெறியான் தன்னைச் சிவனியன் என்றும், திருமால் நெறியான் தன்னை மாலியன் என்றுமே குறித்தல் வேண்டும். இரு நெறிக்கும் பொதுமை குறிக்க விரும்பின் தென்மதத்தான் அல்லது தமிழ் மதத்தான் என்று குறித்தல் வேண்டும்

என்றும் **தமிழர் மதத்தை** வரையறைப்படுத்துகிறார் (**தமிழர் மதம்**: 144).

இவற்றால், பாவாணர் கொண்டிருந்த அழுத்தமிக்க **கடவுள் நம்பிக்கை** வெளிப்படப் புலப்படும்.

# 3. பாவாணர் சமயச் சார்பு

பாவாணர்க்கு அமைந்த சமயச் சார்பு கிறித்தவமாம் அவர்தம் தந்தையார் ஞானமுத்தனார் கிறித்தவராகிறார். பாவாணர்க்குக் கிறித்தவ அமைப்புகளே, அவரைப் பின்னாளில் மொழிஞாயிறு என விளங்குதற்கு அடித்தளமாக அமைந்த கல்வியை, உண்டி, உடை, உறையுள், உதவி ஆகியவை வழங்கித் தவக்கொடை புரிகின்றன. அதற்கு மேலே அவர் வளர்ச்சிக்கு வேண்டும் பணி வாய்ப்பு வகையிலும் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன.

பாவாணர் கிறித்தவச் சார்பிலேயே மணம்கொண்டு, மக்களைப் பெற்று, அவர்களையும் அச்சமயச் சார்பினராகவும், சமயத் தொண்டராகவும் ஆக்கி வைத்துக் கடப்பாடு ஆற்றுகிறார். தேவநேசன் என்னும் பெயரொடும் இருந்த அவர் பாவன்மை அறிந்த தமிழாசிரியர், பண்டிதர் 'மாசிலாமணி', தேவநேசக் கவிவாணர் எனச் சான்று வழங்குகிறார். அவர், பாளையங் கோட்டையில் உள்ள சி.எம்.எசு. பள்ளித் தமிழாசிரியர் ஆதலால் அவர் பாவாணர்க்கு முதற் புலமைச் சான்று வழங்கியவரும் கிறித்தவப் பெருமகனாரே. பாவாணர்க்கு முன் தோன்றல்களாக மொழியாய்வில் வழிகாட்டியாக இருந்தவருள் முதன்மையானவர் 'கால்டுவெல்' என்னும் கிறித்தவத் தோன்றலே!

இவ்வாறெல்லாம் பிரிவறியாச் சமயச் சார்பில் விளங்கியவர் பாவாணர். அவரோடு, அவர் இளைய மகனார் தே. மணி இறுதி நாள் வரை அணுக்கமாக இருந்தவர். அவர் எழுதிய **பாவாணர் நினைவலைகள்** என்னும் நூலில் **பாவாணர் இயல்புகள்** என்னும் பகுதியில் பாவாணரின் தனிப்பட்ட வாழ்க்கை எனப் பாவாணர் கொண்டிருந்த கிறித்தவச் சார்புகளை வரைகின்றார்.

> மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் பொது நோக்குக் கொண்டவராகவும் இனமத வேறுபாடு இன்றித் தம் தாய்மொழியாகிய தமிழுக்காகவே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவராகவும் வாழ்ந்த போதிலும், தமது **தனிப்பட்ட வாழ்க்கையில் கிறித்துவ சமயத்தைப் பின்பற்றியே வாழ்ந்தார். அதற்கு அவர் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்த நடைமுறைகளும் செயல்களுமே தக்க சான்றுகளாம்**

என்று கூறி, மேலும் வரைகிறார்:

முதலாவதாகப் பாவாணரின் பெற்றோர் கிறித்தவர் களாகவே வாழ்ந்து வந்தமையால் பாவாணரும் கிறித்தவ சமயத்தையே பின்பற்றி வாழ்ந்தார். அவர் முதல் திருமணமும் இரண்டாம் திருமணமும் கிறித்தவக் கோயிலிலேயே (Church) கிறித்தவ சமயமுறைப்படியே நடந்தன. அவரும் தமது இளமைப் பருவத்திலேயே சிலை (மார்கழி)த் திங்கள் விடியற்காலை, கிறித்தவ சமயப் பற்றாளர்களுடன் இணைந்து கிறித்தவ சமயப் பாடல்களைப் பாடிக் கொண்டு சென்றிருக்கிறார்.

எங்கள் குடும்பத்தில் எல்லோரும் ஒன்றாக இருந்த காலத்தில் ஒவ்வொரு நாளும் இரவில் படுக்கைக்குப் போகுமுன் **மன்றாட்டு** (prayer) நடைபெறும். அதை எங்கள் தந்தையார் பாவாணரே நடத்துவார். கிறித்துவப் பாடல்கள் பாடி மன்றாட்டுச் செய்வது வழக்கம் **கிறித்தவக் கீர்த்தனம்** என்னும் கிறித்தவச் சமயப் பாடல் நூலொன்றையும் எழுதி வெளியிட்டுள்ளார் பாவாணர். எங்கள் தாயார் (திருவாட்டி நேசமணி அம்மையார்) நல்லடக்கமும் காட்டுப்பாடியில் கிறித்தவ முறையிலேயே நடைபெற்றது.

பாவாணர் தம் பிள்ளைகள் திருமணங்களைக் கிறித்தவக் கோயிலில் கிறித்தவ முறைப்படியே நடைபெற ஏற்பாடு செய்தார்.

பாவாணர் தமது ஆராய்ச்சிப் பணியில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்ததால் ஒவ்வொரு ஞாயிறும் கோயிலுக்குச் செல்லா விட்டாலும் பண்டிகை நாட்களில் தவறாமல் சென்று வருவார். அவர் தமது வாழ்நாள் முழுவதும் கலைஞர் கருணாநிதி நகர் உட்படக் குடியிருந்த அனைத்து ஊர்களிலும் கிறித்தவக் கோயிலில் **உறுப்பினராகச் சேர்ந்திருந்தார். அதன் விளைவாகவே அவர் இறுதிச்சடங்கும் அசோகு நகர் கிறித்தவக் கோயிலில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. கிறித்தவ முறைப்படியே கல்லறையில் நல்லடக்கமும் செய்யப்பட்டார்.** இதை அனைவரும் அறிவர்.

அவர் தமது இறுதிக் காலத்தில் வாழ்ந்து வந்த இல்லத்திலும் தமது இருக்கைக்கு மேல் **இயேசுக் கிறித்துவின் திருவுருவப் படங்களை** வைத்திருந்ததை அவரைப் பார்க்க வந்தவர் அனைவரும் அறிந்திருப்பர். ஒவ்வொரு நாள் காலையிலும் திருமுறை (Bible) படிப்பதும் அவர் வழக்கம்.

பாவாணர் சென்னையில் குடியிருந்த காலத்தில் நான் காட்டுப்பாடி விரிவில் அச்சகம் நடத்தி வந்ததால்,

> இருகிழமைக்கு ஒரு முறை நான் என் தந்தையாரைக் காண வந்து செல்வதுண்டு. பெரும்பாலும் காரி இரவு வந்து திங்கள் விடியற்காலை புறப்பட்டுச் செல்வேன். அவ்வாறு ஒருமுறை நான் என் தந்தையார் இல்லத்திற்கு வந்து விட்டுப் புறப்படும்போது, தொடர் வண்டிக்குக் குறுகிய காலமே இருந்தமையால், நான் விரைந்து என் பெட்டியைத் தூக்கிக் கொண்டு புறப்பட முற்பட்டேன். அப்போது என் தன்தையார், "பொறு மன்றாட்டுச் செய்யலாம்; பிறகு செல்" என்று கூறினார். மன்றாட்டுச் செய்த பின்னரே என்னை வழியனுப்பி வைத்தார்.
>
> மேலும் பாவாணர் தனித்தமிழ்ப் பெயரை வைத்திருந் தாலும் **கிறித்தவப் பெயரைத்தான்** (தேவநேயன்) தாங்கி வந்தார் என்பது அனைவருக்கும் தெரியும்.
>
> பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த காலத்தில் தேராதூன் (Dehradun) சென்றிருந்த போது அங்குப் பயிற்சிப் பள்ளியில் தமக்கு ஆசிரியராயிருந்த பேரா. கிளிசன் துரையார், ஒரு முறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்து பல்கலைக் கழக விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார். அந்நாட்களில் ஒவ்வொரு ஞாயிறும் துரையாரும் பாவாணரும் பல்கலைக் கழக இயங்கியில் கிறித்தவக் கோயிலுக்குச் சென்று வருவார்கள் நானும் என் தமக்கையாரும் உடன் செல்வோம். எனவே பாவாணர் **தமது சொந்த வாழ்க்கையில் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றியே வந்தார்** என்பது தெளிவு. அதே நேரத்தில் பாவாணர் தமிழ் வளரவும் தமிழினம் செழிக்கவும் தமது வாழ்வை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது

எனத் திரட்டித் தருகிறார் (பக். 153-155).

ஏசுவின் படத்தைப் பாவாணர் விரும்பிப் பெற்றார். அதனை,

> பாரதி புத்தகசாலை உரிமையாளரைக் காணின் எனக்கு வாங்கி வைப்பதாகச் சொன்ன ஏசுவின் படத்தை நினைவூட்டுக

என மதுரை **வி.அ. கருணைதாசர்க்கு** வரைவதால் அறியலாம் (16.1.1964).

திரு. வ.சு. அவர்களுக்குப் பாவாணர் எழுதிய அஞ்சலில், இனி வருங்கால் கொணர வேண்டியவை எனப் பட்டியலிடும் பாவாணர், ஐந்தாவதாகக் குறித்தது, "**ஒளிப்பட அட்டையில் ஒட்டின ஏசுபடம்**" என்பது (16.7.1974) என்கிறார்.

பாவாணர் இயற்றிய சிறுவர் பாடல் திரட்டு இந்தியக் கிறித்தவ இலக்கியக் கழகத்தின் வழியாக 1924இல் வெளிவந்தது. அதில் முதற்பாடல் கடவுள் வணக்கம். "வாசுதேவனே வந்தாளும் மைந்தனை" என்ற மெட்டில் பாடியது.

1. தேவனே உன்னைத் தேடி வந்தோமே
காவ லாகவே கருணை செய்குவாய்

2. சாமி நாதனே சாற்றினேன் உன்னை
தீமை யாவையும் தீர்ப்பாய் இன்னுமே

3. என்றன் நாடெலாம் இறைவனே உன்னை
என்றும் ஏத்தியே இசைந்து வாழச்செய்

4. அன்னை தந்தைநீ அண்ணன் தம்பிநீ
முன்னும் பின்னும்நீ மூவா மருந்துநீ

5. அழியும் பொருள்களை அகற்றி யுன்னைநாம்
செழிய பொருளெனத் தேடச் செய்குவாய்

6. கலகம் நீங்கியோர் கட்டா யிருக்கவே
உலகம் யாவையும் ஒருமைப் படுத்துவாய்

7. அறிவில் லாமையை அகற்றி எங்கட்கு
அறிவை ஆக்கியே அரவ ணைத்திடாய்

என ஏழு கண்ணிகளைக் கொண்டது. அவ்வணக்கம் அதே மெட்டில் இராச வாழ்த்து இரண்டாம் பாடலாகப் பாடுகிறார். மொத்தம் 29 பாடல்களைக் கொண்டது அந்நூல்.

மாணவர் காலை வேலை என்னும் 28ஆம் பாடலில்,

காலையில் எழுந்திருந்து கடவுளைத் தொழுதிடாய்
சீலச் செயல்களெல்லாம் சீர்பெற முடிந்திடும்

என்கிறார்.

பாவாணர் இயற்றிய கிறித்தவக் கீர்த்தனம் இயற்றப்பட்ட ஆண்டு அறியக் கூடவில்லை என்பதைப் பதிப்புரை கூறுகின்றது (1981). அந்நூல் 1932இல் வெளிவந்தமை பின்னே அறியப்பட்டது.

> "பாவாணர், கிறித்தவக் கீர்த்தனம் என்னும் இந் நூலை என்னிடம் கொடுத்தார். சில பாடல்களையும் பாடிக் காட்டினார். கிறித்து பெருமானிடத்தில் அவருக்கு இருந்த பற்றுமையையும், அவருக்குத் திருப்பணி ஆற்றுவதற்கு இருந்த இளமைக்கால விருப்பத்தையும் எடுத்துக் கூறினார். கிறித்தவர் களும் தூய தமிழைப் போற்ற வேண்டும் என்றும் அதற்கு வாய்ப்பாக நல்ல

தமிழ்மொழியில் பைபிளை மொழியாக்கம் செய்வதற்கு அவர் மேற்கொண்ட முயற்சியில் அவ்வளவு வரவேற்பும் வாய்ப்பும் காணா நிலையில் அவரது மனத்தைத் தமிழ்மொழி இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியதையும் உரைத்தார்.

1969இல் பாவாணரைக் கண்ட நேர்காணல் வழியே பெற்றது இந்நூல்.

அன்புறுபதிகம் என ஒன்றனைப் பாடுகிறார் பாவாணர். அதன் இறுதியடி "அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே" என்பது. பதிகம் முழுவதும் இவ்வீற்றடியே கொண்டுள்ளது.

தேவநேயரவர்கள் இளமைக் காலத்தில் செய்யப்பட்ட பாட்டுகள் இவை. அக்காலத்திலேயே அவருக்குப் பழைய தமிழ் நூல்களில் இருந்த ஈடுபாடு இந்த நூலின் வாயிலாகப் புலனாகின்றது. சான்றாக ஒன்று:

சிலப்பதிகாரத்தில், ஆய்ச்சியர் குரவையில் இடைக்குலப் பெண்கள் திருமாலைப் பாடிப் பரவுகிறார்கள்.

> சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
> கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
> நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே

என்பதைக் குமரற்பரவல் என்னும் தலைப்பில்,

> சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
> கரந்தானைக் காணாத கண்ணென்ன கண்ணே
> நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே

இவ்வாறு பாடுகிற சிறப்பில் இளங்கோவடிகளார் செவியையும் கண்ணையும் நாவையுமே பாடப் பாவாணரவர்கள் கையையும் நெஞ்சையும் சேர்த்து,

> கண்ணியதுங் குவியாத கையென்ன கையே
> எண்ணியெண்ணி உருகாத நெஞ்சென்ன நெஞ்சே

எனப் பாடுகிறார் என்று வியக்கிறார், முகவுரை வரைந்த பேரா-சத்திய சாட்சி அவர்கள்.

> திருச்சபையில் காணப்பட்ட பொருத்தமில்லாத மேலை நாட்டு வாடைகள் பாவாணர் அவர்களை ஓர் ஓரத்தில் துரத்திவிட்டன போலும்! அவரோ மொழியாராய்ச்சி என்னும் கடலில் அரியாசனம் அமைத்துக் கொண்டுவிட்டார்

என்பது சத்திய சாட்சியாகவே (மெய்ச்சான்றாகவே) தெளிவாக்கு கின்றதாம். (பாவாணர் சமயச் சால்பு, முடிநிலை என்பவை காண்க).

"இசைப்பித்தனாக இருந்த என்னை, இறைவன் என்னை அறியாமலே மொழியாராய்ச்சியில் புகுத்திவிட்டான்" என்னும் பாவாணரைத், திருச்சபையின் அயல்நாட்டுவாடையும், பாவாணர் முயற்சிக்குச் செவிசாயாப் புறக்கணிப்பும் தமிழுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தேவநேயரை வழங்கின எனச் சுட்டல் சாலும்.

இவ்வாறு கூறுவதால் தமிழ்மொழி ஆய்வுலகம் பாவாணரை முழுதுறத் தழுவிக் கொண்டது என்று பூரிப்படைவதற்கு வழியில்லை என்பதும், அவர்தம் வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் அறியப்பெறும் செய்தியாகவே உள்ளது. ஆனால் அவர் ஆய்வால் தமிழுலகம் பெற்றபேறு மற்று எவரொருவர் தனியாய்வாளரும் பெற்றதில்லை என்பது மெய்ம்மை.

# 4. சார்பும் சால்பும்

சார்ந்ததன் வண்ணமாதல் என்பதொரு மெய்யியல் கொள்கை. பாலையில் செல்லுங்கால் வெப்பமும் சோலையில் செல்லுங்கால் தட்பமும் போல அமைந்துவிடுதல் சார்பாகும்.

சார்பாலேயே ஆக்கமும் ஆம்; கேடும் ஆம்; ஒழுக்கமே ஆம்; இழுக்கமே ஆம்; சோர்வும் ஆம்; மடியும் ஆம்; அதனால் சிற்றினம் சேராமை என்ற திருக்குறள், பெரியாரைத் துணைக்கோடல் பற்றியும் அழுத்தமாக உரைத்தது.

நல்ல குடிவழியில் பிறந்தவர்களும் சிறந்த கல்வியில் தேர்ந்தவர்களும் அவர்கள் சார்ந்து நிற்பவர்களைப் பொறுத்து அமைதல் நாம் காண்பதே.

> அறநெறியை அறிந்து முதிர்ந்த அறிவுடைய பெரியவரையும், முற்பட உண்டாகிய துயரை நீக்கி மேலே துயர் வராமல் காக்க வல்லாரையும், தவறிச் செல்லும் நிலைகளில் இடித்து அறிவுரை கூறித் திருத்துவாரையும் உறவாகக் கொள்ள வேண்டும்

என்று பெரியாரைத் துணைக்கோடலில் கூறுகிறார் திருவள்ளுவர். அதனை அடுத்தே சிற்றினம்சேராமையை வைக்கிறார். அதற்கு விளக்கம் கூறும் பாவாணர்,

> சிறியோர் கூட்டத்தோடு கூடாமை. சிறியோராவார் கயவரும் ஐங்குற்றவாளியரும் (காமுகரும் கட்குடியரும், கவறாடுவோரும், கரவடரும், கொலைஞரும்), தன்னலக்காரரும் கல்வி நிரம்பாதவரும் உயர்ந்தோர் உண்டு என்பதை இல்லையென மறுப்போருமாவர். சிறியோர் சேர்க்கையால் அறிவும் ஒழுக்கமும் திரிந்து இம்மையும் மறுமையும் கெடுவதால் பெரியார் துணை இல்லாது போகும் என்பதையும், இருப்பினும் பயன் படாது என்பதையும் உணர்த்தற்கு இது பெரியாரைத் துணைக்கோடல் என்பதன் பின்வைக்கப்பட்டது.

என்கிறார்.

மண்ணுக்கு நிறம் உண்டு. விண்ணில் இருந்து வீழும் நீருக்கு நிறம் இல்லை. ஆனால் மண்ணின்மேல் வீழ்ந்தாலும் நீர் மண்ணின் நிறத்தைத் தானும் கொண்டுவிடுகின்றது. இதனைத் திருவள்ளுவர்,

'நிலத்தியல்பால் நீர் திரிதல்' என்பர். இதனைப் போல உயர்ந்த அறிவுடைய மாந்தரும் தாம் சேர்ந்த இனத்தின் தன்மையைப் பொறுத்து வேறுபட்டு அவ்வினத்தின் தன்மையர் ஆகிவிடுவர். இதனை, 'மாந்தர்க்கு இனத்தியல்ப தாகும் அறிவு' என்பர் (திருக். 452). இதனால் சார்பு பற்றிக் கொள்ளல் ஒட்டிக் கொள்ளல் தன்மயமாக்கும் என்பவை விளங்கும். மேலே சுட்டிய உவமையை,

> வானத்தின்கண் நின்ற நிலையில் தன் இயல்பில் இருந்த நீர், நிலத்தொடு சேர்ந்த விடத்துத் தன் நிறமும் சுவையும் மணமும் ஆற்றலும் நிலத்திற்கு ஏற்ப வேறுபட்டால் போல், மாந்தன் அறிவும் அவன் தனித்து நின்றவழித் தன் இயல்பில் இருந்து, ஓர் இனத்தொடு கூடியவழி ஆய்வினத்திற்கேற்ப நோக்குந் தன்மையும் வேறுபடும் என்பதாம்.

என்று விளக்குகிறார் பாவாணர்.

மாந்தர்க்கு இயற்கையாகிய அறிவு அவரவர் மனம் காரணமாக உண்டாகும். ஆனால், 'இவன் இத்தன்மையன்' என்று பிறரால் சிறப்பாகச் சுட்டிச் சொல்லப்படும் சொல், இனம் காரணமாக உண்டாகும் (453). ஒருவனை நல்லவன் என்று சொல்லு வதற்குரிய உளத் தூய்மையும் செயல் தூய்மையுமாகிய இரண்டும், அவன் சார்ந்த இனத்தின் தூய்மையைப் பற்றுக்கோடாகக் கொண்டே வரும் (455).

மனத்தான் உயர்ந்து விளங்கும் சான்றோர் தமக்கும், இனநலம் வாய்த்திருத்தலே பாதுகாப்புமிக்கதாம் (458). இவ்வாறு கூறிய திருவள்ளுவர்,

> **நல்லினத்தின் ஊஉங்கும் துணையில்லை தீயினத்தின்**
> **அல்லல் படுப்பதூஉம் இல்** (குறள். 460)

என்று வரையறை செய்கிறார்.

பெரியாரைத் துணைக்கோடலில் ஓர் அரிய பாதுகாப்பைச் சுட்டுகிறார் திருவள்ளுவர். அது.

> **தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்**
> **செற்றார் செயக்கிடந்த தில்**

என்பது. தக்க பெரியாரை அணுக்கமிக்கராகக் கொண்டு, அவரே என்ன அவர் தகுநிலையைப் போற்றி வாழ்பவனை, எப்பகைவராலும் எதுவும் செய்ய இயலாது என்பது இதன் பொருளாம். பெரியாரைத் துணைக்கோடலும் சிற்றினம் சேராமையும் அரசியற் பகுதியவாய் இருப்பினும் வாழ்வார் அனைவர்க்கும் வாய்த்த நெறிமுறை அஃதேயாம். இங்குச்

சுட்டியவற்றின் வழியே ஒருவர் வாழ்வில் சார்பு நிலைக்கு எத்தகைய பாரிய இடமுண்டு என்பது புலப்படும்.

சார்புகள் என்பவை மக்கள் பெருக்கம் போல் பெருகி வளர்ந்து வந்தன. அவை அறிவியல் வளர்ச்சி ஊடகப் பெருக்கங் களாலும், உலகைக் 'காலள'விலும் 'கையள'விலும் சுருக்கிக் கொண்டு வந்துவிட்ட அறிவியல் வகைகளாலும், சார்புகள் பெருகிப் பெருகிப் பளிச்சிட்டுக் கண்ணொளியைக் கப்பிப் போக வைக்கின்றன. பழநாள் சமய சாதிச் சார்புகள் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாய் மின்மினி ஒளிபோல் தோன்றித் தீக்கங்காகக் கிடந்து சிலச்சில இடங்களில் உணர்ச்சிக் காற்றால் எரிதழல் ஆனது உண்டு. ஆனால், இந்நாளில் சாதி சமயப் பூசல்கள் நீறு பூத்த நெருப்பாக இல்லை. 'குறிஞ்சிக் காட்டுப் பரப்பெல்லாம் கொழுந்தீப் பற்றி எரிவதுபோல் சமயப்போர், சாதிப்பகை வீறியுள்ளன. சாதிக்குள் சாதியும் சமயத்துள் சமயமும் முட்டுதல் மோதுதல் கொண்டன.

இவை எல்லாம் என்ன என்று எள்ளி நகைக்குமாறு துள்ளி எழுந்து, 'கட்சி அரசியல்' பேரெரியாய்க் கிளர்ந்து நாட்டை அலைத்துக் குலைத்து வருகின்றது.

ஒன்றை விஞ்சி ஒன்று ஊழல் மிக்கதாய், அவ்வவ்வூழலுக்கு அக்கட்சி அரசியலர் காவல் அரணமாய், நாட்டைக் கெடுத்து வருகின்றனர். தம் கட்சியர் செயலே அறச்செயல், மற்றைக் கட்சியர் செயல் எல்லாம் வடிகட்டிய தீச்செயல் என்னும் நிலையில், ஆன்றோர் சான்றோருள்ளும் "எவர் எப்படியானால் என்ன, எது, எவ்வாறு நடந்தால் என்ன" என்று எண்ணும் தன்னலத்தர் ஆகாதார் மட்டுமே துணிந்து கடனாற்றுவர். மற்றையோரெல்லாம், ஏதோ வோர் சார்புக் கும்பலின் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதுதான், **"தாம் இருப்பதன் அடையாளம்"** எனக் கொண்டுளர். சமயம் சாதி ஆகிய இரண்டுமே அரசியல் களத்தில் வரிந்துகட்டி நின்று ஆட்டம் போடுகின்றன.

பாவாணர் காலத்திலும் சமயச்சிக்கல், முட்டல், முரணல் உண்டு. ஆனால், அச்சிக்கல் முட்டல் முரண் ஆகியவை தலை விரிகோலமாய்த் தாண்டவம் புரியவில்லை. அவரவர் சார்புகளைப் பரப்பினர்; பரப்புதலை மறுத்தனர்; மறுப்புக்கு மறுப்பும் கிளர்ந்தன ஆயினும், இந்நாள் போல் பொதுமையறம், மாந்தநேயம், ஆன்மப்பேறு என்பவற்றுக்கு அழிவு சூழ்ந்த நிலை இல்லை. பாவாணர் இளந்தைப் பருவத்தில் பயின்றதும், ஆசிரியராக வெளிவந்து ஒராண்டு பணி செய்ததுமாம் **முறம்பு** என்னும் **சீயோன்மலைப்** பள்ளியில் 1941 முதல் 1944 வரை பயின்றவன் யான். அப்பறம்பு தவிர ஆசியாபுரம், வாழ வந்தாள்புரம், குன்றக்குடி,

கரிசல்குளம், வடமலாபுரம், ஊஞ்சாம்பட்டி, பந்தல்புளி, இரெட்டியபட்டி, சோலைசேரி, வேலாயுதபுரம், பெருமாள்பட்டி, வரகுணராமபுரம், சோழபுரம் என்னும் இவ்வூர்கள் அனைத்திலும் கிறித்தவக் கோயில்கள் இருந்தது இல்லை. படித்தவர்கள் அனைவரும் தமிழ் மதத்தவரே. வேறுபாடறக் கற்பித்தனர். வேறுபாடறக் கற்றனர். ஏதிலியா விடுதியில் ஏதிலியர் என்பதைப் பார்த்தல் அன்றிச் சமயத்தைப் பார்த்தது இல்லை! அறுபது ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலை இது!

சமயச் சார்புடைய நிறுவனமாகத் தோன்றியிருந்த அதுவும், சமனிலைச் சால்பில் கடனாற்றிய பசுமையே இன்றும் தோன்றுகின்றது. ஆதலால், சார்பு என்பது குற்றப்பாடு உடையது அன்று. புறக்கணித்து ஒதுக்கவோ தள்ளவோ கூடியதும் அன்று. அச்சார்பு, இன்னொரு சார்பொடு முட்டாமல் மோதாமல் முரணாமல் தன் சார்பு நிலையில் நிற்றலும் ஒரு வகையால் சால்பாகவே கொள்ளத் தக்கதாம். அச்சார்பும் பிறிதொரு சார்பை மதித்தும் அரவணைத்தும் தழுவியும் செல்லுதல் மேற்கொள்ளுமாயின், சால்பு என்னும் மாணிலை எய்தி உலக உய்வுக்கு வழி காட்டுவதாம்.

சிறுவர் பாடல் திரட்டு (1924), கிறித்தவக் கீர்த்தனைகள் (1934), கட்டாய இந்திக் கல்விக் கண்டனம் (1937), இசைத் தமிழ்க் கலம்பகம் (1966), இசையரங்கு இன்னிசைக் கோவை (1969) என்பவை பாவாணரால் இயற்றப்பட்ட இசை நூல்கள்.

சிறுவர் பாடல் திரட்டின் கடவுள் வாழ்த்து 'தேவனே' எனத் தொடங்குகின்றது. இதனைக் கிறித்தவச் சார்பாகவே கொள்ளல் முறை கிறித்தவக் கீர்த்தனம் என்னும் பெயரே அதன் உள்ளடக்கத்தை உணர்த்தும். ஐம்பத்திரண்டு பாடல்களைக் கொண்டது அது. தேவன், தந்தை, குமரன், பரிசுத்த ஆவி, முத்தேவர், திரியேக தேவன், குமரற்பரவல், கிறித்துவின் பிறப்பு, ஏசுவின் ஏழைக்கோலம், இயேசுவின் இளமை, மலைப் பிரசங்கம், பரமண்டலசெபம், சிலுவைச் சிந்து, உயிர்த்தெழுதல் என்னும் தலைப்புகளே நூற்பொருள் போக்கைத் தெளிவிக்கும்.

'கிறித்துவின் பாடுகள்' என்னும் தலைப்பில் உரைநடையில் இரண்டு பக்க அளவு விளக்கம் வரைகிறார் பாவாணர்.

> கிறித்துவின் பாடுகள் இல்லாவிடில் பாவிகட்கு மீட்பில்லை. ஒவ்வொரு கிறித்தவனும் தன்மீட்புக்குக் காரணமான கிறித்துவின் பாடுகளையே இரவும் பகலும் எண்ணித் தியானித்தல் வேண்டும்.
>
> கிறித்துமார்க்க சாரமான **அன்பு** (Love), **ஊழியம்** (Service), **தியாகம்** (Sacrifice) என்னும் மூன்றும்

சிலுவைப் பாடுகளிலேயே ஒருங்கு திரண்டு கிடக்கின்றன.

கிறித்துவின் தெய்வீகத்தையே நம்பாத காந்தியும் கூடச் சிலுவைத் தியானத்தினால் உலகம் முழுதும் நடுங்கத்தக்க வண்ணம் மேற்கூறிய மூன்று சக்திகளையும் பெற்றிருப்பாராயின், கிறித்துவையே மெய்த் தேவனென்று வணங்கும் கிறித்தவர்கள் அவரினும் எத்தனையோ அதிகமாய் அச்சக்திகளை அடையலாம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

என்று வரைகின்றார். மேலும்,

உத்தம கிறித்தவன் ஒருவன் பிறப்பின் பண்டிகையிலும் உயிர்த்தெழுந்த திருநாளிலும் கூடக் கிறித்துவின் பாடுகளையே தியானிப்பான். இடைவிடாத சிலுவைத் தியானத்தினாலேயே கிறித்தவர்கள் அன்பு, ஊழியம், தியாகம் என்ற மூன்று ஆற்றல்களையும் அடைதல் கூடும் என்பதை அறிந்து கொள்க

என்று கூறும் பாவாணர்,

ஒவ்வொரு கிறித்தவனும் கிறித்தவர்களை அல்ல. கிறித்துவையே பின்பற்ற வேண்டும். இதுவே மீட்பின் வழி

என்று நிறைக்கிறார்.

உரையும் பாட்டுமாய் அமைந்த இக்கீர்த்தனச் சிறப்பு ஒன்றனைப் பேராசிரியர் சத்தியசாட்சி குறிப்பிடுகிறார்.

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் இடைக்குலப் பெண்கள் திருமாலைப் பாடிப் பரவுகிறார்கள். இந்தப் பாட்டிலுள்ள தமிழிசை இன்பம் பாவாணர் அவர்களை ஈர்த்திருக்கிறது. எனவே, இந்த இனிய செந்தமிழ்த் தொடையைத் தம்மை உய்யக் கொள்ள வந்த இயேசு பெருமானுக்கு உரிமையாக்கிப் பாடுகிறார்.

இதனைத் தான் நாம் தன்னாக்கம் செய்தல் (Indiginization) என்கிறோம். கிறித்தவத் தொழுகையில் வாழைப்பழத்தில் ஊதுவத்திகளைக் குத்தி வைத்துக் கொள்வதையோ, திருநீற்றுற வேடம் புனைந்து கொள்வதையோ நாம் தன்னாக்கம் என்று கூறுவதில்லை

என்கிறார்.

கிறித்தவச் சார்பிலே வளர்ந்த பாவாணர் உள்ளத்தில் தமிழ் மண்ணின் மணமும் இலக்கிய மணமும் முழுதுறக் கோலோச்சியமையால்தான்,

> **பாட்டில்லாத பாட்டுகள் திருச்சபையில் படை யெடுத்துக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் பாட்டெனும் பாட்டாக இந்த நூல் வெளிவருகின்றது**

என்றும் கூறுகிறார்.

'நாதவிந்து கலாதி', 'பாலாபிசேகப் பழநி', ஸ்ரீரகுவர 'நீலகண்ட மகதேவா', 'அருட்சோதித் தெய்வமென்னை' முதலிய மெட்டுகளில் கிறித்தவக் கீர்த்தனம் கிளர்வது தன்னாக்கம் செய்யும் தகவேயாம். **இத்தகவு கிறித்தவச் சார்பிலிருந்து ஓங்கி எழுந்து நின்ற சால்பின் சான்றாம்.**

**கட்டாய இந்திக் கல்விக் கண்டனம் (செந்தமிழ்க் காஞ்சி)** என்னும் நூல், தமிழ் வணக்கத்தோடே தொடங்குகிறது. தமிழ்த் தாய், தமிழ் வாழ்த்து, செந்தமிழ்ச் சிறப்பு, தமிழின் பெருமை, தமிழ்நாடு பழந்தமிழ்நாடு தமிழ்நூல்கள் எனத் தொடரும் கீர்த்தனங்களின் மெட்டுகள் பெரிதும் தமிழர் சமயம் சார்ந்தனவேவாம்.

இசைத் தமிழ்க்கலம்பகம் 303 பாடல்களைக் கொண்டது. அதில்வரும் கடவுள் வழுத்து,

> **ஆரிய ஞாட்பின் அருந்தமிழை மீட்கவொரு**
> **சீரிய மீட்பன் துணை**

என்பது. அது, மீட்டெடுப்புச் செய்தற் பொருளதேயன்றிக் **கிறித்துவைச் சுட்டாமை** வெளிப்படை.

**கிறித்து சமயமீட்பர். காரல்மார்க்கசு பொருளியல் மீட்பர்** என்று கூறும் பாவாணர், தம்மை,

> சேலம்கல் லூரி சிறந்திராம சாமியின்றேல்
> ஞாலம் பரவு தமிழநன் - நூலியற்றும்
> தேவநே யனஎங்கே? தென்மொழித் தொண்டெங்கே?
> பாவு தமிழ் **மீட்பெங்கே பார்**

என்பதால் **மீட்பின் பொருளைத் தெளிவித்தல் அறியலாம்.**

அதில் வரும் கடவுள் வணக்கம், 'பசனை செய்வோம் கண்ணன் நாமம்' என்ற மெட்டு.

கடவுளை வேண்டல், 'மாசில் வீணையும்' என்ற மெட்டு எனப் பாடுகிறார். முதற்கடவுள், தனித்தலைவர், எங்கும் நிறைந்த

பொருள், இறைவா, எங்கும் நிறை இறைவா என்னும் பொதுமைச் சுட்டுகளையே ஆள்கிறார்.

குமரிநாட்டுச் சிவன்மால் வழிபாடு, கோயில் வழிபாட்டு மொழி என்பனவும் கலம்பகத்தில் இடம்பெறுகின்றன.

இசைத் தமிழ்க் கலம்பகம் தமிழ், தமிழர், தமிழகம் பற்றிய நலங்களைக் காக்கவும் பொலங்களைப் போக்கவும் மேடை தோறும் முழங்கப் பாடப்பட்டவை. அன்றியும் இசைத் தமிழ்ப் பாடல்கள் இல்லை என்னும் குறையைப் போக்கி எத்தனை எத்தனை வேண்டுமாயினும் ஆக்கிக் கொள்ள முடியும் என்பதை நிலைநாட்டியதும் அது. அதில் மணமக்கள் வாழ்த்து (281), தமிழ் வாழ்த்து (282) தமிழர் வாழ்த்து (283), தமிழ்நாட்டு வாழ்த்து (284), இந்திய ஒன்றிய வாழ்த்து (285), ஒன்றிய பன்னாட்டின் வாழ்த்து (286), உலக வாழ்த்து (287), மங்களம் (303) எனப் பல்வேறு வாழ்த்து வகைகள் அமைந்துள.

எங்கணும் நிறைகின்ற **இறைவனை** நாடி
இல்லறம் தரும்பல இன்பம் கொண்டாடி

எந்தவூரும் சொந்தவூர் எல்லாரும் நல்லினம்
ஏத்தும் **கடவுள்ஒன்றே** என்றும் நல்லோர் வாழிய

பெரிய குடும்பமாய்ப் பிறங்கும் உலகிலே
பிரியும் தமிழகம் **பெருமகன்** அருளவே

எங்கணும் ஒருவனே **இறைவனென்** றெண்ணி
இன்புறு தமிழியல் நண்ணி

**வழிபடு கடவுள்** ஒன்றே என்றதை
வணங்கியே யாவரும் வாழ்க

எல்லாரும் இன்பமுறவே **இறைவனருளால்** மங்களம்

என இவற்றில் பொதுமைச் சால்பிலேயே இறைமையைக் காட்டித் திளைக்கிறார் பாவாணர்.

சைவச் சார்பிலே கந்தகோட்ட வழிபாடு முதலாகத் தொடங்கிய **வள்ளலார்**, ஏறாத மேட்டில் ஏறிநின்று, ஒளி வழிபாட்டை உலகுக்கு அருளிய பேரருட் சால்பு போலப் பாவாணர் தம் சமயச் சார்பை அகன்று, **உலகப் பொதுமை இறைமையை** ஏற்றுப் பரப்பினார் என்பதே சாலும்.

பாவாணரை அணுக்கமாகக் கொண்ட தனித்தமிழ்ப் பாவலர் மு.வ.பரமசிவம் (பரணனார்) பாவாணரைத் தம் திருமணக் கரண விழாவில் கலந்துகொள்ள அழைத்தார். தாம் வர இயலாச் சூழலை வெளியிட்ட பாவாணர்,

> நான்வர இயலாவிடின் திரு. மூக்கப்பிள்ளையைக் கொண்டே கரணம் நடத்திக் கொள்ள அணிய மாயிருக்க என் வாழ்த்து. நான்வரினும் வராவிடினும் ஒத்த வலிமையுள்ளதே

என்றும் (8.1.75).

> **தேவாரம் ஓதித் திருமணக் கரணம் நடத்திவைப்பது அலுவலக மேலதிகாரிகட்கும் ஏற்றதாயிருக்கும்.**
>
> **"உலகெலாம் உணர்ந்தோதற்கு அரியவன்"** என்று பெரியபுராணக் கடவுள் வாழ்த்தையாவது, அதை யொத்த திருப்பதிகச் செய்யுளையாவது பாடித் தொடங்கச் சொல்லலாம். **"மாதர்பிறைக் கண்ணி யானை"** என்னும், **திருவையாற்றுப் பதிகத்தையும், "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"** என்னும் **திருக்கழுமலப் பதிகத்தையும்** என்னும் **திருக்கழுமலப் பதிகத்தையும்** முன்னும் பின்னுமாகப் பாடுவது **பொருத்தமாகும்.** இசையின்றி ஓதுவதைவிட, இசையுடன் பாடுவதே நன்று. **இறைவன் திருவருளால் கரணமும் விழாவும் இனிது நடைபெறுக.** இல்லறம் இன்பமாக நீடுக.

என்றும் (24.1.75) வரைகின்றார்.

கல்லை பெருஞ்சித்திரனார், பாவாணரைத் தம் குடும்பத் தலைவரெனக் கொண்ட பெற்றியர். அவர்க்குப் பாவாணர் எழுதிய சில குறிப்புகள் வருமாறு:

> மணமக்கள் பிள்ளைகளைப் பெற்றுக் குடும்பம் பெருகி வழிவழி தொடர்ந்து வருவது அறுகம்புல் வேர் ஊன்றல் போல் இருத்தலால், அறுகையும் உணவுத் தட்டில்லாமல் வாழவேண்டும் என்று அரிசியையும் அடையாளமாகத் தூவி வாழ்த்தினர் முன்னோர். இக்காலத்தில் அவ்வடையாளம் இன்றியும் வாழ்த்தலாம்.
>
> ஐம்பூதங்களுள் தீ தெய்வத்தன்மை உள்ளதென்று தெய்வச் சான்றாக விளக்கேற்றி மணமக்கள் சூளிட்டனர் கடவுளை உள்ளத்திலேயே தொழலாம். ஆரியர் கடவுள் வணக்கமாகத் தீயையே வணங்கி வந்ததால், தீவலம் வருவதைச் சடங்காகக் கொண்டிருந்தனர். அது தமிழர் வழக்கமன்று. **கடவுள் எங்கும் நிறைந்திருப்பதால் உள்ளத்திலேயே எண்ணிச் சூளிடலாம்**

என்று வரைகிறார் (6.1.2.74).

ஓர் இறுதிச் சடங்கு பற்றிக் கல்லையார் எழுதிய அஞ்சலுக்குப் பாவாணர்,

> கிறித்தவ நெறியிற் பிறந்து வளர்ந்தே னாதலால் சிவநெறியாரின் இறுதிச் சடங்குகள் பற்றி ஒன்றும் அறிந்திலேன் அக்கம்பக்கத்திலுள்ள முதியரை வினவித் தெரிந்து கொள்க.

என வழிகாட்டுகிறார்.

இவை பாவாணர் சமயச் சால்பில் ஓங்கி நின்று உயர்நடை இடுதலைத் தெளிவிப்பவையாம்.

# 5. சமயச் சார்பர் நிலை

ஒன்றை ஆய்வு செய்வார்க்கு இன்றியமையாது வேண்டும் பெருந்தகவு நடுவுநிலைமை. நடுவுநிலை என்பதற்குத் தனி அதிகாரம் வகுத்தவர் திருவள்ளுவர். அவ்வதிகாரத்தை எதன் சார்பொடு வைத்தார்? முன்னே **செய்ந்நன்றி அறிதல்** பின்னை **அடக்கமுடைமை.** செய்ந்நன்றியறிதல் கொண்டும் நடுவுநிலை பிறழ்தல் ஆகாது. நடுவுநிலைமை, பொறிவாயில் ஐந்தவித்தான் வேண்டுதல் வேண்டாமை இல்லாதான் அடக்கத்தின் வெளிப் பாடாகவும் எவர்க்கும் புலப்படுதல் வேண்டும் என்பதற்கே யாம். அதனைக் கண்ணேரில் காட்டுவது போல் அவர் காட்டிய உவமை உலகவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்புவமையற்ற ஒன்றாய்த் திகழ்வது. **அறமன்றங்களில் கண்கட்டப்பட்ட பெண்மைப் பிழம்பொன்றின் கையிலே வைக்கப்பட்டுள்ள சமன்கோலாம் தராசு.**

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி**

என்பது நடுவுநிலைமை எட்டாம் குறள் (118).

சமயச் சார்புடையார் தம் சார்புக்கும் தம் பற்றுமைக்கும் தத்தம் பழக்க வழக்கங்களுக்கும் தம் சமய நூல்களையே கொள்ளல் கண்கூடு. இவ்வகையில் தேவார, திருவாசகம் முதலியன சைவர்களுக்கும், நாலாயிரப் பிரபந்தம் அட்டப் பிரபந்தம் முதலியன வைணவருக்கும் சமய நூல்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன.

புத்தம், சைனம், கிறித்தவம், இசுலாமியம் என்னும் சமயம் சார்ந்தாரும் பிற பிற சமயத்தாரும் தத்தம் சமய நூல்களாக உள்ளவற்றைப் பயிலலும் பாராட்டலும் வழக்கே.

ஒரு சமயத்தில் அழுத்தமிக்க பற்றாளர் மற்றொரு சமய நூல்களைப் பயிலாமையைக் குறையாகக் கருதுவது இல்லை. பயில்வதைக் குறையாகக் கருதுவதும் உண்டாயிற்று. இது சமயச் சார்பினின்று நீங்காமை மட்டுமன்றிப் பிற சமய வெறுப்பாகவும் தோற்றமாயிற்று.

சைவசமயம் சார்ந்தவரும், சைவப் பெயர் தாங்கிய பேரறிவரும் ஆகிய **நச்சினார்க்கினியர்** தம் சமயநூல் அல்லாத

சீவகசிந்தாமணிக்கு - சமண நூலுக்கு - உரைகண்டார். அவர் கண்ணில் அரிய தமிழ்க் காப்பியம் என்பது தோன்றிற்றே அன்றி அதன் சமயம் தோற்றமுறவில்லை. உரைகாணத் தடையாகவில்லை.

அவர் சிந்தாமணிக்கு எழுதிய உரையைச் சிந்தாமணியை முற்றோதுவதே வாழ்வுப் பேறாகக் கொண்ட சமயவாணர்களிடம் காட்டித் தம் உரைநிலையை அறிய அவாவுகிறார். நச்சினார்க்கினியர்க்குத் தம்முனைப்பு ஆகிய செருக்கு இல்லாமை மட்டுமன்று, "ஒரு சமயநூல் அச்சமயநெறிக்கு மாறுபடுவதாகிய உரையொடும் வெளிவருதல் ஆகாது; அதன் சார்பு அதன் சார்பாகவே இருத்தல் வேண்டும்" என்னும் பெருந்தகைமை அவர்க்கு இருந்தமையை இது வெளிப்படுத்தும்.

சீவகசிந்தாமணி உரையில் பல இடங்களில் அச்சமயத்திற்குப் பொருந்தாக் குறிப்புகள் உண்மையை அச்சமயத் திறவோர் எடுத்துக்காட்டிய அளவில், தாம் ஓய்ந்து விடாமல் அச்சமயம் வல்ல அறிவர்களை அணுகி, அச்சமய நுணுக்கங்களை நன்கு தெளிந்து, மீளவும் அச்சமய நெறிக்கு மாறிலா வகையில் ஒரு புத்துரை கண்டார்'. இச்சால்பு, அவர்தம் சார்பாகிய சமயத்திற்கும் பெருமை சேர்க்கும் வரலாறாம்.

> நச்சினார்க்கினியர் முதலில் சிந்தாமணிக்கு ஓர் உரை எழுதினாராம். பிறகு அதை ஜைனர்களிடம் படித்துக் காட்டிய போது சம்பிரதாய விரோதமாகச் சில பகுதிகள் உள்ளனவென்று சொன்னார்களாம். அதனால் அவர் தம்மை ஒரு ஜைனராகச் சொல்லிக் கொண்டு சிற்றாம்பூர் என்னும் இடத்திலுள்ள ஜைன மடத்திற்கு வந்து சில காலம் தங்கி ஜைன நூல்களையும் ஜைன சம்பிரதாயங்களையும் கற்றுச் சென்று மீட்டும் புதிய உரையை எழுதினாராம்.

என உ.வே.சாமிநாதையர் என் சரித்திரத்தில் குறிப்பிடுகிறார். ஏனெனில், சைன சமயத்தாராக இல்லாதவர்க்குக் கற்பிப்பதில்லை என்ற கொள்கை இருந்திருந்தால் அன்றி இக்குறிப்பைப் பொறிக்க நேர்ந்திருக்காதாம் (என் சரித்திரம், பக். 741). இச்செய்தி, சைனச் சார்பே சார்பாகக் கருதப்பட்ட நிலையாம்.

சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளார் சமயம் சமணம் ஆயினும், அவர் சமயச் சால்பில் தலைநின்ற தூயராக அவர்தம் படைப்பால் பளிச்சிடுகிறார்.

உடன்பிறந்தான் ஆகிய குட்டுவன் சிவனியன்! உழுவலன்பராகிய சாத்தனார் பௌத்தர், எடுத்துக்கொண்ட காப்பியத் தலைவன்

சமணம் சார்ந்தவன் மாதவி பௌத்தம்; மாதரி வைணவம்; மாடலன் வேதவழியன்; குன்றக் குரவையர், கொற்றவை வழிபாட்டாளர், முருகு வழிபாட்டாளர் எனப் பலப்பலரையும் அவரவர் சமயச் சார்பில், தாம் சமயச் சால்பினராக இருந்து பாடுகின்ற அருமை அவர்க்கு ஒப்பிலாப் பெருமையை என்றும் தருவதாக அமைந்ததாம்.

அச்சிலப்பதிகாரத்திற்கு உரைகண்டார் பழுத்த சிவனியர் அடியார்க்கு நல்லார். 'பொடியார்க்கு மேனி அடியார்க்கு நல்லார்' எனப் புகழப் பெறும் பேற்றாளர். ஈழத்திற்கும் இன்றமிழ் நாட்டுக்கும் இணைப்புப் பாலமெனத் தமிழ் வாழ்வு வாழ்ந்தவர். அவர் வாழ்ந்த இடம் காங்கேயன் துறை என்பது. நல்ல சைவம், சமண நூல் – சமண அடிகள் இயற்றிய நூல் எனத் தள்ள வில்லை! தலைமேல் கொள்ளலாகியது'

திருவாசகம், கருங்கல் மனமும் கரைக்கும் உருக்கத்தை உடையது. சிவனியர்க்கு வாய்ந்த செல்வங்கள் அனைத்திலும் தலைச் செல்வமாகப் பாராட்டத்தக்கது. 'அத்திருவாசகத்தை அள்ளூறிக் கற்கிறார் கிறித்தவ சமயப் பரப்பாளியாக வந்து, தமிழ்ப் போப்பாக வாழ்ந்து, தமிழ்த் தவவாழ்வாகவே தம் வாழ்வை நிறைவித்த போப்பையர்! இப்படி விண்மீன்களாகச் சமயச் சால்பாளர்கள் முன்னும் பின்னும் இருக்கும் நிலையில், பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் அழுந்திய சமயச் சார்பாக மட்டும் இல்லாமல், பிற சமய வெறுப்பாகவும் மறுப்பாகவும் நூல்கள் சில கிளர்ந்தன. அவற்றின் விளைவு அரிய தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழ்மண் இழந்துபோகச் செய்துவிட்டது.

தொல்காப்பியம் முதலாம் இலக்கணத்தில் கரை கண்டவர், சைவ சமய மெய்யியல் நூல்களில் ஆழங்கால்பட்டவர், சைவமடம் சார்ந்த துறவராக வாழ்ந்த தமிழர் ஈசானதேசிகர், சுவாமிநாத பண்டிதர். அவர் தமிழை 'ஐந்தெழுத்தால் ஒருபாடை' என்று (தமிழை) எள்ளி நகையாடியதும், இருமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்று வலிந்து முயன்றதும், பெரும் மொழிக் கேடாக அமைந்தது. இது வடமொழியே மொழி எனக் கொண்ட மயக்க வெறியால் ஏற்பட்டது. மற்றொன்று மதவெறியால் - சைவ சமய வெறியால் ஏற்பட்டது.

சால்பிலாச் சமய வெறியால், சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், அற இலக்கியம் என்பவை தாமும் கற்பது வாழ் நாளை, வீண்நாள் (வீழ்நாள்) ஆக்குவது என்று வல்லாண்மை யாக உரைத்தது, பல அரிய நூல்கள் கற்கவோ, கற்பிக்கவோ, படியெடுக்கவோ, பாடம் செய்யவோ கூடாமல் பாழும் அனலுக்கும் புனலுக்கும் போனது போலப் போக்கடித்தது. ஆங்கிலர் முதலிய அயலவர் வருகையால் அடிமைப்படுத்தல்

முதலாக நாட்டுக்கு ஆகிய கேடுகள் பலவாயினும், ஆகிய நலங்கள் சிலவற்றுள், 'அச்சுப் பொறிவரவு' சுவாமிநாத தேசிகர் அன்னவர் செய்த அழிம்புச் செயலில் இருந்து, ஓரளவால் தமிழைக் காத்து உதவியதாம். அதுவும், எம்மடத்தில இருந்து தமிழ் நூல் அழிப்புக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டதோ, அம்மடத்தின் வழியேதான் ஆக்கமும் அமைந்தது என்பதும் வியப்பாம்.

தமிழகத்திலே ஏற்பட்ட சுவாமிநாதப் போகூழ், ஈழத்தில் ஏற்படவில்லை! ஈழத்தமிழ் அறிவர்கள் தமிழ்நூற் பதிப்பில் பழந்தமிழ் நூற்பதிப்பில் தலைப்பட்டுநின்றனர். அவருள் முதல்வர் ஆறுமுக நாவலர்! அடுத்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை!

மூன்றாமவராய் இங்கே நின்றவர் பெரும்பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார் மாணவரும், பதிப்புத் துறையில் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்தவரும் ஆகிய உ.வே. சாமிநாதையர் ஆவர்.

அவர்தாம், 'சங்கத் தமிழ் நூலோ பிறவோ கற்றல் வீண்" எனக் கொண்ட முன்னோடி இருந்த இடத்தில், அந்நூல்களைப் பற்றிக் கேட்டிருக்கவோ, பார்த்திருக்கவோ இயலுமா?

தமிழ் செய்த தவப்பேறாய்ச் சேலத்துத் தோன்றல் இராமசாமி முதலியார் என்பார் குடந்தை முறைமன்றத்தில் நடுவராக விளங்கினார். திருவாவடுதுறை ஆதீனத் தூண்டலால் உ.வே.சா. அவர்கள், நடுவரைக் கண்டு தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். அதன்பின் அவரே சொல்கிறார்.

> நீங்கள் யாரிடம் பாடம் கேட்டீர்கள்?
>
> மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டேன்?
>
> என்ன என்ன பாடம் கேட்டீர்கள்?
>
> குடந்தை அந்தாதி, மறைசை அந்தாதி, புகலூரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, அழகரந்தாதி, கம்பரந்தாதி, முல்லையந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை" என்று சொல்லிக் கொண்டே போனேன். அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத்தமிழ்களில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் இப்படியே பிரபந்தங்களை அடுக்கினேன்.
>
> இதெல்லாம் படித்து என்ன பிரயோசனம்?

திருவிளையாடல்புராணம், திருநாகைக்காரோகணப் புராணம், மாயூரப்புராணம், கந்தபுராணம், பெரிய புராணம், குற்றாலப்புராணம், நைடதம், பிரபுலிங்க லீலை, சிவஞானபோதம் சிவஞான சித்தியார் உரை என்றும் பெயர்களைச் சொன்னேன். இலக்கண நூல்களை எடுத்துக்கூறினேன். கம்பராமாயணம் முழுவதும் இரண்டு மூன்று முறை படித்திருக்கிறேன். பிள்ளையவர்களிடமும் சில பாடங்களைப் பாடம் கேட்டிருக்கிறேன்" என்றேன்.

"சரி, அவ்வளவுதானே, இந்தப் பிற்காலத்துப் புஸ்தகங்களையெல்லாம் படித்தது சரிதான். பழைய நூல்கள் ஏதாவது படித்தது உண்டா?".

"நான் சொன்னவற்றில் எவ்வளவோ பழைய நூல்கள் இருக்கின்றனவே".

"அவைகளுக்கெல்லாம் மூலமான நூல்களைப் படித்திருக்கிறீர்களா?"

"தாங்கள் எந்த நூல்களைச் சொல்லுகிறீர்கள் என்று தெரியவில்லை" என்றேன்

"சீவகசிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக் கிறீர்களா?"

அவர் சொன்ன நூல்களை நான் படித்ததில்லை என்னுடைய ஆசிரியரே படித்ததில்லை. புஸ்தகத்தைக் கூட நான் கண்ணால் பார்த்ததில்லை.

புஸ்தகம் கிடைக்கவில்லை. கிடைத்தால் அவைகளையும் படிக்கும் தைரியம் உண்டு" என்று கம்பீரமாகச் சொன்னேன்.

"நான் புஸ்தகம் தருகிறேன். தந்தால் படித்துப் பாடம் சொல்வீர்களா? என்று கேட்டார்.

"அதில் சிறிதும் சந்தேகமே இல்லை நிச்சயமாகச் சொல்கிறேன்" என்று தைரியமாகச் சொன்னேன்.

சரி, சிந்தாமணியை நான் எடுத்து வைக்கிறேன். நீங்கள் படித்துப் பார்க்கலாம். அடிக்கடி இப்படியே வாருங்கள் என்றார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை இராமசாமி முதலியாரிடம் போனேன். "இதைப் படித்துப் பாருங்கள். பிறகு பாடம் ஆரம்பிக்கலாமா" என்றார். "அப்படியே செய்யலாம்" என்று உடன்பட்டேன்.

"எனக்குச் சிந்தாமணி முதலிய பழைய புஸ்தகங்களைப் படிக்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்தது.

இந்தத் தேசத்தில் நான் சந்தித்த வித்துவான்களில் ஒருவராவது அவற்றைப் படித்ததாகவே தெரியவில்லை. ஏட்டுச் சுவடிகளும் கிடைக்க வில்லை. என் நண்பர் ஏ. இராமச்சந்திர ஐயர் ஸ்ரீ வைகுண்டத்தில் முன்ஸீபாக இருந்தார். அவர் கவிராயர் பரம்பரையைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து சீவகசிந்தாமணிப் பிரதியைப் பெற்றுத் தந்தார். அதில் இருந்து காகிதத்தில் பிரதி பண்ணிய புஸ்தகம் இது.

இவ்வளவு கஷ்டப்பட்டு இதனைப் பெற்றுப் படிப்பதற்கு முடியவில்லை. நான் காலேஜில் படித்தபோது இதன் முற்பகுதியாகிய நாமகள் இலம்பகம் மாத்திரம் பாடமாக இருந்தது அதை ஒரு துரை அச்சிட்டிருந்தார். அதில் தமிழைக் காட்டிலும் இங்கிலீஷ் அதிகமா யிருந்தது. நூல் முற்றும் படித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் நான் போகும் இடங்களில் உள்ள வித்துவான்களை எல்லாம் விசாரித்துப் பார்க்கிறேன். எல்லோரும் அந்தாதி, பிள்ளைத் தமிழ், புராணங்கள் இவைகளோடு நிற்கிறார்களேயொழிய மேலே போகவில்லை. அதனால் நான் மிகவும் அலுத்துப் போய்விட்டேன்.

புஸ்தகம் மிகச் சிறந்த புஸ்தகம். கம்பராமாயணத்தின் காவ்ய கதிக்கெல்லாம் இந்தக் காவியமே வழிகாட்டி இதைப் படித்துப் பொருள் செய்துகொண்டு பாடம் சொல்வீர்களானால் உங்களுக்கும் நல்லது. எனக்கும் இன்பம் உண்டாகும்."

என முதலியார் கூறியவற்றை மிக்க கவனத்தோடு கேட்டுவந்தேன். (என் சரித்திரம், பக். 720-734).

பழந்தமிழைப் பாதுகாத்துத் தந்த வள்ளல்களுள் முதல் வரிசையில் நிறுத்தப்பட வேண்டியவர் சேலம் இராமசாமி முதலியாரே என்பது இதனால் விளங்கும். இத்தூண்டல் அல்லவோ சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங் கதை, சூளாமணி, பத்துப்பாட்டு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்னும் செம்மொழிச் சீர்த்த நூல்களைவெல்லாம் உ.வே.சா. தமிழுலகுக்குப் பதிப்பித்து வழங்கும் 'தாதா'வாம் பேற்றை வழங்கியது'. சீவகசிந்தாமணியில் தோய்ந்து நின்ற தமிழ்ச் செம்மல், செந்தமிழ்ச் சேக்கிழார். அவர் அச் செந்தமிழ்க் காப்பியத்தை முன்வைத்தே திருத்தொண்டத் தொகையாம் பெரியபுராணம் இயற்றினார் என்பதற்குச் சான்றுகள் பலப்பல. எனினும் சமயச் சார்பு அழுத்தம் என்ன செய்தது! ஒரு கதை கட்டிவிட்டது. சேக்கிழார் புராணத்தில் அக் கதை

இடம்பெற்றது! பரப்பவும் பட்டது! பேரறிவுப் பெருந் தோன்றல் சிவஞான முனிவரைத் தாமும், சீவகசிந்தாமணியைப் 'பயனில் சொல்'லுக்குக் காட்டாக வைக்கத் தூண்டிவிட்டது.

முனிவரர் இயற்றிய சோமேசர் முதுமொழி வெண்பாவில்,

சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
தூக்கியுப தேசித்தார் சோமேசா - நோக்கில்
பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி எனல்

எனப் பாட வைத்தது. சமயக் காழ்ப்பு மொழி, இன, பண்பாட்டு, ஆன்மநேய, உலகியக் கேடாக இருப்பதை அன்றையினும் இன்றை நிலை பளிச்சிட்டுக் காட்டவே செய்கின்றது.

வெறி என்பது இயற்கை மணம். வேலன் வெறியாடல் இயற்கைச் சூழலில் மலர்மாலை சூடி வேல்திரித்து ஆடிய ஆட்டமாம். முறிமேனி முத்தம் முறுவல் 'வெறிநாற்றம்' வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு'' என்னும் குறள், வெறி இயற்கை மணமாதலைக் குறிக்கும். அச்சொல்லின் பொருள் தன் தகுதி இழக்கும் வகையில், 'கள்வெறி', 'காமவெறி', 'மதவெறி' என மாற்றங்கொண்டது. வெறியினும் கூடியது காழ்ப்பு. எதிர்வரும் சமயத்தை - வாதியை - கட்சியை - மொழியை - எதிரியாகவே பார்க்கும் பார்வையது அது.

வேதத்தை வேதியரை அன்றிப் பிறர் ஓதவோ கேட்கவோ நினைவில் கொள்ளவோ கூடாது என்றும், அதனைக் கொண்டால் இன்ன இன்ன தண்டனை என்றும் வருணவெறி ஆட்டம் போட்டது. அதன் சாதிமை மடங்களைப் பற்றி இச்சாதியினை அன்றி எச்சாதியனும் மடத்துத் தலைவன் ஆகக் கூடாது எனச் சாதிமைப்படுத்தப்பட்டது. சமயக் கொள்கை சாதிமையாக்கப் பட்டது. இந்நிலையில் பிறர் பிறரும் அவரவர் சாதிமையிலும் மதமையிலும் நிற்றலே முறைமை என்றும் அறம் என்றும் மூளைச் சலவை செய்யப்பட்டனர். நல்ல சமயம், தன்னலக் கொள்கையரால் சமயச் சால்பைத் தொலைத்தது.

மாலியம் பிறந்து வடகலை தென்கலைப் போர் ஆயது. சிவனியச் சமயம் பிளந்து அறுவகை ஆயது.

முன்னது வழக்கு மன்றமும் ஏறி நின்று, சமய இழிமையைப் பறைச்சாற்றியது.

பின்னது சமயச் சால்புடையவராலேயே பழிக்கப்பட்டது.

ஒன்றது பேரூர் வழி அதற்கு ஆறுள;
என்றது போல இருமுச் சமயமும்

*நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்*
*குன்றுகு ரைத்தெழு நாயையொத் தார்களே* (1558)

என்பது திருமந்திரம். அது தந்தது, "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" சமயச் சால்பின் அடித்தளம் இது.

மூலர் சொல்லின் மேலேயும் சமயவாணர்க்கு ஒருரை பகர்ந்தார் கம்பர். அது பின்னே நம்பா மதம் என ஒன்றன் பெயரிட்டு மதத்தொடும் எண்ணிய பாவாணர்க்கு முன்னம் அமைந்த் முழக்கமாம்.

*கடவுள், ஒன்றா? பலவா?*
*அன்றா? ஆமா?*
*இன்றா? உளதா?*

**அவரவர் எண்ணம்போல் ஆம்**

*ஒன்றே என்னின் ஒன்றேயாம்;*
*பலவென் றுரைக்கில் பலவேயாம்;*
*அன்றே என்னின் அன்றேயாம்;*
*ஆமென் றுரைக்கின் ஆமேயாம்;*
*இன்றே என்னின் இன்றேயாம்*
*உளதென் றுரைக்கின் உளதேயாம்*
*நன்றே நம்பி குடிவாழ்க்கை*
*நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா*

என்பது அப்பாடல் (உயுத்த காண்டம் - கடவுள் வாழ்த்து). சமய வாணரொடு இல்லை என்பாரையும் ஏற்று மொழிகிறாரே. ஏனெனில், நம்பிக்கை இல்லாரும் தோன்றினரோ அன்றே. நம்பிக்கை இல்லாரும் தோன்றினர் என்பது உலகப் பார்வை.

# 6. சமயச் சால்பர் நிலை

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாது வேறொன் றறியேன் பராபரமே

என்னும் பெருநெறி தாயுமானவர் வழியாகத் தமிழகத்தில் உருவாகியது. அப்பெருநெறியே நெறி என நிலைநாட்டிய பெருமைக்குரிய தோன்றல். வள்ளலாரே ஆவர்.

அவர் பிறப்பால் சிவனியர்; இளந்தைப் பருவத்திலேயே முருகு வழிபாட்டில் முருகியவர்; சிவனியம், மாலியம் அம்மை வழிபாட்டுப் பாடல்களும் பாடியவர். வளர்நிலையில் பொது நெறியாம் சன்மார்க்கமே மார்க்கம் எனக் கண்டு, உலகச் சமயங்கள் எல்லாம் ஒத்துக் கொண்டுள்ள ஒளி வழிபாட்டையே வழிபாடாகக் கொண்டவர்.

**சமயச் சார்பர.ாக இருந்தாரும் அச்சார்பு கடந்து உலகுய்யத்தக்க சால்புடையவராக விளங்குதலே வாழ்வாவது என வாழ்ந்து காட்டியவர்.**

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ (5297)

என்றும், இத்திருபாடலை ஓதி ஓதி விரித்து விரித்துப் பொருள் காணின் ஒப்புரவு இலக்கணம் முழுதுறக் கண்டு உலகுய்ய வாய்க்கும்.

வள்ளலார் தாம் பெற்ற பெருநிலையைப் பிறரும் பெறுமாறு அவாவுகின்றார். அதனால்,

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தரவர்தாமே

வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே_(5566)

என்கிறார். வள்ளலார் காலம் 05.10.1823 - 30.01.1874. திருவருட்பா ஆறு திருமுறைகளைக் கொண்டது. முதன் நான்கு திருமுறைகள் 1867இல் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் வெளியிடப்பட்டது. அப்பொழுது வள்ளலார் வாழ்ந்தார். அவர் திருமறைவின் பின்னரே 1880ஆம் ஆண்டில் ஐந்தாம் திருமுறை தொழுவூராலே வெளியிடப்பட்டது. ஆறாம் திருமுறை 1985இல் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரால் வெளியிடப்பட்டது.

வள்ளலார் பொதுநெறியை ஏற்க விரும்பாத சமயப் பற்றாளர் கண்டனங்கள், அறிக்கைகளாகவும், வெளியீடுகளாகவும், மேடைக்கூட்டங்களாகவும் இருந்ததோடு முறை மன்றமும் ஏறலாயிற்று.

வள்ளலார் கொள்கை, சாதி சமய வேறுபாடற்ற ஒப்புரவு வழிபாட்டுக் கொள்கை. ஏழை எளிய வறிய கல்லாத மாந்தரையும் கவர்ந்தது. அவர்தம் உடையும் நடையும் உருக்கமும் ஒப்புரவும் அவ்வரைக் கண்டவரையெல்லாம் ஆட்கொண்டது. அதனால், வள்ளலார் வழித்தொண்டில் தம்மை ஆட்படுத்திக் கொள்ளல் தம் பிறவிப் பேறு எனக் கொண்டனர்.

02.02.1867 (அட்சய, தை, 22, சனி) ஆம் நாள் இனாம் பத்திரம் ஒன்று எழுதப்பட்டது. அது,

இனாம் பத்திரம்

"யிதில் கண்டுயிருக்கிற நிலங்களை சமரச வேத தர்ம்ம சாலைக்காக யினாம் குடுக்கப்பட்டு இதுனடியில் கையெழுத்து வைக்கப்பட்டவர்கள் விவறம் 2.2.67 ஹ"

முப்பத்து ஒன்பது பேர்களில் இருபது பேர்கள் 'கீறல்', 'கைனாட்டு', மற்றவர்கள் கையெழுத்து கயிஎழுது, கையிஎழுது, கெயிழுது, கையியெழுத்து என வருவன.

அறுனாசல செட்டி
னாறாயணன் பசி
கொமறசாமி படயாசி

இவை அவர்கள் பெயர்களுள் சில (னா, றா பத்திரத்தில் பழைய வடிவே) "ஒரு செண்டு ஒரு லிங்சு, இரண்டு செண்டு மூன்று லிங்சு, ஒரு செண்டு, இரண்டு செண்டு எனக் கொடுக்கப்பட்டவை ஐம்பத்தெட்டு ஏக்கர் எட்டு செண்டு. தீர்வை இருபத்து ஐந்து பேர் மூன்று அணா பத்துச்சல்லி"

இத்தகவல் எதற்காக? வள்ளலாரை வாழ்வியல் வழிகாட்டியாகக் கொண்டு தம் வாழ்வுரிமைக்கென இருந்த

கையகல, காலகல இடங்களையும், நெஞ்சகலத்தால் உருகி வழங்கிய ஒப்பரிய கொடையை இந்நாள் சமயத்தரும் வழிகாட்டியரும் உணர வேண்டும் என்பதற்கேயாம்.

வள்ளலார் பொதுமை நெறி, சமயவாணரால் ஏற்றுப் போற்றப்பட்டிருக்குமானால், தமிழகம் உலகுக்கு ஒரு சமயப் பொதுமை விளைநிலமாகவே விளங்கியிருக்கும். ஆனால் அப்பொதுமையைத் திருமடங்கள் திருக்கோயில்கள் எவையும் ஏற்கவில்லை.

வள்ளலார் சிதம்பரத்தை விடுத்து உத்தரஞான சிதம்பரம் உருவாக்கிக் கொண்டது போலவே, வள்ளலார் மேல் உள்ளம் பதிந்தவர்கள் அவரவர்கள் நிலைக்கும் வாய்ப்புக்கும்தகப் புதுவதாக வழிபாட்டிடங்களை உருவாக்கிக் கொள்ளவே முடிந்தது.

வள்ளலாரைப் பற்றிக் கொண்டவர்கள் பெரிதும் சிவனிய வழிபாட்டாளர். ஆதலால் சிவனியமும் பொதுமையும் இணைந்து நிற்கும் நிலையே காணப்படலாயிற்று. வள்ளலார் உருவாக்கிய வடலூர் ஞானசபை வழிபாட்டு முறையே தடம்மாறிப் போகும் நிலை ஏற்பட்டுவிட்டதெனின், இரங்கத் தக்கதேயாம். வள்ளலார் கொள்கை அழுந்திய சமயப் பற்றாளர் சிலரை அசைத்தாலும், அவ்வசைவு வள்ளலார் மேல் கொண்ட பற்றுமையாக நின்றதே யன்றிச், சமயப் பொதுமையாயிற்று இல்லை. அவர்கள் மடங்களிலோ அமைப்புகளிலோ இடம்பெறக் கூடவில்லை.

1882இல் பாரதியார் தோன்றுகிறார். 1921 வரை வாழ்கிறார். நடுமைக்கும் குறைந்த காலமே வாழ்ந்தாலும் அவர் வாழ்ந்த காலம் எழுச்சிமிக்கதாக அமைந்தது. நாட்டுப்பற்று, நாட்டு விடுதலை, நாட்டு மொழி என்பவை பற்றி நாடு அதற்குமுன் இல்லாத அளவு எண்ணத் தொடங்கிய காலம் அது. அச்சும், இதழும், செய்தி ஊடகங்களும், போக்குவரவும், கல்விக் கூடங்களும், மேடைப் பொழிவும் எல்லாம் உணர்வாளரைத் தட்டியெழுப்ப வல்லதாய் அமைந்தன. உலகப் பரப்பில் விடுதலை நாட்டம், புரட்சி, பொதுமை, மக்களாட்சி என்பன அரிய தூண்டலாயின.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை உணர்ந்து, நாடே திரண்ட விடுதலை வேட்கை நிலையிலம், அதன் பயன் எய்தும் தோற்றம் தொடங்கவே, சமயமும் நெறிமை நீங்கி, வெறிமைப் பட்டுவிட்டது.' ஒன்றுபடுத்த வேண்டித்தம் உயிரைத் தந்த உரவோர் பாடும், நாட்டில் அசைவை உண்டாக்கவில்லை! மேலும் மேலும் ஏறும் மதவெறியாகவே ஆட்டம் போடுவதாயிற்று!

நாட்டுத் தொண்டோடும் தொண்டரோடும் தெற்கிலும் வடக்கிலும் கலந்து நின்றவர் பாரதியார். உணர்ச்சிப் பிழம்பாக

நின்று உரையாலும் பாட்டாலும் நாட்டைத் தட்டி எழுப்பியவர் அவர்! அவர், 'காளிதாசர்' 'சக்திதாசர்' தாம்! ஆனாலும், அவ்வட்டத்தைக் கடந்து நிற்றலும் கட்டாயம் தேவை என்பதை உணர்ந்தார்.

வள்ளலார் தம் பாடலிலே வழிகாட்டியிருந்தார். அனுபவ மாலையில் தலைவி கூற்றாகப் பாடும் பாடல்களுள் ஒன்று.

பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை என் கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர்புத்த ராதி என்பேன்; அயன் என்பேன், நாரா
யணன் என்பேன்; அரன் என்பேன், ஆதிசிவன் என்பேன்;
பருகுசதா சிவம் என்பேன்; சத்திசிவம் என்பேன்
பரமம் என்பேன்; பிரம்மம் என்பேன்; பரப்பிரம்மம் என்பேன்;
துருவுசுத்தம் பிரமம் என்பேன்; துரிய நிறை வென்பேன்
சுத்தசிவம் என்பனின் சித்துவிளை யாட்டே (5801)

இவ்வாறே பொதுமை சுட்டும் மரபு தமிழ் மண்ணில் கிளர்ந்தது. பாரதியார்,

தெய்வம் பலபல சொல்லிப் பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்ய தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர்பொருளாவது தெய்வம்'

என்று ஓங்கிக் குரல் கொடுத்தார் (முரசு - 11). அருகர், புத்தர், இயேசு, அல்லா என எல்லாரையும் பாடினார் காளி, மாரி, கண்ணன், முருகன், வள்ளி எனவும் பாடினார். அவரே, "காடனை வேடனை மாடனை வணங்கும் மதியிலியீர்" என்றார்.

ஏன் இப்பன்னிலை? பன்னிலை ஒன்றும் பாழில்லை. அவை ஒவ்வொன்றும் தன்னிலை கெட்டு மற்றொன்றொடு முட்டி மோதுநிலையே நன்னிலை இல்லாதது! தன்னிலையில் இயங்கி மற்றதை எதிரிடா நிலையில் கோள்கள் எவ்வாறு 'ஒன்றனுக்கு ஒன்று நின்று' ஊறிலா ஒளியியக்க வட்டமாகிறதோ அதுபோல, உலகியக்க வட்டமாகும் எனக் கருதுகிறார். அதனால், ஒளவையார் வழியில் ஆத்தி சூடி இயற்றிய பாரதியார், குழந்தைமைப் பருவத்திலேயே தெய்வமைக் குறிக்கோளில் பெருநெறியாராக விளங்க வேண்டுமென அவாவி, ஆத்திசூடி இறைமையைப் பாடுகிறார்.

ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண்மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்

மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துலா ராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே: அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்

என்கிறார். நாட்டு விடுதலைப் போராட்டத்தின் முடிவில் கிளர்ந்த மதவெறி அணையவில்லை; நீற்றுப்போய்விடவில்லை. கொழுந்து விட்டு எரியவே ஆயிற்று. வடக்கில் எரிந்தால் தெற்கில் எரிய எவ்வளவு காலம் வேண்டும்? செய்தி ஊடகமாம் கடுங்காற்று கடிதே மூட்டி எழுப்பவே செய்யும். அந்நிலையில் சமயச் சால்பை நாட்டுப் பற்றாளர் நல்லோர் சான்றோர் வலியுறுத்தல் கடமையாயிற்று.

மலரின்மேல் தேவ னாகி
மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி
மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப்
பற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும்
பரமனார் பெருமை போற்றி

என்றும்,

அல்லாவாய்ப் புத்த னாகி
அரனரி பிரம்ம னாகி
அருளுடைச் சமணர் தேவும்
அன்புள்ள கிறிஸ்து வாகிக்
கல்லாத மனத்திற் கூடக்
காணாமல் இருப்பார் அந்தக்
கடவுளென் றுலகம் போற்றும்
கருணையைக் கருத்தில் வைப்பாம்

என்றும் விடுதலைக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கனார் பாடினார். அவரே மேலும், பொதுமை வழிபாட்டுத் தேவையை வலியுறுத்தினார்.

அல்லா என்பார் சிலபேர்கள்;
அரனரி என்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்;
சொல்லால் விளங்கா நிர்வாணம்
என்றும் சிலபேர் சொல்வார்கள்;

எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம் நினைந்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவரெதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போமதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்

என்றும் பாடினார். வள்ளலார் நெறிக்கு மேல்விளக்கமும் மெய்ச் சான்றும் போல விளங்கிய பெற்றியர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. சமரச சன்மார்க்கம், சன்மார்க்கப் பொதுமை, இராமலிங்கர் திருவுள்ளம் எனப்பல நூல்கள் இயற்றினார்; பொழிந்தார்.

காலமெல்லாம் சிவனியராகக் காட்சி வழங்கியும் வாழ்வில் துலக்கியும் வந்த அவர், கிறித்து மொழிக் குறள், கிறித்துவின் அருள் வேட்டல், நபிகள் அருள்வேட்டல், புத்தர் அருள்வேட்டல், முருகன் அருள்வேட்டல், சிவனருள் வேட்டல், திருமால் அருள்வேட்டல், புதுமை வேட்டல், பொதுமை வேட்டல், அருகன் அருகே எனச் சமயச் சால்பிலே நின்றார். அவ்வச் சமய நூல்தோய்வும், அவ்வச் சமயச் சார்பும் கொண்டும் விளங்கினார். அவர்தம் சால்பால் சார்புகள் தாமும் சால்புநிலைப்பட்டுப் பொதுமை கமழ்ந்தன! நல்ல சமயம் நாத்திகம் வெறாது என்பது திரு.வி.க. மணிமொழிகளுள் ஒன்று.

# 7. தமிழர் சமய ஆய்வர்

தனித் தனிச் சமய ஆய்வர் எண்ணற்றோர். இவண் அவர் எண்ணப்பட்டார் அல்லர். **தமிழர் சமயம்** என்ற அளவில் ஆய்ந்து நூல் வரைந்தார் தம் ஆய்வு பற்றியது இது.

**"தமிழர் மதம்"** என நூல் இயற்றியவர் இருவர். ஒருவர், **மறைமலையடிகளார்,** மற்றொருவர், **பாவாணர்.**

**"தமிழர் சமயம்"** என நூல் வரைந்தவர் **கா.சு.பிள்ளை** எனப்படும், கா. சுப்பிரமணியபிள்ளை.

**"தமிழர் சமயம் எது?"** என்றொரு சிறு சுவடி அறிஞர் ந.சி. கந்தையா அவர்களால் இயற்றப்பட்டது.

தமிழர் சமய ஆய்வர் என்னும் இப்பகுதியில், மறைமலையடிகளார், கா. சுப்பிரமணியனார், ந.சி. கந்தையா என்னும் மூவர் நூல்களும் வேண்டுமாற்றான் பொருளுக்குத் தகச் சுட்டப்படுகின்றன.

**தமிழர் மதம் – மறைமலையடிகள்**

சென்னை மாநகரில் நிகழ இருந்த **அனைத்திந்திய தமிழர் மத மாநாட்டின்** தலைமையுரையை எழுதி அச்சிட்டு வெளி யிட்டால் பெரிதும் பயன்படும் என அம்மாநாட்டு அமைச்சர் வேண்டிக் கொண்டவாறு எழுதப்பட்ட நூல் தமிழர் மதம்.

> இந்நூல் தமிழையும் தமிழர் தம் மதத்தையும் பற்றி நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆராய்ந்த ஆராய்ச்சியின் முடிபுகளை மிகச் சுருங்காமலும் மிக விரியாமலும் நன்கு விளக்க வேண்டும் அளவுக்கு விளக்கிச் செல்வதாகும்.

என்றும்,

> தமிழ்ப் பழமக்களின் கொள்கைகளில் யாம் எடுத்து விளக்குதற்குப் புகுந்த ஒவ்வொன்றிற்கும் தொல்காப்பியம் முதலான மிகப்பழைய தமிழ் நூல்களில் இருந்தும், அங்ஙனமே மிகப் பழைய இருக்குவேதம் முதலான வடநூல்களிலிருந்தும், பண்டைத் தமிழர்தம் கொள்கைகளின் உண்மையை உரம்பெற நாட்டும் இஞ்ஞான்றை ஆங்கில அரும்பெறல் நூல்களில்

> இருந்தும் வலிய சான்றுகள் எடுத்துக் காட்டியிருக் கின்றேம். ஆதலால், யாம் இதன்கண் விளக்கி யிருக்கும் பொருள்கள் அத்தனையும் **மிகப் பழைய இயற்கைப் பொருள்களேயல்லால், முன் இல்லாத புதிய வாய்முளைத்த பொருள்கள்** அல்லவென் றுணர்தல் வேண்டும்.

என்றும் அடிகளார் தம் முகவுரையில் குறிக்கிறார். கடவுட் பற்றாளர் பொழிவுக் கருத்தைப் பாராட்டியதோடு கடவுள் நம்பிக்கை இல்லாதார் சிலரும் எம்பாற் போந்து **“கடவுட் அறிவுச் சுடர்” என்னும் இக்கொள்கை எங்கட்கும் ஏற்றதொன்றே யாம் எனக் கூறி மகிழ்ந்தனர்** என்றும் அடிகள் எழுதுகிறார்.

நூலைத் ‘தமிழர் இன்னார் என்பது’ தொடங்கிச் சீர்திருத்தக் குறிப்புகள் ஈறாக **முப்பத்தைந்து** தலைப்புகளில் முடித்துள்ளார்.

**மதம் இன்ன தென்பது பத்தாம் தலைப்பு**

> கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல்களில், **மதம்** என்னும் சொல் **கொள்கை** என்னும் பொருளில் வருதலைக் காண்கிலேம். புறநானூறு, பரிபாடல், பத்துப்பாட்டு முதலான பழைய இலக்கியங்களில் ‘மதம்’ என்னும் சொல் வலிமை, செருக்கு, அறியாமை, அழகு முதலான பொருள்களில் வருகிறதேயன்றிக் கொள்கை என்னும் பொருளில் வரவில்லை.
>
> மணிமேகலையிலும் கூடச் **சமயம்** என்னும் சொல் வந்திருக்கிறதேயன்றி அதற்கு ஈடான மதம் என்னும் சொல் வரவில்லை. கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பாதியில் தோன்றிய மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசக காலத்தில் இருந்துதான் மதம் என்னும் சொல் கொள்கை என்னும் பொருளில் இன்று காறும் வழங்கி வருகின்றது

என்று கூறும் அடிகள்,

> ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னே இத் தென் **தமிழ்நாட்டின் கண்ணே பல்வகைச் சமயப் பகுப்புகள் பல்வகை மத வேறுபாடுகள் இருந்திலாமை தெற்றென விளங்கும்**

என்கிறார்.

> ஒருசார் கொள்கையினையுடையார் பிறிதொருசார் கொள்கையினையுடையாரிடமிருந்து தம்மை **வேறுபிரித்துக் காட்டுதற்குச்** சைவர் என்றும், வைணவர் என்றும், பௌத்தர் என்றும், சமணர்

> என்றும், உலகாயதர் என்றும், மாயாவாதிகள் என்றும் **சமயப் பெயர்கள் கொடுத்து வழங்கினர்**

என்கிறார்.

> உலகம் உடல் சேர்க்கைகள் இன்பமாக இருத்தலால்தான், 'சாவு' என்றால், நெஞ்சம் நடுநடுங்கிக் கலுழ்கின்றனர். இதனால், பிறவியை விரும்புதல் புலப்படும். **இஃது அறிவும் இன்பமும் பெறுதற்கு ஓர் ஒப்பற்ற கருவியாய் இருத்தல் பற்றியேயாம்.**

என்றும்,

> நமக்கு ஆகாத உயிர்களின் பிறவியை அழித்து விடுதல் எவ்வளவு தீயது என்பது, நம்மைப் பிறர் அழிக்க வருங்கால் அன்றோ நடுக்கத் துடன் நமது உணர்வுக்குப் புலனாகின்றது. ஆகவே, எந்த உயிரின் பிறவியையும் அழியாமல் நமது பிறவியின் பயனை நாம் அடைய முயலுதலே நமக்கும் பிறர்க்கும் அறிவையும் இன்பத்தையும் பெருகச் செய்தற்கு ஏற்ற வழியாகும்.

என்கிறார் அடிகளார். தமிழர்தம் **கொல்லா அறச்சிறப்பினை** விரித்துரைக்கிறார்.

**காதலன்பின்** சிறப்பினை விரியக் கூறும் அடிகள், பன்மனைவியர் மணம், பின்முறை மணம், மறுமை என்பவற்றை விரிக்கிறார். ஓரறிவுடைய புல் பூண்டு முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறான எல்லா உயிர்களிலும் **தாய் தந்தை அமைப்பே** அமைந்து கிடத்தலை ஆய்ந்து விளக்குகிறார் அடிகள்.

> உயிர்களின் ஒழுக்கங்கள் எல்லாம் அறிவினால் நடைபெறு கின்றன. அறிவும் உயிரும் இல்லாதன படைப்புத் திறம் அற்றன. உயிர்களிற் காணப்படும் தாய்தந்தை அமைப்பிற்கு, அளவற்ற அறிவும் ஆற்றலும் அமைந்த ஒரு பேருயிரே வினைமுதலாம்; அம்முழு முதற்கடவுளும் ஆண்பெண் ஒன்று கூடிய இயற்கையதாகவே இருத்தல் வேண்டும்

என்கிறார். எகுபதியர், பாபிலோனியர், எபிரேயர் முதலியோர் கடவுளை அம்மையப்பர் வடிவாகவே வைத்து வழிபட்டு வந்ததை உரைக்கிறார். இறைவன் வடிவு **ஒளிவடிவு** என்பதை விளக்கும் அடிகள்,

> ஒளியில் அமைந்துள்ள சிவந்த நிறமும் நீல நிறமும் **ஆண் பெண்** தன்மைய என்னும் தீயின் தன்மை

> கடுந்தன்மை; நீரின் தன்மை குளிர்ந்த தன்மை ஆதலால் அவை ஆண் தன்மை பெண் தன்மை என்றும், அதனாலேயே சிவன் 'சேயோன்' என்றும், 'நீலமேனி வாலிழை' என்றும் கூறினர்.

என்றும் கூறி, ஒளிவடிவு 'சிவமும் உமையும்' என முடிக்கிறார். சிவன் சேயோன் போல, நீலநிற அம்மை 'மாயோன்' எனப்பட்டதையும், மாயோள், 'மாயோன்' என்று ஆகிச் சைவம் வைணவம் என்றாகிய வகையையும் உரைக்கிறார்.

தமிழர்க்குப் பண்டைநாளில் ஒன்றாயிருந்த கடவுட் கொள்கை பின்னர் இராண்டாயதூஉம் அவ்விரண்டும் கி.பி. முதல் நூற்றாண்டில் இருந்து சைவம் வைணவம் எனப் பெயர் பெறலாயதூஉம் ஆகியவற்றை உரைக்கிறார்.

> ஆண்மையும் பெண்மையும் - செம்மையும் கருமையும்- வெம்மையும் தண்மையுமாய் ஒப்பிலாத் திறத்தோடு அமைந்த ஒருமைச் சமயக் கொள்கைகள் பின்றைக் காலத்தில் சைவம் வைணவம் எனப் பெயர் கொண்ட இருமதங்களிலன்றி வேறெவற்றிலும் காணப்படாமையால் இவ்விருமதங்களுமே தமிழர் மதமாகுமன்றி, வேறெதுவும் தமிழர் மதமெனப் பெயர் பெறுதற்குச் சிறிதும் உரிமையுடையது ஆகாது

என்று உறுதிப்படுத்துகிறார்.

பௌத்த சமயத்தை விரிவாக ஆராயும் அடிகள்,

> பௌத்தம் தமிழர் மதமெனத் தழுவுதற் கண் இழுக்கே தும் இலதேனும், புத்தர்க்குப் பின் பௌத்தமதப் பெயரால் வெளிவந்தார் பலரும் முதலாசிரியர் கொள்கைக்கு முழுமாறாய் இல்வழக்கே (சூனியவாதமே) பேசுதலின் அவரது பௌத்த மதத்தைத் தமிழர் மதம் எனக் கூறுதல் ஒவ்வாது

என்கிறார்.

> மகாவீரர் கொள்கையை ஆராயும் அடிகள், கொல்லாமை புலாலுண்ணாமை ஆகிய சைவ சமய ஒழுக்கங்களையே கொண்டாலும், பிற்காலத்துச் சமண்சமயத்தார் கடவுள் வழிபாட்டைக் கைவிட்டுத் தம் முதலாசிரியரான மகாவீரரையே கடவுளாக வைத்து வழிபடுதலால் இப்பிற்காலத்துச் சமண்மதமும் தமிழர் மதமாதற்கு உரியது அல்லாதது ஆயிற்று

என்கிறார்.

> ஒரே முழுமுதற் கடவுள் வணக்கத்திற் கடைப்பிடியாய் நிற்றலில் கிறித்தவரும் மகமதியரும் பண்டைத் தமிழரோடு ஒப்பராயினும், பண்டைத் தமிழர்க்கு இரண்டாவதாய்ச் சிறந்த கொல்லாமை புலால் உண்ணாமை என்னும் அருள் ஒழுக்கங்களை அவ்விருவரும் கடைப்பிடித்து நடவாமையாலும், உயிர்களுக்கு முற்பிறவி பிற்பிறவி உண்மையினையும், ஊழ்வினை உண்மையினையும், அவர் உடம்படாமை யாலும் இறைவனது திருவுருவ வழிபாட்டை அவர் மறுத்தலாலும் அவரிருவரும் பண்டைத் தமிழர் மதத்திற்குப் புறம்பாகவே நிற்கவேண்டியவர் ஆயினர்

என்கிறார்.

> சிற்றறிவுடையராய்ப் பிறப்பு சிறப்பிற் பட்டுழலும் மக்களை எத்துணைதான் கடவுளாக உயர்த்தி வழிபடினும், அவர்கள் கடவுளாய் விடுவரோ?

என்று வினாவி ஒதுக்குகிறார்.

கோயில், வழிபாடு, திருமணம், விழா, சீர்திருத்தம் என ஆய்வை நிகழ்த்தி நிறைவிக்கிறார் அடிகள்.

அடிகளை ஒற்றிய காலத்தில், ஒன்றிய சைவத்தில், ஒன்றிய கருத்தில் இருந்த அறிஞர் கா.சு. பிள்ளை அவர்கள், தமிழர் சமயம் என எழுதிய நூல் அனைத்திந்திய தமிழர் மத மாநாட்டு வரவேற்புரையை முதற்கண் கொண்டது. மாநாடு சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் நிகழ்ந்தது (1940).

அந்நூலுக்கு மதிப்புரை வழங்கும் மறைமலையடிகளார்

> யான் சென்ற 40 ஆண்டுகளாக ஆராய்ந்தெழுதியிருக்கும் என்னுடைய நூற்பொருள்களை அவர்கள் தழுவியே எழுதியிருத்தலால் அவர்கட்கும் எனக்கும் பெரும்பாலும் கருத்து வேற்றுமையே இல்லை.

என்கிறார்.

பொது மறையிற் திருக்குறளில் காணப்படுவதே தமிழர் சமயம் என்கிறார் கா.சு.

> ஆணும் பெண்ணுமாகக் கடவுளை வழிபடுதல் ஆதியில் தமிழர்க்கே உரியது. காளி வணக்கம் தமிழர்க்கு உரியது என்றே வடநாட்டில் கருதப்படுகின்றது. அம்மையின் ஆண் வடிவமே திருமால்; முருகனும் பிள்ளையாரும் தமிழர் தெய்வங்களே; முழுமுதற் கடவுளின் உண்மையும் தன்மையும் உணர்ந்து

> அருவமாக வழிபடக் கருதிய தமிழர் அவருடைய எண்குணங்களையும் நினைந்து அவரைத் தொழுதனர்; அந்நெறியே தமிழர் செந்நெறியாகும். அது திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் குறிப்பிக்கப்பட்டது. கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் முதல் **எட்டுக் குறள்களில் இறைவனின் எண்குணங்களையும்** முறையே கூறி ஒன்பதாவது குறளில் எண்குணங்களையும் தொகுத்துச் சுட்டிப் பத்தாவது குறளில் இறைவணக்கத்தின் இன்றியமையாமையைப் பயன் கூறும் முகத்தால் கூறினார். ஒவ்வோர் ஊரிலும் **தமிழர் சமய சங்கம்** நிலையிட்டுக் குறித்த நேரத்தில் தமிழர் சமயத்தார் எல்லாம் கூடி இறைவனுடைய குணநலன்களை ஒருங்கு நினைத்துப் பாடல் ஓதுதல் நலம்

என்றின்ன கருத்துகளை மாநாட்டு வரவேற்புரையில் கூறுகிறார். சீர்திருத்தங்கள் என்பதில்,

> தமிழ் மக்கள் பிறந்த நாள் தொடங்கி இறக்கும் வரையும் அதற்குப் பின்னும் செய்ய வேண்டிய எல்லாச் சடங்கு களையும் தமிழ்முறைப்படி **தமிழிலேயே தமிழ்க் குருக்கள்மாரைக் கொண்டே செய்வித்தல் வேண்டும்**

என்றும்,

> பல இனங்களும் உணவாலும் மணத்தாலும் இணைக்கப் படின் தமிழர் என்ற உணர்ச்சி தலையெடுத்து வெவ்வேறு குலமக்கள் குலப்பெருமை பாராட்டும் வழக்கம் தளர்வடையும். நடைஉடை பாவனைகளிலும் தூய வழக்கங்களிலும் ஒரு தன்மையான முறை பல இனத்தாருள்ளும் ஏற்படுமாயின், இனவேற்றுமை உணர்ச்சி விரைவில் ஒழிந்து போம்

என்றும் கூறுகிறார்.

"தமிழர் யார் எனில், **தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் யாவரும் தமிழரே**" என்று கூறி விரிய விளக்குகிறார்.

உழவு, வணிகம், உடை, கலை, அரசு எனத் தமிழர் பெற்றிருந்த நாகரிக நிலை, நாட்டியக்கலை, இசைக்கலை என்பவற்றை உரைத்துச் சமயக் கலையை விரிக்கிறார் கா.சு.

> **சமையம்** என்பது சமைக்கப்பட்டது என்ற பொருளில் ஒரு தெய்வத்தை வழிபடுவதற்கு வகுக்கப்பட்ட நெறியினைக் குறிப்பதாகும். சமையம் என்ற சொல் '**சமயம்**' என்று மருவிற்று

என்கிறார்.

> ஒருகாலத்தில் தமிழ் ஆரியக் கலப்பே இல்லாமல் இருந்தது. பின்னர் ஆரியர் வரவால் மொழிக் கலப்பு ஏற்பட்டது. தமிழர் தங்கள் கருத்துகளை வடமொழியில் கூறுதல் நெடுநாள் வழக்கமாயிற்று. புதுமை, தோற்றம், பொலிவு முதலிய காரணங்களால் அவ்வழக்கம் ஏற்பட்டதாகும். இதனை நன்கறிந்த **டாக்டர் சிலேட்டர், ஆரியர் எல்லாம் நாகரிகத்தால் திராவிடராயும், திராவிடர் எல்லாம் மொழியளவில் ஆரியராயும் ஆயினர்** என்றார்.

என்கிறார்.

> இறந்த **தாய் தந்தையரை** மக்கள் தொழத் தொடங்கினர். அவர்களை அடக்கம் செய்த இடத்தில் **கல்நாட்டி,** அக்கல்லில் அவர்கள் உறைந்து நலந்தருவதாக நம்பி வழிபட்டனர். கடல் கொண்ட தென்னாட்டுத் தொன்மக்களில் ஒரு பிரிவார் பன்னிரண்டு முதல் பதினைந்து அடி உயரம் உடையவராய், முன் தலையின் நெற்றிப்பகுதியில் கண் போன்ற ஓர் உறுப்பு உடையவராய் விளங்கினர். அவரைப் போற்றி வழிபட்ட வழிபாடே **முக்கண்ணன்** வழிபாடாக முகிழ்ந்தது

என்கிறார்.

சிவன் என்பது தமிழ்ச் சொல் என்பதையும், ஆரியர் தென்னாடு வருமுன்னரே சிவவழிபாடு தென்னாட்டில் விளங்கியது என்பதையும், சிவ என்பது செம்மை, நன்மை, மங்கலம் என்று பொருள்படும் என்பதையும், தமிழர் குறிஞ்சி நிலத்தில் இருந்தபோதே அவ்வழிபாடு ஏற்பட்டுவிட்டது என்பதையும் குறிக்கிறார். பெற்றோர் வழிபாடு அம்மையப்பர் வழிபாடு ஆகியதையும் அவ்வழிபாட்டின் முதிர்வு **கதிரவன் வழிபாடு** ஆயிற்று என்றும் சுட்டுகிறார்.

கதிரவ வழிபாடு முருகு வழிபாடாகவும் சிவ வழிபாடாகவும் ஆகியதையும் உரைக்கிறார். **சேய், மகன், சிவப்பு** எனப் பொருள் தருதலை எண்ணுகிறார்.

> யானைகள் மிக்குள்ள நாட்டிலேதான் யானைமுகர் வழிபாடு தோன்றி இருக்கவேண்டும். தென்னிந்தியாவில் அல்லது மேலை இந்தியாவில் முருகு **வழிபாடு தோன்றுதற்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டும். அதனால் மூத்த பிள்ளையார் எனப்பட்டார்.**

என்கிறார்.

> கதிரவனை இடமாகக் கொண்ட சிவபெருமான் செம்மையிலான அச்சம் விளைக்கும் **தந்தைத் தெய்வமாகக்** கருதப்பட்டபோது, தண்ணளியுடைய தாய்த் தெய்வத்தின் வடிவம் தண்ணீராகக் கருதப் பட்டது. ஆழமுள்ள தண்ணீரின் நிறம் நீலமாதலின் தாய்த் **தெய்வத்தின் நிறமும் நீலமாயிற்று**.
>
> சிவம் என்ற சொல் முழுமுதற் கடவுளைக் குறிக்கப் பயன்பட்டபோது எங்கும் நிறைந்திலங்கும் கடவுளின் ஆற்றல் **சக்தி** எனப்பட்டது. கடவுள் தன் ஆற்றலினால் எல்லாம் செய்வது உயிர்கள் மேல் வைத்த அருள் காரணமாம் என்ற கொள்கை எழுந்தபோது **சிவசக்தி அருளெனவும் தாயெனவும்** வழங்கப்பட்டது.
>
> கதிரவனைச் சிவத்திற்கு உவமையாகவும், அவன் ஒளியைச் சத்திக்கு உவமையாகவும் வழங்கியபோது, அவ்வொளி பரவிய இடமாகிய **விண்ணும்** சத்திக்குப் பேராயிற்று. **விண்ணு** என்ற பெயரே, **விண்டு** எனவும் **விஷ்ணு** எனவும் மாறிற்று.
>
> இருளடைந்த பொழில்களில் வணங்கப்பட்ட தாய்த் தெய்வத்திற்குக் கருநிறம் பேசப்பட்டது. **மாயோள்** என்ற தமிழ்ச் சொல் கருநிறமுடையவள் என்று பொருள்படும். மாயோள் ஆண்வடிவமாகத் தொழப்பட்டபோது **மாயோன்** என்ற சொல் வழக்கத்திற்கு வந்தது. காடுகள் அடர்ந்த முல்லை நிலத்திற்குரிய தமிழ்த் தெய்வம் ஆதியில் மாயோளாய் இருந்து பின்மாயோன் ஆயிற்று.

தமிழர் சமயம் என்பது **சிவனியம் மாலியம் என்னும் இரண்டுமே என அழுத்தமாகக் கூறும் கா.சு. இரு சமயப் பொதுமையை விளக்குகிறார்:**

> முழுமுதற் கடவுளாம் இறைவன் மூவராலும் அறிய முடியாதவன்; இறைவன் அறிவு வடிவானவன்; இறைவன் உயிர் போலவும் பாலில் நெய் போலவும் கலந்திருப்பவன்; உயிர்களும் உலகமும் இறைவனின் உடைமைகள்; இருள்வினை மருள் என்னும் மூவகைப் பாகங்களும் உயிர்க்கு உள்ளமை; இறைவனைக் குருவனாக வழிபடல் - இன்னவை எல்லாம், இரு **சமயங்களுக்கும் ஒப்பாக இருத்தலை**

விளக்குகிறார்.

மாலிய நெறியிலும் முற்படத் திருநீறே திருப்பொருளாக விளங்கியதையும் நாலாயிரப் பனுவல் சான்று கொண்டு விளக்குகிறார்.

தமிழரது அறுசமயமும் ஒரு சமயமே. பிரிந்த மால் சமயத்தை மீட்டும் இணைத்துக் கொள்வதே நமது கடமையாகும் என்று தமிழர் மத இணைப்புக்கு வழிகாட்டுகிறார்.

> சைவம் வைணவம் என இரு பிரிவடங்கிய ஒரு சமயத்தைத் தமிழர் சமயமென்று கருதி அதனைத் தமிழ்மக்கள் போற்றுவாராக

என்கிறார்.

> 'வைதிகமும் தமிழர் சமயமும்' என்பதை விரிவாகவே ஆய்கிறார் ஆங்கிலமதம், சப்பானிய மதம், அமெரிக்க மதம் என்று மதங்கள் இல்லாமை போல இந்துமதம் என்றொரு மதமும் இல்லை

என்கிறார்.

> வேத வாக்கியங்களுக்கு, சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஏற்ற முறையில் பொருள் கொள்ளுதல், பைபிளுக்கும் குரானுக்கும் சைவ வைணவப் பொருள் கொள்ளுதல் போலாகும்

என்கிறார்.

தமிழர் மெய்க்கலையை உயிர், மெய், உயிர்மெய் முதலாக விரிய விளக்குகிறார்.

சாதிப் பிரிவுக்கேடு, வழிபாட்டு மொழி, சடங்குமொழி, கோயில் தூய்மை, கோயில் சூழல், தொண்டு, திருமடம், மகளிர், பெண்ணின் பெருமை, ஒப்புரிமை, குடும்பக் கட்டுப்பாடு, ஓரினம், சட்டம், சங்கம் எனப் பல்வேறு தலைப்புகளில் சீர்திருத்தக் குறிப்புகளை வைத்துள்ளார் கா.சு. கைம்மை மணம் கலப்பு மணம் என்பவற்றைப் பழவடியார் வரலாறு கொண்டு விளக்குவது நுண்ணிய பார்வையாம். வெவ்வேறு சமயத்தார் தம்முள் மனம் கொள்ளலும் தமிழர் நெறியே என்பதற்கும் சான்று காட்டுதல் அருமையுடையதாம். நல்ல சீர்திருத்தங் களுக்கும், தேர்ந்த பகுத்தறிவும், அரிய பெரிய தொண்டுக்கும், ஒப்புரிமை வாழ்வுக்கும், சமயம் அல்லது மதம் தடையாயது இல்லை! அத்தடைகள் உண்டாயின், அவற்றைச் சீர்திருத்திச் செம்மையில் நிலைநிறுத்துதலே சமயச் சார்பினர், சமயச் சால்பினர் கடமை என்றும் மறைமலையடிகள் எழுதிய தமிழர் மதத்தாலும், கா.சு. எழுதிய தமிழர் சமயத்தாலும், ந.சி.க. வரைந்த தமிழர் சமயம் எது? என்பதாலும் நன்கு உணரலாம்' நம்பா மதமும் ஒருமதமே; நம்பா மதத்தரும் கண்மூடித்தனம் சடங்குகள் அற்ற சமய-கடவுள்-கொள்கைகளுக்கு மாறானவர் அல்லர் என்பதும் இவர்கள்

நூல்களால் விளங்கும். மேலே நாம் எண்ணுவது ஈழத்துப் பேரறிஞர் **ந.சி. கந்தையா** அவர்கள் எழுதிய '**தமிழர் சமயம் எது?**' என்னும் சுவடியாகும்.

ந.சி.க. தாம் நூல் எழுதும் நோக்கை முன்னுரையில் அருமையாக வரைகிறார்.

> இன்று பலவகைக் கிரியைகளோடும் ஆடம்பரங்களோடும் சமயம் என்னும் தலைப்பின்கீழ் நடைபெற்று வருவன சமயத் தொடர்பற்றன. அவை, ஆதிகாலம் முதல் **பழைய மந்திர வித்தைக்காரர் பூசாரிமார்களால்** கையாளப்பட்ட சில பழக்க வழக்கங்களின் நிழல்கள். உண்மையான சமயம் என்பது **உலகம் கடவுள் உயிர்** என்னும் முப்பொருள்களின் இயல்புகளை ஆராய்ந்து அறிவால் உயர்வெய்துவது. இன்று சைவ சித்தாந்தம் என்று வழங்கும் சமயக் கருத்துக்களே வரலாற்றுக் காலத்துக்கு முன்தொட்டுவரும் தமிழரின் மதக் கொள்கைகளாகும் என டாக்டர் போப்பையர் தமது திருவாசக மொழிபெயர்ப்பில் ஓரிடத்தில் கூறியுள்ளார்.
>
> தமிழரின் உண்மையான சமயக் கொள்கை '**ஞானத்தினால் வீடு**' என்பதேயாகும். இன்று மக்கள் '**மூடத்தனத்தினால் வீடு**' என்று சொல்லும்படியாக உழன்று வருகின்றனர். கிரியைகள் புரிவதாலும், பொங்கல், படையல், பலிகள் இடுவதினாலும், குடைகள், ஆபரணங்கள், வாகனங்கள் முதலியவைகளைக் காணிக்கையாகக் கொடுப்பதினாலும், கொட்டு முழக்கு ஆடல்பாடல் முதலிய ஆரவாரங்களோடு விழாக்கள் எடுப்பதினாலும், கடவுளை ஏமாற்றிவிட முடியாது. இவை எல்லாம் மக்களை மேலும்மேலும் அறியாமையில் ஆழ்த்துவன. இவ்வியல்புகளை மக்கள் அறியாதிருக்கும்படி புரோகிதரும் பூசாரிகளும் விழிப்பாய் இருந்து, அவர்களுக்கு நாளுக்கு நாள் அறியாமையை வளர்த்து வருகின்றனர். இவ்வறியாமை ஒழியும் பொருட்டும் சமயம் என்றால் என்ன என்பதை மக்கள் அறியும்பொருட்டும் இச்சிறு நூல் வெளியாகின்றது.

என்கிறார் (சென்னை, 23-01-1947).

இறப்பிலன் அச்சமும், இறந்தார் ஆவி வந்து தீமையும் நோயும் புரிந்துவிடக் கூடாது எனச் செய்யப்பட்ட சடங்குகளும், பலியிடலும் சான்றொடுகூறி, சமாதி, சிறு தெய்வ வழிபாடு குடும்பத் தெய்வ வழிபாடு குடும்பத்தெய்வ வழிபாடு என ஆகியதையும், அதனைச் செய்ய வேலையாட்களும் அடிமைகளும் நியமிக்கப் பட்டதையும், பின்னர்ப் பூசகர் உருவான வகையையும் கூறுகிறார்.

வழிபாட்டிடங்களைப் பேணவும், வழிபாடு வழிவழியாகத் தொடரவும் உரிய வகையில் மானியங்கள் உண்டாவதையும், அம்மானியங்களைப் பூசாரியே சொந்தமாக்கிக் கொண்டதையும் உரைத்து, "சமாதி தெய்வமானபோது பலியிட்டு வழிபடும் பொருட்டு மக்கள் அவ்விடங்களிற் கூடினார்கள். அவை பொதுமக்கள் வழிபடும் இடங்களாயின என்கிறார்.

"மக்கள் தாம் வழிபடும் தெய்வம், தம்மைப் போலமுன் மனித வடிவில் இருந்தது என்பதை இப்போது நம்பமாட்டார்கள்" எனச் சுட்டுகிறார்.

நடுகல், மரம், பாம்பு, தாய், நிலம், ஞாயிறு, தீ என வழிபாடு வளர்ந்த வகையை உரைக்கிறார்.

உலகில் தாயாட்சியே முதலில் இருந்தது. சிறிதுசிறிதாக நிலைமை மாறி, தந்தை ஆட்சி உண்டாயிற்று. அப்பொழுது எல்லாக் கடவுள்களுக்கும் தலைவராகிய ஞாயிற்றுக் கடவுளை ஆண் கடவுளாகக் கருதினர். அதுவே ஞாயிற்றின் வடிவாகிய **'இலிங்கம்'** என்கிறார்.

ஞாயிறு ஆகிய தந்தைக் கடவுளுக்கு 'எல்' என்றும் 'சிவன்' என்றும் இரண்டு பெயர்களை இட்டு உலகளாவிய அளவில் மக்கள் வழங்கியதைச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

முற்கால மக்கள் எல்லோரிடையும் மும்மூர்த்திகள் வழிபாடு இருந்து வந்தது. மும்மூர்த்திகளில் தாய், தந்தை, குமாரன் என்று மூன்று கடவுளரும் அடங்கும். ஆரிய மக்கள் இந்திய நாடு வந்த பின்பு மும்மூர்த்திகள் பிரமா, விட்டுணு, உருத்திரன் எனப்பட்டனர். இது தமிழ் மக்களும் பிறமக்களும் கொண்ட முறை அன்று.

ஞாயிறு, செந்நிறக்கடவுள் ஆதலால் அக்கடவுளை வழிபட்ட பூசாரி சிவந்த நிற உடை உடுத்ததும் அவ்வுடை, அரச குடியினர், அடியார், பெருமக்கள் உடையாகப் பரவியதையும் பின்னர்க் காவியுடை வந்ததையும், புத்தகுருமார் தம்மைப் பிறரினின்று வேறுபடுத்திக் காட்ட மஞ்சள் உடை உடுத்ததையும் எடுத்துரைக்கிறார்.

தேவதாசியர், பலியூட்டு என்பவற்றை உலகளாவிய அளவில் பார்க்கும் அறிஞர், பூசாரிகள் மந்திரவாதிகள் என்பதை நிறுவுகிறார்.

> பொதுமக்கள் உயர்ந்த அறிவுக்குக் கட்டுப்பட மாட்டார்கள். மருந்து மாந்திரீகம் போன்ற வித்தை களுக்கே அடிமைப்படுவார்கள். இதனை முற்காலப் பூசாரி அறிந்து சில தந்திரங்களைக் கையாண்டு மக்களை வசப்படுத்தினான். அவன் மற்றவர்கள்

> **விளங்கிக் கொள்ளாத வகையில் சில கிரியைகளைச் செய்தான்.** மற்றவர்கள் விளங்க மாட்டாத சில சொற்றொடர்களை மந்திரமென முணுமுணுத்தான். அவன் செய்யும் கிரியைகளிலும் சொல்லும் மந்திரங்களிலும் பெரிய வல்லமை இருப்பதாக மக்கள் நம்பினார்கள். இன்னும் நம்பி வருகிறார்கள். நோய்களுக்கு நூல்கட்டுதல், இழை அடித்து மந்திரம் போடுதல், தண்ணீரில் மந்திரம் ஓதிக் கொடுத்தல், தெய்வம் ஏறி ஆடி வெளிப்பாடு கூறுதல் போன்றவை பழமை தொட்டுப் பூசாரிகள் கையாண்டு வரும் தந்திரங்களேயாகும்

என்று கூறும் ஆசிரியர்,

> மக்கட் சமுதாயம் ஈடேறுவதற்கு அறிஞர் இன்று செய்யத்தக்கது, **பூசாரி ஆட்சியை ஒழிப்பதும் மக்கள், சமயம் என்னும் பெயரால் விழலுக்கு இறைத்த நீரை ஒப்பப் பொருளையும் காலத்தையும் விரயம் செய்வதையும் தடுப்பதேயாகும்.** இன்றைய சமயத்தின் முடிவு எத்தத்துவக் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொள்ளாது சோம்பேறிகளாகிய பூசாரிகளைத் கொழுக்க வைப்பதேயாகும்

என வருந்தி எழுதுகிறார். சைவ சமய குரவர்கள் ஒரு தெய்வ வழிபாட்டையே வற்புறுத்தினார்கள் என்னும் ந.சி.க. **தத்துவஞானம்** உதயமாதலை விளக்குகிறார்.

> ஒரு சிலர் உள்ளம் உண்மை காண்பதில் ஆழ்ந்து சென்றது. அவர்கள் தம்மைப் பற்றியும் உலகைப் பற்றியும் இவ்விரண்டையும் இயக்கும் கடவுளைப் பற்றியும் உண்மைகளைக் காண முயன்று வந்தார்கள். **உயிர் உலகம் இறைவன்** என்னும் முப்பொருள் உண்மைகளை அறிந்தார்கள். தாம் அறிந்தவற்றைப் பக்குவம் வாய்ந்த சிலருக்குக் கூறினார்கள். இவ்வுண்மைகள் இவ்வாறு நீண்ட காலம் குரு மாணாக்க முறையில் வந்தன. அவர்கள் பொதுமக்கள் சமயம் எனக் கொண்டு உழலும் புறவிடயங்களில் மனம் பற்றாதிருந்தனர். இவ்வாறு உலகில் இருவகைச் சமயங்கள் நிலவின. **முன்னதைப் புறச் சமயம்** என்று கூறலாம். அதனைத் தேங்காயைச் சுற்றி முடியுள்ள தோலுக்கு ஒப்பிடலாம். **பிந்தியதைத்** தோலின் கீழும் வயிரமான ஓட்டின் கீழும் உள்ள அதன் பருப்புக்கு ஒப்பிடலாம்

என்கிறார்.

முருக வணக்கம், திருமால் வணக்கம், வேந்தன் வணக்கம், காளி வணக்கம், சிவ வணக்கம் என்பவற்றை எடுத்துரைக்கும் ந.சி.க., **திருமந்திரத்திற் கூறப்படும் தத்துவ சாத்திரக் கொள்கைகளே தமிழரின் பழைய மதக் கொள்கைகள் என்பதில் ஐயம் இல்லை** என்கிறார்.

> *இந்தியாவில் வழங்கும் சமய தத்துவக் கொள்கைகள் எல்லாவற்றுள்ளும், சைவசித்தாந்த நூற்கொள்கைகள், மிக விரிவும் சிறப்பும் உண்மையும் அடங்கியுள்ளன. இக்கொள்கைகள் தென்னிந்திய தமிழரின் கொள்கை களாகும். தென்னிந்திய உயர்ந்த மக்களைப் பற்றி அறிய விரும்பும் எல்லோரும் அவைகளைப் பயிலுதல் வேண்டும். சிவமதம் என்பது தென்னிந்திய மக்களின் வரலாற்றுக் காலத்துக்கு முன்தோன்றிய மதம். அது ஆரியர் வருகைக்குமுன் தொட்டுத் தோன்றி வழங்குவது. இக்கொள்கைகள் தமிழரின் உள்ளத்தில் குடி கொண்டுள்ளவை. உலகம், உயிர், நல்வினை, தீவினை, மறுபிறப்புப் போன்ற உண்மைகளை நன்கு எடுத்துக் கூறும் இம்மத உண்மைகள் ஆங்கிலத்தில் இதுவரை வெளியிடப்பட வில்லை. அவைகளைக் கூறும் நூல்கள் தமிழ்மொழியில் மாத்திரம் எழுதப்பட்டுள்ளன*

என்று போப்பையர் கூறுவதை எடுத்துக் காட்டும் ஆசிரியர்,

> **இந்திய நாட்டிலும், இவ்வுலகத்திலும் காணப்படும் மதங்கள் எல்லாம் சிவமதத்தின் வேறுபாடுகளே யாகும்**

என்று உறுதி கூறுகிறார்.

தம் நூலைக் கற்றவரைச் சிந்திக்க வைக்கும் வகையால்,

> மனிதனே உருவங்களை அமைத்து வைத்து, அவைகளைப் பொன்னாலும் மணியாலும் புனைந்து, பின்பு அவைகளைத் திருடர் திருடுவார்கள் எனப் பயந்து, பெரிய பூட்டுக்களாற் பூட்டி வைத்தல் எத்துணைப் பேதமை என்பதை எண்ணிப் பாருங்கள்

என முடிக்கிறார்.

இதுகாறும் கண்ட மூவர் பார்வையும் சிவனியமும் மாலியமுமே தமிழர் சமயம் என்னும் ஒத்த கருத்தில் நின்றமை விளக்கமாம். மூவரும் சிவனிய வழியர் என்பதும், நாளெல்லாம் தமிழ் வாழ்வு வாழ்ந்தவர் என்பதும் பன்னூலாசிரியர் என்பதும் பொதுமைச் சிறப்புகளாம். இனித் தமிழர் 'சமயமுடிபு' பற்றிக் காணலாம்.

# 8. தமிழர் சமய முடிபு

தமிழர் சமயம், சிவனியம், மாலியம் என இரண்டே என்றும், இரண்டும் சிவனிய மாலிய எனப் பிரிவிலா மெய்ப் பொருள் 'ஒருமை' கொண்டவை என்றும், அம்மெய்ப்பொருள் உலகம், உயிர் இறை என முப்பொருள் என்றும், பொதுமக்கள் நடுகல் முதலாகப் படையலிட்டு வழிபட்ட முறை ஒன்று என்றும், புலமக்கள் மெய்ப்பொருள் ஆய்வில் தலைநின்று உணர்த்தியவை ஒன்று என்றும், முன்னது உருவ வழிபாட்டையும் பின்னது அருவ வழிபாட்டையும் உடையது என்றும், அச்சமயம் பிணங்காது இணங்கி இயலல் தமிழ், தமிழர் நலம் என்றும், தமிழே கோயில் வழிபாட்டு மொழியாய் ஆதல் வேண்டும் என்றும், சமயப் புலமையுடையார் குலவேறுபாடு இன்றிப் பூசகராக விளங்க வேண்டும் என்றும் முன்னைக் கட்டுரையில் கண்டோம்.

தமிழர் சமயம் தொல்காப்பியம் ஊற்றுக்கண்ணில் இருந்து, வள்ளுவர் வாய்மொழியில் பெருக்காறாகி விளங்கு கின்றது என்பதும் அவர்கள் முடிபாம்.

'பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்' என்பது மறைமலையடிகளார் நூல்களுள் ஒன்று. அரிதல், அன்பு நெறியே தமிழர் நெறி என்பதை விளக்குகிறார்.

உலக வாழ்க்கையில் மக்கள் எல்லாரும் அடைதற்குரிய உறுதிப் பொருள்களை இன்பமும் பொருளும் அறமும் என்னும் மூன்றாக வகுத்து, அம்மூன்றும் பிரிவின்றிக் கலந்த அன்பினால் ஊடுருவி நிற்றல் வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

> **இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
> **அன்பொடு புணர்ந்த ஐந்திணை**

என்பது அது (களவியல் 1).

தொல்காப்பியனார் வழிவந்த ஆசிரியன்மாரில் தலை சிறந்தவரான தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்,

> **அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு**

என்றும்,

> **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
> **பண்பும் பயனும் அது**

என்றும் அருளிச் செய்தமையும் அவர்க்குப் பின் வந்த சைவ சமயாசிரியரும், சைவ நாயன்மாரும், அவர் தமக்குப் பின் இற்றை ஞான்று வரை இராமலிங்க அடிகள் ஈறாக வந்த சைவப் பெரியார் எல்லாரும் அன்பொழுக்கத்திற்கே தலைமை தந்தமையும் ஒரு தொடர்புபடுத்து நோக்குவோமாயின், தொன்றுதொட்டு இன்று காறும், நம் தமிழ்மக்களின் வாழ்க்கையானது அன்பொழுக்கத்தினையே அச்சாணியாய்க் கொண்டு நடைபெறுவதென்பது தெளியப்படும் என்கிறார்.

இன்பம் என்னும் உறுதிப் பொருளை முன்வைத்த நுட்பத்தை அடிகளார் விரிவாக விளக்குகிறார். பிறவிக்கு முன் துன்பம், அன்னை வயிற்றுக் கருவில் துன்பம், பிள்ளைப் பருவத்துன்பம் எனத் துன்பத்து உழன்றவர் இன்பத்தின் இயல்பு இன்னதென அறியாராயின் பேரின்பப் பேற்றை அடைதற்கு விருப்பம் உண்டாகாதொழியும் ஆதலால், காதலின்பப்பேறு முன்வைக்கப்பட்டது என்கிறார்.

பிள்ளைப் பருவத்தின் இன்பம் தன்னலமே கொண்டமையும், அது, காதலின்பத்தில் ஊன்றிய போது கணவன், மனைவியின் நலம் கருதுவோனாகவும், மனைவி, கணவன் நலம் கருதுவோளாகவும், இருவரும் அறம்புரி வாழ்க்கையில் கொண்ட மக்களுக்காக வாழ்ந்தவராகவும், அறவோர் அந்தணர் முதலோரைப் பேணுவோராகவும் அமையும் விரிநிலையை எடுத்தோதுகிறார்.

இவ்வின்பம் அன்பினால் உந்தப்பட்டே நடைபெறல் வேண்டுமென்று முதலாசிரியர் வலியுறுத்தியது போலவே திருவள்ளுவரும்,

> **அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்**
> **தின்புற்றார் எய்தும் சிறப்பு**

என்று உடம்பாட்டானும்,

> **அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
> **வற்றன் மரம்தளிர்த் தற்று**

என்று எதிர்மறையானும் விளங்கவைத்தார் என்கிறார்.

தமிழர் நெறி, 'அறம் ஒன்றே' என்பதைத் தொல்காப்பியம் திருக்குறள் ஆகியவற்றின் வழியாக நிலைநாட்டுகிறார்.

அன்பு ஒன்றனையே உயிராகக் கொண்டு நடைபெறும் அறத்தை எடுத்து வற்புறுத்தும் தெய்வ ஆசிரியர், தமது விழுமிய

கோட்பாட்டிற்கு மாறுபாடின்றி அவ்வறத்தை ஒன்றாகவே கூறினாரல்லது அதனை 'இல்லறம்', 'துறவறம்' என இரண்டாகப் பகுத்துத் தாம் இயற்றியருளிய தொல்காப்பியத் தெய்வ முழுமுதல் நூலின்கண் யாண்டும் ஓதிற்றிலர். இம்மை இன்பம் விழைந்து மனைவி மக்கள் தமக்குத் தொண்டு செய்ய இம்மை முயற்சியை விட்டு இறைவன் திருவருளில் தமது உணர்வினைத் தோய்வித்திருக்கும் தவ வாழ்க்கையும் ஓர் அறத்தினுள்ளேயே அமைந்த இருவகை நிலைகள் ஆகுமே அல்லாமல் அவ்விரண்டுமே ஒன்றோடு ஒன்று மாறுபட்டன என்பதே நம் முதலாசிரியர் தொல்காப்பியனார் கருத்தாகும்.

> காமம் சான்ற கடைக்கோள் காலை
> ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

என்று அவர் அருளிச் செய்த கற்பியற் சூத்திரத்தால் தெற்றென விளங்கா நிற்கும் என்கிறார் அடிகள்.

மேலும், இது குறித்தன்றோ தெய்வத் திருவள்ளுவனாரும்,

> அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று

என்னும் திருக்குறளால், அறவாழ்க்கை எனப்படுவது இல்வாழ்க்கையேயாம் என்றும்,

> அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்தாற்றிற்
> போஒய்ப் பெறுவ தெவன்

என்றும் திருக்குறளால், துறவுநிலை புகுதல் பயன் இன்றாம் என்றும் தொல்லாசிரியர் வழியே கடைப்பிடித்து ஓதியதோடு, துறவு என்பது நெஞ்சினால் துறத்தலேயாம் எனவும், யான் செய்தேன் என இறுமாந்துரைக்கும் அகப்பற்றும், எனது பொருள் எனச் சொல்லும் புறப்பற்றும் ஒருங்கு அறுதலேயாம் எனவும் வற்புறுத்துவாராய்,

> நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
> வாழ்வாரின் வன்கணார் இல்

என்றும்,

> யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்
> குயர்ந்த உலகம் புகும்

என்றும் அருளிச் செய்வாராயினர் என நிறுவுகிறார். மேலும் துறவு அறம் ஆகாமையையும் விளக்குகிறார்.

தமிழர் சமயம், உலகத்து இயல்பு, உயிர்களின் இயல்பு, இறைவனின் இயல்பு என்னும் முப்பொருள் உண்மையை உடையது. இம்முப்பொருள்களையும் மறைமலையடிகளாரும் கா.சு. பிள்ளையும் தம் நூல்களில் விளக்குகின்றனர். அவை பழந்தமிழ்க் கொள்கை யாதலைத் தொல்காப்பியம் திருக்குறள் ஆயவற்றால் விளக்குகின்றனர்.

நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

என்று தொல்காப்பியர் கூறுதலால் நிலமும் நீரும் தீயும் காற்றும் வானும் என்னும் ஐம்பெரும் பொருள்களில் கலவையே உலகம் என்பது தெளிவாகின்றது. உலகத்துப் பொருள்கள் எல்லாம் அடுத்தடுத்து உருமாறி வருவனவே அல்லாமல் அவை இல்லாத வெறும் பாழாதல் எப்பொழுதும் இல்லை என அறிவியலாளர் ஆய்ந்துரைக்கும் கருத்தை அன்றே ஆசிரியர் தொல்காப்பியர் அறுதியிட்டுக் கூறியுள்ளார். மெய்கண்டாரும் 'உள்ளதே தோற்ற உயிர் அணையும்' என்று தொல்காப்பியர் கருத்தையே கூறுகின்றார் என்று உலகியல் உண்மையை விளக்குகின்றார் அடிகள்.

உலகத்துள்ள உயிர்களையெல்லாம் ஓரறிவுடையன. ஈரறிவுடையன, மூவறிவுடையன என்று அறு வகையாகப் பகுத்து தொல்காப்பியர் கூறுவதால் உயிர்கள் முறைமுறையே அறிவிலும் பிறவியிலும் மேலேறி வருதல் தெளியப்படும். இதனையே மாணிக்கவாசகர்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாய்க்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்த்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் என்பெருமான்

என்கிறார். இவை பழந்தமிழர் உயிர் பற்றிய கொள்கையாம். இறைவன் ஒருவன் உயிர்களின் வேறாய் உளன் என்பதும் அவன் அவ்வாறு இயல்பாகவே விளங்கிய அறிவினனாய் நிற்பது உயிர்களின் வினைக்கு ஏதுவாகிய மலத்தாற் பற்றப்படானாய் அவன் பெருந்தூய்மையும் நுட்பமும் உடையனாய் இருத்தலே காரணமாம் என்பதும், தெற்றென விளங்க ஆசிரியர் தொல்காப்பியனார்,

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்

என்று அருளிச் செய்தமை பெரிதும் நினைவிற் கொள்ளத்தக்கது. திருவள்ளுவர் 'வாலறிவன்' என்று கூறுதலும் நினைக்கத்தக்கது என்கிறார்.

தமிழிலுள்ள உயிர் மெய் ஆய்தம் முதலியவற்றால் இறை உயிர் உடல் பற்றிய தமிழர் மெய்யியலைச் சுட்டுகின்றனர்.

உயிரில்லாத பொருளை இயக்குவதற்கு உயிர்ப்பொருள் இன்றியமையாதது. உயிர் உடம்பின் சார்பாகத்தான் விளக்கம் எய்தும். உடம்பிற்கு வேறாக உயிர் காணப்படாதது. உயிர் உடம்பெடுத்தே விளக்கமடைய வேண்டியிருந்தாலும் உடம்பின் தன்மை வேறு; உடம்பு அறிவற்றதாய் இயக்கப்படுவதாய் நிலையில்லாததாய் இருப்பது; உயிரானது அறிவு விழைவு செயல்கள் உடையதாய் நிலையுள்ளதாய் இருப்பது. உடம்பொடு சேர்வதனாலேயே உடம்பு மயமாய் நின்று பொருள்களை அறியினும் தன் இயல்பினை உயிர் இழக்காது என்ற உண்மையை விளக்குவதற்காக மெய்யோடியையினும் உயிரியல் திரியா என்னும் நூற்பா எழுந்தது.

ஆய்தம் என்பது நுட்பமானது என்னும் பொருள்படும். எல்லா எழுத்தும் தோன்றுவதற்குக் காரணமான மூச்சொலியையே ஆய்தம் என்றார். அதுதானே எழுத்தாகாது. எழுத்துக்கள் தோன்று வதற்குக் காரணமாய் இருத்தலின் அதனைத் தனிப் பொருளாகிய கடவுளுக்கு ஒப்பிடுவாராய்த் தனி நிலை என்றார் என்கின்றனர்.

தமிழர் சமயத்தில் மெய்க் கொள்கையின் அறிவே வற்புறுத்தப்படுவது அன்றி வழிபாட்டு முறை அவரவர் கருத்திற்கு ஏற்பவும் வசதிக்கு ஏற்பவும் செய்யலாம்.

அப்பனை ஆரா அமுதினை வள்ளலை,
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்துமின்,
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே

என்றார் திருமூலர். சமயத்தின் நோக்கம் பேரின்ப வீடடைதல்; அதற்கு இன்றியமையாத வழி, அதன் கொள்கையைத் தழுவி நடத்தல்; கொள்கையை அறிவதற்குக் கருவியாய் இருப்பது சமயநூல்; சமய நூலினைத் தெளிவாகவும் திட்பமாகவும் கற்றுக் கொள்ளுதற்குக் கருவி நூலாகிய இலக்கணமும் பிற இலக்கியங்களும் கற்றல் வேண்டும். தமிழர் சமய நூல் தமிழிலேதான் செவ்வையாக அமைந்திருத்தலின் தமிழ்மொழி பேணுதல் இன்றியமையாத தாகும். மொழியைப் பேணுவதற்கு மொழிப்பற்று வேண்டப்படும் ஆதலால், தமிழ்மொழிப்பற்றும் தமிழரது செந்நெறிக் கொள்கையும் உடையார் எக்குலத்தாராயினும் எம்மதத்தாராயினும் தமிழர் சமயத்தைச் சேருவதற்குத் தகுதி உடையவரே. ஆதலின், தமிழர் திருநெறி உலகிற்கே பொதுநெறியாகும் வாய்ப்புடையது. குலப்பிறப்பு நூல் நம்பிக்கை வணக்கமுறைக் கட்டாயம் முதலிய கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு பெருந் தனிநெறி, தமிழர் சமயமாதலின் அஃது ஒரு காலத்தில் உலகெலாம் தழுவும் ஒப்புயர்வற்றதாய் மாண்புடையதாய் விளங்கும் எனத் தமிழர் நெறியைக் கூறி அமைகிறார்.

# 9. பாவாணர் சமய ஆய்வு

தமிழர் சமயம் குறித்துப் பல்வேறு நூல்களில் பாவாணர் ஆய்வுக் கருத்துகள் உளவேனும், இவண் எடுத்துக்கொண்ட பொருளின் அளவுக்கு ஏற்ப அவர்தம் '**தமிழர்மதம்**' என்னும் நூல் மட்டும் ஆய்வுக்குக் கொள்ளப்படுகின்றது.

**மதம்** என்னும் சொல் வரலாறு, **சமயம்** என்னும் சொல் வரலாறு, மதம் தோன்றிய வகை, மூவகை மதம், குமரிநாட்டு மதநிலை என்னும் ஐந்து குறுந்தலைப்புகளில் முன்னுரை வரைந்துள்ளார்.

நூலையும், குமரி நிலையியல் இடைநிலையியல் நிகழ் நிலையியல் வருநிலையியல் முடிபுரையியல் என ஐந்தியல்களாக்கி யுள்ளார்; பின்னிணைப்பும் உண்டு. இயற்றின் திரண்ட கருத்தைக் காண்போம்.

## மதம்

ஆறு, நெறி, கொள்கை, மதம், சமயம் என்பன ஒருபொருட் சொற்கள்.

> மதித்தல் = அளவிடுதல், கருதுதல், பொருட்படுத்துதல்
>
> மதி = அளவிடப்பட்ட பண்டம்
>
> மதி - மதிப்பு = அளவிடுகை, பொருட்படுத்துகை, கருத்து, தோராயம், கண்ணியம்.
>
> மதி - மதம் = பெரிதாக மதிப்பது, கருத்து, கொள்கை, நெறிமுறை, சமயம், தெய்வம், உண்மையின்மை, தெய்வத்தின் தன்மை, தெய்வத்தால் ஏற்படும் நன்மை, தெய்வத்துக்கும் மாந்தனுக்கும் உள்ள உறவு, மறுமை உண்மை இன்மை, மறுமையில் வாழ்வுநிலை ஆகியவற்றைப் பற்றி இன்னவாறு இருக்கும் என்று ஒருவர் மதித்துக் கொள்வதே பொதுவாக மதமென்று சொல்லப்படுவதாகும்.

தெய்வமும் மறுமையும் புறக்கண்ணால் காணப்படாத பொருள்கள் ஆதலாலும், மக்களின் மனப்பான்மை வெவ்வேறு வகைப்பட்டிருப்பதனாலும், மதமானது ஒவ்வொருவரும் தத்தம் அறிவிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு மதித்துக் கொள்வதாகவே **உள்ளது**. தெய்வம் உண்டென்று கொள்வது போன்றே, இல்லை என்று கொள்வதும் மதமாகும். ஆகவே, நம்புமதம் நம்பாமதம்

என மதம் இருவகைப்படும். அவற்றுள் ஒவ்வொன்றும் பல திறப்பட்டுள்ளது. ஆயின், நம்பு மதப்பிரிவுகளே மிகப் பற்பல திறத்தனவாயுள்ளன.

**சமயம்**

இறைவனை மதித்து வழிபடுவது மதம்; **இறைவனை இம்மையிலேனும் மறுமையிலேனும் அடைவதற்குச் சமைவது சமயம்.** ஆகவே, மதத்தினும் சமயத்திற்கு ஒழுக்கமும் நோன்பும் மிக வேண்டுவனவாம்.

அமை = அவை = கூட்டம்

அமை = அமையம் = பொருந்தும் நேரம், ஏற்ற வேளை, தக்க செவ்வி, வினை நிகழும் சிறுபோது

அமை = சமை - சமைதல் = ஆக்கப்படும் அரிசி போலும் பூப்படையும் கன்னி போலும் நுகர்ச்சிக்கு ஏற்றதாதல், பதனடைதல், இனிதாகச் செய்பொருள் வினைமுடித்தல்.

சமையம் - சமயம் = ஆதன் (ஆன்மா) தான் இறைவனை அடைதற்கு அல்லது பேரின்பத்தை நுகர்தற்குத் தன்னைத் தகுதிப்படுத்தும் முக்கரண ஒழுக்கம்.

**மதம் தோன்றிய வகை**

இம்மையிலும் மறுமையிலும் நேரக்கூடிய துன்பங்களுக்கு **அஞ்சுவதே** பல்வேறு மத ஒழுக்கங்களுக்கும் அடிப்படையாய் இருக்கிறது.

மாந்தன் வாழ்க்கை பல்வேறு துன்பம் நிறைந்ததனால் அவற்றினின்று தப்புவதற்குத் தொன்று தொட்டுப் பாதுகாப்புத் தேடிக் கொண்டது.

**முற்காப்பு**

பேரளவாக உதவும் கதிரவனையும் சிற்றளவாக உதவும் திங்களையும் பழுமரங்களையும் ஆவையும் இன்னோரன்ன பிறவற்றையும் போற்றி வணங்கியது நன்றியறிதல் பற்றியாகும்.

தறுகண் மறவனுக்கும் பத்தினிப் பெண்டிற்கும் கல்நட்டி விழா எடுத்தது.

**பாராட்டு**

மக்களை அரவணைத்துக் காத்த அரசன் மறைவின்பின் வடிவமைத்துப் படையலிட்டு வணங்கியது அன்பு பற்றியது.

குறிஞ்சி முதல் ஒவ்வொரு நிலத்திற்கும், பேராற்றிற்கும் பெருந்தொழிலுக்கும் நன்மைப் பேற்றிற்கும் காதற் பண்பிற்கும்

காதல் தீங்கிற்கும் ஒவ்வொரு தெய்வம் இருப்பதாகக் கருதி வழிபட்டது **கருதுகோள்.**

மறுமையும் கடவுள் உண்மையும் கண்டு பல்வேறு மதங்களையும் சமயங்களையும் வகுத்தது **அறிவுவளர்ச்சி**

**மூவகைமதம்**

மக்களில் அறிவு நிலைக்கேற்ப மதம் சிறுதெய்வ வணக்கம், பெருந்தேவமதம், கடவுள் சமயம் என மூவகைப்படும்.

உணவு படைத்துக் காவு கொடுப்பது **சிறுதெய்வ** வணக்கம்.

இறைவனை நாள்தோறும் வழிபட்டு இருதிணை உயிருக்கும் தீங்கு செய்யாது இயன்றவரை நன்மையே செய்தொழுகுவது **பெருந்தேவமதம்.**

இறைவனை உருவ வணக்கமின்றி முக்கரணமும் தூய்மையாகி எல்லா உயிர்கட்கும் நன்மையே செய்து வீடுபெற ஒழுகுவது **கடவுள் சமயம்.**

**குமரிநாட்டு மதநிலை**

மேற்கூறிய மூவகை மதத்தினையும் கி.மு. 10,000 ஆண்டு கட்கு முன்பே குமரி நாட்டுத் தமிழ்மக்கள் கொண்டிருந்தனர்.

குமரி நிலையியல் சிறுதெய்வ வணக்கம், பேய் வகை, கடிமரம், நாற்பூதம், இருசுடர், நல்விலங்கு, நச்சுயிரி, வதிதெய்வம், ஐந்திணைத் தெய்வம், காவல் தெய்வம் பாராட்டுத் தெய்வம் கருதுகோள் தெய்வம் இல்லுறை தெய்வம் தொழிற்குலத் தெய்வம் என எண்ணி விளக்குகிறார்.

**பெருந்தேவமதம்**

ஐந்திணைத் தெய்வ வணக்கங்களுள் இரண்டே மதமாக வளர்ச்சியடைந்தன. சேயோன் வணக்கத்தினின்று சிவமதமும் மாயோன் வணக்கத்தினின்று திருமால் மதமும் தோன்றின. விண்ணுலக வேந்தன் கொள்கையின்பின் எங்கும் நிறைந்த இறைவன் கொள்கை ஏற்பட்டபோது தீயின் கூறாகச் சிவன் என்றும், நீரின் கூறாக மால் (மாயோன்) என்றும் பெயரிட்டு இறைவனை வழிபட்டனர்.

**சிவமதம்**

இறைவன் பெயர், மாலை, ஊர்தி, படைக்கலம், இருக்கை, குணம், தொழில், வடிவம், வழிபாட்டு முறை, கொண்முடிபு (சித்தாந்தம்), மெய்ப்பொருளியல், சிவமத விரிவளர்ச்சி என்பவற்றை

வரிசைப்படுத்தி வரைகிறார். அவ்வாறே திருமால் மதத்தையும் விரித்து உரைக்கிறார்.

**கடவுட் சமயம்**

ஊர்பேர் காலம் இடம் வண்ணம் வடிவம் பால் பருவம் முதலிய வரையறையின்றி, எங்கும் நிறைந்து எல்லார்க்கும் எல்லாவற்றுக்கும் பொதுவாய், எல்லாம் வல்லதாய், என்றும் மாறாதிருப்பதாய் உள்ள பரம்பொருளை உள்ளத்தால் கண்டு முக்கரணத் தூய்மையுடன் ஒழுகுவதே **கடவுட் சமயமாம்.**

கடவுட் சமயம் இல்லறம் துறவறம் இரண்டற்கும் பொதுவாம். பேரின்பமும் இரண்டிற்கும் பொதுவாம்.

எல்லாவற்றையும் கடந்து நிற்பவன் **கடவுள்.**

எல்லா உலகங்களையும் ஆள்வதால் **ஆண்டவன்.**

எங்கும் தங்கி இருப்பதால் **இறைவன்.**

தெய்வம் என்பது இடத்திற்கேற்ப மூவகைத் தெய்வத்தையும் குறிக்கும். எல்லாம் வல்ல இறைவணக்கத்தையே கொண்ட சிவனியம், மாலியம், யூதம், கிறித்தவம், இசுலாம் முதலிய எல்லா மதங்கட்கும் கடவுட் சமயம் பொதுவாம்.

ஆபிரகாமிற்கு முன்பே நோவா காலத்துப் பெரு வெள்ளத்திற்கும் முன்னரே கடவுளை உலகில் முதன்முதலாகக் கண்டவர் குமரிநாட்டுத் தமிழரே.

கடவுட்கு உருவம் இல்லாமையால் உருவ வணக்கமும் இல்லை. எவரும் எங்கும் என்றும் தனித்தும் பிறரொடு கூடியும் கடவுளைத் தொழலாம்.

திருவள்ளுவர் கடவுட் சமயத்தார். அதனால் முதற்பகவன், வாலறிவன், மலர்மிசை யேகி, விருப்பு வெறுப்பு இல்லான், இறைவன், ஐம்புலம் வென்றான், பிறவி நீக்கி எனக் கடவுட்குரிய பல்சமயப் பொதுப் பெயர்களையே தம் கடவுள் வாழ்த்தில் ஆண்டார். சிவமதத்திற்குக் கூறிய கொண்முடிபே கடவுட் சமயத்திற்கும், தலைவன், தளையன், தளை என்னும் முப்பொருளை, கடவுள் கட்டுணி, கட்டு என்று சொன்மாற்றியும் கூறலாம்.

கடவுட் சமயம் துறவியர்க்கே உரியதென்றும், இல்லறத் தார்க்கு உருவ வணக்கம் இன்றியமையாதது என்றும் ஒரு தவறான கருத்து இற்றைத் தமிழருள்ளத்தில் புகுத்தப்பட்டுள்ளது.

கிறித்தவரும் முகமதியரும் உருவத்துணை இன்றியே இறைவனை வழிபட்டு வருகின்றனர். கற்றாரும் கல்லாருமான

தமிழரும் வீட்டிலும் காட்டிலும் வழிப்போக்கிலும் துன்பம் நேர்ந்தயிடத்து அண்ணாந்து வானை நோக்கி ஆண்டவனே அல்லது கடவுளே என்று விளித்து வேண்டுதல் செய்வது அல்லது ஒருவர் அறமுறை தவறி அட்டூழியம் செய்யும்போது வானை நோக்கி, "அதோ போகிறானே, அவன் கேட்பான்" என்று முறையிடுவது இன்றும் வழக்கமாய் இருக்கின்றது. ஆதலால், கல்லார்க்கோ பொதுமக்கட்கோ இல்லறத்தார்க்கோ கடவுள் வணக்கமும் வழிபாடும் ஏற்காது என்பது பொருந்தாது.

இடைநிலையியலில் ஆரியத் தெய்வங்கள் ஆரியர் தமிழரை அடிமைப்படுத்திய வகைகள் ஆரியத்தால் விளைந்த கேடுகள் என்பவற்றை விரிய ஆய்கிறார் பாவாணர்.

## திருக்கோயில் வழிபாடு

வருநிலையியலில் திருக்கோயிலில் தமிழ்வழிபாடு கட்டாயம் என்பதை வலியுறுத்துகிறார்.

ஐரோப்பியரும் ஆங்கிலரும் தம் உரிமை உணர்ச்சியால் அயல் நாட்டினின்று அயன்மொழி வாயிலாக வந்த மதத்தையும் தம் தாய்மொழிமதமாக மாற்றிக் கொண்டனர்.

தமிழரோ, தமிழ்நாட்டில் தமிழரால் தோற்றுவிக்கப்பட்ட மதவழிபாட்டை ஒருபோதும் வழக்கில் இல்லாத ஒருவர்க்கும் தெரியாத அயல்நாட்டு இலக்கிய மொழியில் நடைபெறுவித்து, செவிடர்போல் நின்று மீள்கின்றனர்.

சிவனியமும் மாலியமும் தூய தமிழ் மதங்களாய் இருந்தும் அன்பான தந்தையுடன் அவன் அருமை மக்கள் நெஞ்சு கலந்து நேரடியாகப் பேசி இன்புற முடியாதவாறு, இடையில் ஓர் அயலான் நின்று தடுத்து அவர்கள் கொண்டு வந்த தின்பண்டங்களையும் தானே வாங்கிக் கொடுத்து அவர்கள் தந்தையைப் போற்றிப் புகழ்வது போலும் தந்தை அவர்களை வாழ்த்துவது போலும் தானே மனப்பாடம் செய்து கொண்டனவும் அவர்களுக்குப் பொருள் தெரியாதனவுமான சில தொடர்களைச் சொல்லி அதன்பின் அவர்களே விலகிக் கொள்ளுமாறு செய்வதுபோல் கோவிலிலுள்ள பரமத்திருத் தந்தையும் அருட்கடலுமான இறைவன் உருவிற்குத் தமிழர் தாமே படைத்து மகிழ்ச்சி பெற முடியாதவாறு செய்வது ஏமாற்றும் துணிச்சலும் ஆகிய தீச்செயலாம் ஆங்கிலக் கல்வியரும் அறிவியல் ஆராய்ச்சியாளரும் இதற்கு இணங்கியிருப்பது இழிவான அடிமைத்தனமாம்.

## கோயில் பூசகர்

பொதுக் கல்வி, சிறப்புக் கல்வி, தமிழ்ப்பற்று, தெய்வ நம்பிக்கை, புலால் மறுத்தல், துப்புரவு, ஒழுக்கம் ஆகிய எழுவகைத்

தகுதியும் உள்ளவரை எல்லா வகுப்பினின்றும் பூசகராகத் தெரிந்தெடுத்துப் பணியாற்றுவித்தல் வேண்டும். இதற்குமாறாய் இருப்பவரை அரசு தண்டித்தலும் வேண்டும்.

## வீண்செலவு நிறுத்தம்

கோயில்களில். படைக்கப்படும் உணவுப்பொருள்கள் வழிபடுவார்க்கும் பூசகர்க்கும் இரப்போர்க்கும் ஏழைகட்கும் பயன்படும். ஆயின், பால் முழுக்கு, நெய்யாட்டுப் போல்வன ஒருவர்க்கும் பயன்படா, இறைவனுக்கும் ஏற்காது.

மக்கள் தொகைப் பெருக்கமும் வேலை இல்லாத் திண்டாட்டமும் பொருள்விலை உயர்வும் வறுமையும் வறட்சியும் மிக்க இக்காலத்தில் ஏழை மக்கள் குடிக்கக் கூழின்றிப் பசியும் பட்டினியுமாய்க் கிடந்து வருந்துகையிலும் தற்கொலை செய்து வருகையிலும் உயிரற்ற ஓர் உருவத்தின்மேல் குடம் குடமாகப் பாலைக் கொட்டுபவனை இறைவன் அடியான் என்னாது கொடியான் என்றே கருதுவன்.

இறைவனுக்கு எண்ணில்லா எல்லா உலகும் என்றும் சொந்தம். அவனுக்கு ஒரு பொருளும் தேவையில்லை. அவனே எல்லார்க்கும் எல்லாவற்றையும் அளிப்பவன். அவன் விரும்புவது மனம் ஒன்றே. அதை முழுமையும் அளிக்க முடியாதவர், பூசகர்க்கும் ஏழைகட்கும் பல்வகைப் பணி செய்யும் பொதுமக்கட்கும் பயன்படுமாறு தத்தமக்கு இயன்ற அளவு பல்வகைப் பொருள்களைக் காணிக்கையாகப் படைக்கலாம்.

## உருவிலா வழிபாடு

துறவறத்தார்க்கு மட்டுமன்றி அறிவுவிளக்கம் பெற்ற இல்லறத்தார்க்கும் உருவிலா வழிபாடு உகந்ததாம். உருவ வழிபாட்டினால் இறைவனின் எங்கும் நிறைந்த தன்மை உணரப்படாதுபோம். அதோடு அவனது அளவிடப்படாத பெருமைக்கும் அது இழுக்காகும்.

துறவறம் உயர்ந்த அறநெறி ஆதால் பட்டினத்தாரும், தாயுமானவரும் போன்ற உண்மைத் துறவியரெல்லாம் உருவ வழிபாட்டை அறியாமைச் செயலாகவே கருதினர்.

இறைவனுக்கு நெஞ்சக் கோயிலே இனியதென்று திருவள்ளுவரும் திருமூலரும் கண்டனர். "மலர்மிசை ஏகினான்" "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்" என்கின்றனர்.

மதத்தை ஒழித்துவிட்டால் பிராமணீயம் அடியோடு ஒழியும் என்று கருதி, கடவுள் இல்லை என்று சிலர் சொல்லி வருகின்றனர்.

உருவ வழிபாட்டை ஒழித்துவிட்டாலே பிராமணீயம் ஒழிந்து போமென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

தமிழ்நாட்டில் உருவிலா வழிபாடு பதினெண் சித்தர் காலத்தில் தோன்றியதென்றும், கிறித்துவுக்குப் பிற்பட்டதென்றும் தவறாகக் கூறப்படுகின்றது. உலகில் முதல்முதல் கடவுளை உணர்ந்தவர் தமிழறிவரே. கடவுள் என்னும் சொல், குமரிநாட்டில் தலைக்கழகக் காலத்திலேயே தோன்றியதாகும். "முந்துநூல்கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுக்கப்பட்ட" தொல்காப்பியத்தில் கடவுள் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

## தென்மதம்

சிவநெறியான் தன்னைச் சிவனியன் என்றும், திருமால் நெறியான் தன்னை மாலியன் என்றுமே குறித்தல் வேண்டும். இருநெறிக்கும் பொதுமை குறிக்க விரும்பின் தென்மதத்தான் அல்லது தமிழ் மதத்தான் என்று குறித்தல் வேண்டும்.

## எல்லா மதமும் தனித்தமிழ் போற்றல்

கடவுள் புறக்கண்ணால் காணப்படாமையாலும் மதம் மறுமை நோக்கியது ஆதலாலும் மக்கள் மனப்பான்மை பல்வேறு வகைப்பட்டிருப்பதனாலும் உள்நாட்டு மதமென்றும் வெளிநாட்டு மதமென்றும் வேறுபாடு காட்டாது கருத்து வேறுபாட்டிற்கு இடந்தந்து தனித்தமிழைப் போற்றுவதையே எல்லா மதத்தாரும் கடைப்பிடித்தல் வேண்டும்.

## சிவமதம் தமிழர் மதம் - சான்றுகள்

1. சேயோன் மேய மைவரை உலகம் என்று முருக வணக்கம் தமிழகத்துக் குறிஞ்சி நிலத்திற்கு உரியதாகக் கூறியிருத்தல் (தொல். அகத். 5).
2. சிவபெருமான் வெள்ளிமலை இருக்கையும் மலைமகள் என்னும் பெயரும் கொன்றைமாலையும் காளை ஊர்தியும் சூலப்படையும் அக்கமணியும் குறிஞ்சித் திணைக்குரியன ஆதல்.
3. "தென்பாண்டி நாட்டானே", "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று மாணிக்கவாசகர் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் பாடியிருத்தல்.
4. சிவபெருமானின் திருவிளையாடல்கள் பாண்டி நாட்டுத் தலைநகராகிய மதுரையில் நிகழ்ந்ததாகக் கூறுதல்.
5. சிவபெருமானின் மற(வீர)ச் செயல்கள் நிகழ்ந்த இடங்கள் எட்டும் தமிழ்நாட்டிற்குள் இருத்தல்.

6. சிவன் நடஞ்செய்யும் இடங்கள் ஐந்தும் தமிழ்நாட்டில் இருத்தல்.

7. முருகனும் சிவனும் வேதத் தெய்வம் அல்லாமை.

8. உருத்திரன் இந்திரன் அக்கினி ஆகிய மூவர்க்கும் வேதத்தில் வந்துள்ள சிவ என்னும் அடைமொழி நல்ல அல்லது மங்கல என்றே பொருள்படுதல்.

9. வேத ஆரியர் வடநாட்டுச் சிவனியரைச் சிவக்குறி வணக்கம் பற்றி ஆண் குறி வணக்கத்தார் (சிச்னதேவா) என்று பழித்தமை.

10. ஆயிரத்தெட்டுச் சிவத்திருப்பதிகளுள் ஒருசிலவே வடநாட்டில் இருத்தல்.

11. கல்லாலமர நிழலில் நால்வர்க்குத் திருமுறை கற்பித்த திருவாசிரியனைத் தென்முக நம்பி (தட்சிணாமூர்த்தி) எனல்.

12. சிவன் என்னும் சொல் செவ்வண்ணன் என்று பொருள் படுதலும் சிவனுக்கு அழல்வண்ணன் அந்திவண்ணன் மாணிக்கக்கூத்தன் என்னும் பெயர்கள் உள்ளமையும்.

### திருமால்மதம் தமிழர் மதம் – சான்றுகள்

1. மாயோன் மேய காடுறை உலகமும் என்று மால் வணக்கம் தமிழகத்து முல்லை நிலத்திற்கு உரியதாகத் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டிருத்தல்.

2. துழாய் மாலையும் கருட ஊர்தியும் முல்லைத் திணைக்கு உரியனவாதல்.

3. மாயோன் மால் என்னும் பெயர்கள் கரியன் என்று பொருள்படுதலும் கரியவன், கார்வண்ணன், கடல்வண்ணன், மணிவண்ணன் என்னும் பெயர்கள் திருமாலுக்கு உள்ளமையும்.

4. முல்லை வாழ்நராகிய இடையரெல்லாரும் திருமால் வழிபாட்டினராய் இருத்தல்.

5. திருமால் வேதத் தெய்வம் இல்லாமை.

6. விண்டு (விஷ்ணு) என்னும் வேதத் தெய்வம் கதிரவத் தெய்வமாய் இருந்தமை.

7. திருவரங்கமும் திருப்பதியும் திருமால் மதத்தினர்க்குத் தலைசிறந்த திருநகர்களாய் இருத்தல்.

மக்கள் முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டையன்று. தமிழர் எல்லாத் துறையிலும் தலைசிறந்து சீரும் சிறப்புமாய் வாழ்ந்தது குமரி நாட்டு மதவாழ்க்கைக் காலமே. இன்றும் அறிவியல்

கம்மியத் துறைகளில் தலைசிறந்து திங்களை அடைந்த அமெரிக்கர் கடவுள் நம்பிக்கை உள்ளவரே.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் உண்மையை உணர்ந்து மாந்தர் எல்லாரும் கடவுளின் மக்களான உடன்பிறப்பு என்று கருதி யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று அன்போடு கூடி வாழ்வதற்கே மதம் ஏற்பட்டது. ஆயின் மாந்தர் தம்மனம் போனவாறு மதத்தைத் திரித்துத் தம்மோடு மாறுபட்ட கருத்தினரைப் பகைத்து, அவரினின்று பிரிந்து போவதும் அவரொடு பொருவதும் வெளியான மதத்தின் விளைவேயன்றி நெறியான மத்தின் விளைவன்று. பன்னூற்றாண்டு கூடி வாழ்ந்த இந்தியரும் பாக்கித்தானியரும் பகைவராய்ப் பிரிந்து போனமைக்கு மதவெறியே கரணியம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மக்கள் முன்னேற்றத் திற்கு முட்டுக்கட்டையாய் இருப்பது ஆரியத்தால் ஏற்பட்ட பிறவிக்குலப் பிரிவினையேயன்றி வேறன்று.

இன்றும் தமிழருட்பெரும்பாலார் கடவுள் நம்பிக்கை யுள்ளவர் ஆதலால் கடவுள் இல்லை என்று சொல்லச்சொல்ல அது ஆரிய மேம்பாட்டிற்கும் ஏமாற்றிற்கும் அரண் செய்ததே யாகின்றது. மாந்தன் மனத்தை இறுகப் பிணிக்கக் கூடிய பற்றுகளுள் மிகுந்த வலிமையுடையது மதப்பற்ற அல்லது கடவுட்பற்று.

கத்தரிக்காய் அறுக்க வாங்கிய கத்தி கழுத்தறுக்குங் கருவியாய் இருப்பின், அது கழுதறுப்பான் குற்றமா? கத்தியின் குற்றமா? மாந்தரை எல்லாம் கடவுளின் மக்களாக்கி உடன்பிறப்பு அன்பால் ஒன்றுபட்டு இன்புற்று வாழச் செய்யும் உயர்ந்த மதவியலை ஒரு தன்னலக் கொள்ளைக் கூட்டம் தாம் வாழவும் பிறர் தாழவும் பயன்படுத்தின், அக்குற்றம் எவ்வாறு மதவியலைச் சாரும்? என வினவினார்.

இனிக் கடவுள் உண்டு என்பதற்கும் கடவுள் இல்லை என்பதற்கும் சொல்லப்படும் சான்றுகளைக் கருதுகிறார் பாவாணர்:

**கடவுள் உண்டு என்பதற்குச் சான்றுகள்**

1. கதிரவக் குடும்பத்தைச் சேர்ந்த கோள்கள் எல்லாம் இடையறாது ஓர் ஒழுங்காக இயங்கி வருகின்றன.
2. இவ்வுலகம் முழுவதற்கும் கதிரவன் பகல்விளக்காகவும் திங்கள் இராவிளக்காகவும் எண்ணிற்கும் எட்டாக் காலத்தில் இருந்து விளங்கி வருகின்றன.

3. பிற கோள்களைப்போல் சுற்றாது ஒரே இடத்தில் இருக்கும் கதிரவன் பத்துத் திசையும் ஒளி சமமாகப் பரவுமாறு உருண்டையாய் இருப்பதும் அளவிடப்படாத நீள் பெருங்காலம் எரிந்து வரினும் அதன் எரியாவி குன்றி அணையாதிருப்பதும் இயற்கைக்கு மாறான இறும்பூதுச் செய்தி ஆதலால் அதை இயக்கி யாளும் ஒரு பரம் பொருள் இருத்தல் வேண்டும்.

4. கோள்கள் ஒன்றோடு ஒன்று முட்டாது தன் தன் பாதை வட்டத்தில் இயங்குமாறும், இவை சுழலுங்கால் அவற்றின் மேலுள்ள பொருள்கள் நீங்காவாறும் ஒவ்வொன்றையும் சூழ ஒரு கவர்ச்சி மண்டலம் அமைந்திருப்பது.

5. காலமும் இடமும் தொடக்கமும் ஈறும் இல்லாதவை யாதலால், இற்றை மக்கள் உலகம் தோன்றுமுன் எண்ணிக்கை யற்ற உயிர் உலகங்கள் தோன்றி ஒழிந்திருத்தல் வேண்டும்.

6. மாந்தன் தோன்றிய நாள் தொட்டு நூற்றுக்கணக்கான தலைமுறைகளில் கோடி கோடியாகப் பெருகிவந்துள்ள மக்கள் எத்தனையர் ஆயினும் அத்தனையர் அடையாளங் காணுமாறு வெவ்வேறு முகவடிவில் உள்ளனர். கை வரையும் வேறுபட்டுள்ளது. இது அறிவு நிரம்பிய ஒரு பேராற்றலின் செயலேயாம்.

7. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது இன்றும் சிலர் வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்படுகின்றது.

**கடவுள் இல்லை என்பதற்குக் காட்டப்படும் சான்றுகள்**

1. உடல் நலம் மனநலம் மதி நலம் முதலிய நலங்கள் உள்ளாரும் இல்லாரும் படைக்கப்பட்டிருத்தல்.

2. பஞ்சம், கொள்ளை நோய், பெருவெள்ளம், நிலநடுக்கம் முதலிய இயற்கை அழிவு நிகழ்ச்சிகள் நேர்தல்.

3. கடவுள் புறக்கண்ணிற்குப் புலனாவது இல்லை.

4. ஒன்றோடு ஒன்று முரண்பட்ட பல்வேறு மதங்கள் உலகில் வழங்கி வருகின்றன.

5. நல்லோர் பலர் வறுமை, நோய், பிறரால் துன்பம் முதலிய வற்றால் வருந்திக் குறுவாழ்க்கையராய்ச்சாக, தீயோர் பலர் எல்லா வகையிலும் இன்புற்று நீடு வாழ்கின்றனர்.

6. பல அஃறிணை உயிரினங்கள் பிறவற்றைக் கொன்று தின்பனவாகவே படைக்கப்பட்டுள்ளன.

7. சிலர் எத்துணை உருக்கமாய் இறைவனை வேண்டினாலும் தாம் விரும்பியதைப் பெறுவது இல்லை.

இங்ஙனம் கடவுள் உண்டு என்பதற்கும் இல்லை என்பதற்கும் காட்டப்படும் சான்றுகளுள் உண்டென்பதற்குரியவையே மிகுந்தும் வலிமையுள்ளனவாகவும் இருக்கின்றன. காட்சியளவை போன்றே கருத்தளவையும் உண்மையறியும் வழியாகும்.

எங்ஙனம் இருப்பினும் இரு சாராரும் தத்தம் கொள்கையை எதிர்கொள்கையார் நம்புமாறு நாட்ட முடியாது இருப்பதால், கருத்து வேறுபாட்டுக்கு இடம் தந்து, ஒரு சாராரை ஒரு சாரார் பழிக்காதும் பகைக்காதும் இருப்பதே உண்மையான பகுத்தறிவாம்.

மேலும் கடவுள் உண்மையாக இல்லை எனின் நம்பாதவனுக்குக் கேடில்லை. ஒரு கால் உள்ளார் எனின் அவனுக்குக் கேடுண்டாம். ஆதலால் நம்பா மதத்தினரும் நம்ப மதத்தைக் கடைப்பிடிப்பதே சாலச் சிறந்ததாகும்.

### மதத்தை அழிக்க முடியாது

மதவியல் முற்றும் மனத்தைப் பொறுத்தது. ஆதலின் அதை எவரும் அழிக்க இயலாது. சாக்கிய நாயனார் பகைவர் போன்று சிவப்படிமையைக் கல்லால் அடித்தே சிவனடியார் ஆயினர் எனின் வேறு என்ன சொல்ல இருக்கிறது.

கனவு காணாது உறங்கும் போது தவிர, மற்றெல்லா நேரத்திலும் இருப்பினும், நடப்பினும், வேலை செய்யினும், உரையாடினும், உண்ணினும் இறைவனை நினைக்கவும் வழுத்தவும் வேண்டவும் இயலுமாதலின் மனம் உள்ளவரை மதத்தை ஒருவராலும் அழிக்க முடியாது.

### நம்பா மதமும் ஒரு மதமே

கடவுளும் மறுமையும் இல்லை என்னும் கொள்கையும் ஒரு மதம் ஆதலால் மதத்தை ஒழிக்க வேண்டும் என்பது செருக்கை அடக்க வேண்டும் என்றே பொருள்படுவதாகும். உள்மதம் (அஸ்திகம்) இல்மதம் (நாஸ்திகம்) என்னும் வழக்கையும் நோக்குக.

மக்கள் ஆட்சியும் குடியரசும் நடைபெறும் இக்காலத்தில் ஒவ்வொருவர்க்கும் தத்தம் மதத்தைப் பரப்ப முழுவுரிமை உண்டு.

### அறிவியல் நோக்கு

இறைவன் இன்றி எல்லாம் இயற்கையாய்த் தோன்றியன என்பதையே அறிவியற் பொது அடிப்படையாக இக்காலப் புதுப்புனைவு ஆராய்ச்சியாளர் பலர் கொண்டுளர். டார்வின் கொள்பும் இதற்குத் துணையெனக் கருதுகின்றனர். தாழ்ந்த

இனத்தினின்று உயர்ந்த இனம் படிமுறையாகத் தோன்றிற்று என வைத்துக் கொள்ளினும் அடிப்படை உயிரியான ஒன்றைப்புரையன் எங்ஙனம் தானே தோன்றும்? சடத்தினின்று சித்தும் தோன்றுமோ?

இனி, கதிரவனின்று ஞாலம் வீழ்ந்ததெனின் கதிரவன் எதினின்று வீழ்ந்தது? இக்கொள்பாளர் கணக்கற்ற கதிரவக் குடும்பங்கள் பெருவிசும்பில் உள்ளதை அறிந்தாரா?

அறிவியலாராய்ச்சியாளர் இயற்கையிலுள்ள இறும்பூதுகளைக் கண்டு இறைவன் பெருமையை உணர்ந்து வியப்பதற்கு மாறாகத் திறவுகோல் பெற்ற வேலைக்காரத் திருடனாக மாறிவிடுவது போல் தனக்கு நுண்மதியளித்த இறைவனையே இல்லை என மறுப்பது.

காணப்பட்ட பொருள்களைப் பற்றியே கரத்து வேறுபாடு இருக்கும் போது காணப்படாத கடவுளையும் மறுமையையும் பற்றிக் கருத்து வேறுபாட்டிற்கு மிகுந்த இடம் இருப்பதால் கடவுளை நம்புகிறவரும் நம்பாதவரும் ஒருவரை ஒருவர் குறை கூறாதும் வெறுக்காதும் உயர்திணைக்குரிய உடன்பிறப்பு அன்பு பூண்டு ஒழுகுதல் வேண்டும். இறைவனுக்கு ஏற்றது எங்கும் என்றும் உருவமின்றி நேரடியாய்ச் செய்யும் தாய்மொழி வழிபாடே.

### மதச் சமநோக்கு

சிவனியம், மாலியம், உலகியம் (லோகாதயம் அல்லது சார்வாகம்) என்னும் மூன்றே தொன்று தொட்டு வழங்கும் தமிழ் மதங்கள். ஆயினும் இன்று வெளிநாட்டு மதங்களும் தமிழரிடைப் புகுந்திருப்பதாலும் அம்மதத்தாரைத் தமிழர் அல்லர் என விலக்கல் கூடாமையாலும் இற்றை முறைப்படி சமணம் புத்தம் கிறித்தவம் இசுலாம் என்னும் மதங்களையும் தமிழ்நாட்டு மதங்களாகவே கூறல் வேண்டும். உலகியம் ஒன்று மட்டும் உலகம் முழுமைக்கும் தொன்று தொட்டுப் பொதுவாகும்.

மதங்கள் எல்லாம் தேவியம் அல்லது உள்ளியம் (Theism) தேவிலியம் அல்லது இல்லியம் (Atheism) என இருவகை பட்டிருப்பதால் (ஆஸ்திகம் நாஸ்திகம்) மதவியல் வாயிலாக மக்களை ஒன்றுபடுத்தல் இயலாது. அதனாலேயே இந்திய ஒன்றியமும் மதவியலைத் தழுவாது உலகியலைத் தழுவியுள்ளது. ஆகவே, தாய்மொழி ஒன்றே ஓரினப் பலமதத்தாரையும் ஒன்றாய் இணைக்க வல்லதாம். ஆதலால் தமிழர் எம்மதத்தாரா யினும் தமிழைத் தாய் போற்பேணிக் காத்தல் வேண்டும். தமிழ் என்பது தனித்தமிழே.

அயல்நாட்டு மதம் என்னும் கரணியத்தால் அயல்மொழிச் சொற்களை ஆளுதல் கூடாது. தமிழ்மொழி பற்றியே தமிழர்

என்னும் இனம் அமைந்திருப்பதால், தமிழ்ச் சொல்லை வழங்காதார் தமிழராகார். அயல்நாட்டு மதம் பற்றிய அயன்மொழிச் சொற்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்து ஆள வேண்டும். நேர்த்தென்சொல் ஏற்கெனவே இல்லாவிடின் புதுச்சொல் புனைந்து கொள்ள வேண்டும்.

மதம் என்பது காணப்படாத மறுமை நோக்கியது. ஆதலால் எல்லா மதங்களையும் சமமாக நோக்குதல் வேண்டும். ஒவ்வொரு மதத்தார்க்கும் தம் மதத்தைப் பிறர்க்கெடுத்துரைக்க உரிமை இருப்பினும் அது பற்றிப் பிற மதத்தாரை வெறுப்பதும் பகைப்பதும் மத நோக்கத்திற்கும் மாந்தன் தன்மைக்கும் முற்றும் மாறானதாகும்.

கடவுள் இருப்பது உண்மையாயின் அவரை நம்புவாரையும் நம்பாதாரையும் அவரே மறுமையிற் கவித்துக் கொள்வார். இம்மையைப் பொறுத்த அளவில் எல்லாரும் உடன்பிறப்பாக ஒன்றி வாழல் வேண்டும். இதுவே உயர்திணை என்னும் மக்கள் உண்மை.

பலவகையாலும் முன்னை மூவர் வழியில் பாவாணர் ஒத்தியல் உண்மை. ஆயினும், சிலவழிகளில் வேறுபடுதல் வெளிப் படப் புலப்படும். இது குறித்தே அம்மூவர் கருத்தையும் தனித் தனியேயுரைத்தும் திரட்டியுரைத்தும், பாவாணர் கருத்தை எடுத்துக்கொண்ட பொருளுக்குத் தகவிரித்துக் காட்டப் பட்டதாம்.

சமயம் அல்லது மதம் பற்றிய சீர்திருத்தப் பகுதியிலும், வழிபாட்டு மொழி தமிழாகவே இருக்க வேண்டும் என்பதிலும் அயன்மொழி வழிபாடு ஆகாது என்பதிலும் குலப்பிரிவு பூசனைக்கும் வழிபாட்டுக்கும் இருத்தல் ஆகாது என்பதிலும் நால்வர் வழியும் நல்லதாம் ஒரு வழியாகவே உள்ளது.

மாலியமும் சிவனியமும் இணைந்தியல வேட்கும் கா.சு.வைப் போலத் தமிழ்நாட்டில் இந்நாள் தமிழரால் கொள்ளப் பட்டுள்ள சமயங்கள் எல்லாம் தமிழர் சமயமாகவே கொள்ள வேண்டும் என்றும், அச்சமயங்கள் அயற்சமயங்கள் எனலால் அயன் மொழியில் வழிபாடு செய்தல் ஆகாது என்றும் கூறுகிறார். வேதமதத்தைத் தமிழர் மதமாகக் கொள்ளாமை நால்வரிடமும் காணுதல், தமிழர் உடைமை உரிமையாக இருக்கும் தமிழ் நாட்டுக் கோயில் வழிபாட்டைச் சாதிமைக்கு ஆட்படுத்தி, தம் நலத்தால் வடமொழியே வழிபாட்டு மொழியைத் தொடர்ந்த அழிவழக்கும் இழிமையும் படுத்தி வருதலால், அவர் மதத்தை எங்கும் தமிழர் மதமாகக் குறித்திலர். தமிழ் ஆளுமைக்குத் தடையாக இருக்கும் மதம் தமிழர் மதம் எனக் குறியீட்டால் கூறத்தானும் கூடாததேயாம்.

# 10. பாவாணர் சமயச் சால்பு

தமிழர் மதம் என்றும், தமிழ்ச் சமயம் என்றும் ஆராய்ந்த நால்வரும் சிவனியமும் மாலியமும் ஆகிய இரு சமயங்களுமே தமிழர் சமயங்கள் எனத்தெளிவு செய்தனர்! முடிபும் கொண்டனர்.

சிவனியமும் மாலியமும் முப்பொருள் கொள்கையின (இறை, உயிர், தளை) என்பதையும் ஒன்றாய் இருந்து இரண்டாய் விரிந்தவை என்பதையும் நிறுவியுள்ளர்.

கா.சு. அவர்கள், சிவனியமும் மாலியமும் இணைய வேண்டும் என்பதை அவாவி அழுத்தமும் கொண்டிருந்தார். அது, மற்றை மூவரும் கூறாத இணைப்பாகும். ஊர்தோறும் தமிழர் சமயச் சங்கம் அமைத்து ஆண் பாலரும் பெண் பாலரும் கூடி மலர் தூவி வழிபட வேண்டும் என்றும் கூறுகிறார்.

மறைமலையடிகள் வேதம், புத்தம், சமணம், கிறித்தவம், இசுலாம் ஆகியவை தமிழர் சமயமாகக் கொள்ள முடியாமையைக் குறித்தனர்.

இவற்றின் மேலே, பாவாணர் எண்ணத்தை நாம் காணலாம். தமிழர் மதம், இடைநிலை இயலில் "ஆரியர் இந்தியா விற்குப் புகுந்த காலம் தோராயமாகக் கி.மு. 1500 அவரது வேதக்காலம் கி.மு. 1500-1200 என்கிறார்.

ஆரியத் தெய்வங்கள், ஆரியர் தமிழரை அடிமைப் படுத்திய வகைகள் ஆரியத்தால் விளைந்த கேடுகள் என அவ்வியலில் ஆய்வுகள் நிகழ்த்துகிறார். வெளிநாட்டில் இருந்து இந்தியத்தில் முதற்கண் புகுந்த அயன் மொழியாளர் ஆரியர். அவர் சமயம் வைதிகம். அதன், புலை கொலை கேள்வி சடங்கு என்பவற்றை ஒப்பாமையால் இந்தியத்துள் கிளர்ந்த சமயங்களே புத்தமும் சமணமும். இம்மூன்றற்கும் முற்படத் தமிழிந்தியமாக இருந்த பெரும்பரப்பில் மட்டுமன்றி உலகளாவிய பரப்பிலும் ஞாயிற்றுக் கடவுள் வழிபாடும் சிவவழிபாடும் அம்மை வழிபாடும் இருந்தமையைச் **சைவ சமய வரலாறு** என்னும் தம் நூலில் விரிவாகக் கூறுகிறார் ந.சி.க.

ஆசிரியர் தொல்காப்பியர் வடசொல் தமிழில் புகுமாயின் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறையை உரைக்கிறார். ஆதலால்

அவர் காலத்திற்கு முற்பட ஆரியர் புகுந்தமை புலப்படும். ஒரு சமயம் ஒரு மதம் ஒரு நெறி என்னும் நிலையில் பெயர் வேண்டுவது இல்லை. ஓர் ஊரில் ஓர் ஏரி இருக்குமானாலும் ஓர் ஆறு ஓடுமானாலும் பெயர் வேண்டுவதில்லை. 'ஏரிக்கு, 'ஆற்றுக்கு' என்றாலே போதும். மற்றோர் ஏரியும் ஆறும் உண்டானால், பெயர் வேண்டி அமையும். அவ்வாறே பிற சமயங்கள் அல்லது மதங்கள் இங்கே வரும் வரை கடவுள் வழிபாடும் வழிபாட்டு முறையும் இருந்தனவே அல்லாமல் அவற்றுக்குப் பெயரீடு இல்லை.

வேதநெறி வந்த பின்னர்ப் புத்தமும் சமணமும் தோன்றி ஒன்றற்கு ஒன்று கொள்கை மோதல் ஏற்பட்ட நிலையில் மணிமேகலையில் சமயக்கணக்கர் தம் திறம்கேட்ட காதையில் முதற்கண் **சமயம்**, என்பதும் அதன்பின் **மதம்** என்பதும் கேட்கப்படுகின்றன.

### ஆரியத் தெய்வங்கள்

*தியசு, பிருதுவி, அதிதி, வருணன், மித்திரன், அக்கினி, இந்திரன், உழை, சவிதா, சூரியன், விண்டு, அசுவினியர், ஆதித்தர், பர்சனியன், வாடி, மருத்துக்கள்,உருத்திரன், சோமன், துவட்டா, இரிபுக்கன், விசுவகர்மன், பிரசாபதி, பிருகற்பதி, ஊச் பூசன், அபாம்நபாத்து, திரிதன், திதி, சரசுவதி, பாரதி, பிதிர்க்கள், யமனன், யமி* இன்னும் பெண் தெய்வங்கள் என விளக்குகிறார் பாவாணர்.

### வேதக்கால ஆரியத் தெய்வநிலை

வேதக்கால ஆரியத் தெய்வநிலை என்பதில், எல்லாத் தெய்வங்களும் சிறு தெய்வ நிலையின என்றும் ஒரே தெய்வம் பற்றிப் பல முரண்பட்ட கட்டுக்கதைகளைக் கொண்டவை என்றும், முருகன் சிவன் காளி திருமால் பற்றி ஆரிய வேதத்தில் ஒரு குறிப்புமில்லை என்றும் பிரமன் என்னும் ஆரியப் படைப்புத் தெய்வம் இருக்கு வேதக் காலத்தில் தோன்றவில்லை என்றும் கூறுகிறார்.

### ஆரியர் தெய்வ வணக்கநிலை

வேத ஆரியர் தெய்வ வழிபாடெல்லாம் கொலை வேள்விப் பல்சிறு தெய்வ வணக்கமே. அசுவமேதம் என்னும் குதிரை வேள்வி மிக அருவறுப்பானது. பௌண்டர யாகம் என்னும் வேள்வியோ சொல்லவும் எழுதவும் ஒண்ணா இடக்கர் மிக்கதென்று சொல்லப்படுகின்றது என்கிறார்.

கோயில் வழிபாடு, பெருந்தேவமதம், கடவுட் சமயம், நாற்பொருள் வீடு பேறு என்பன பற்றி இருக்குவேதியர்க்கு ஒரு கருத்தும் இருந்தது இல்லை என முடிவு கூறுகிறார்.

## ஆரியர் தமிழரை அடிமைப்படுத்திய வகைகள்

இத்தலைப்பில் அடிமைப்படுத்திய வகைகள் என இருபது குறிப்புகள் கூறி விளக்குகிறார்.

ஆரியர்க்கும் பழங்குடிமக்கட்கும் இடையே நடந்தனவாக் வேதத்தில் சொல்லப்படும் போர்களெல்லாம் பிராமணியத்தை ஏற்றுக்கொண்டவர்க்கும் ஏற்காதவர்க்கும் இடைப்பட்டனவேயாம்.

முன்பு பிராகிருதரையும் பின்பு திராவிடரையும் அதன் தமிழரையும் வெல்ல ஆரியர் கையாண்ட வழிகளுள் ஒன்று அவர் தெய்வத்தைத் தாமும் வணங்கல். இது அடுத்துக் கெடுத்தல் என்னும் வலக்காரத்தின் பாற்பட்டது.

வடஇந்தியாவில் பரவிய ஆரியர், வங்கத்திலுள்ள காளிக் கோட்டத்தை அடைந்தபின் காளி வணக்கத்தை மேற்கொண்டனர். பிராமணனே காளிக்கும் கடாவெட்டும் பூசாரியுமானான்.

மூவேந்தரும் முந்தியல் பேதைமை மதப்பித்தம் கொடை மடம் ஆகிய முக்குணங்களைக் கொண்டிருந்ததையும், வெப்பநாட்டு வாழ்க்கையால் தமிழருட் பெரும்பாலார் கருத்திருந்ததையும் கண்ட ஆரியர், தம் வெண்ணிறத்தையும் வேத மொழியின் வெடிப் பொலியையும் பயன்படுத்தித் தாம் நிலத்தேவர் (பூசுரர்) என்றும் தம் வேதமொழி தேவமொழி என்றும் கூறி ஏமாற்றி விட்டனர். அதனால் அவர் என்ன சொன்னாலும் நம்பவும் எது கேட்டாலும் கொடுக்கவும் அவரைத் தெய்வமாக வழிபடவும் வேண்டியதாயிற்று.

தொழில் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப் பொருள் இலக்கணத்தில் கூறப்பட்ட அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நாற்பாற் பாகுபாட்டைத் தீயமுறையில் பயன்படுத்திக் கொண்டு இந்தியர் எல்லாரையும் தொழில் நிற அடிப்படைகளில் பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வர்ணப் பிறவி வகுப்புகளாக வகுத்து அவை முறையே ஒன்றின் ஒன்று தாழ்ந்தவை என்னும் தாம் பிராமணரும் ஏனையர் ஏனைய மூவகுப்பாரும் ஆவர் என்றும் இப்பாகுபாடு இறைவன் படைப்பே என்றும் கூறிவிட்டனர்.

சிவனிய மாலியங்களின் உயர்வை உணர்ந்து அவற்றை ஆரியப் படுத்துவதற்கு இறைவன் முத்தொழிலையும் வெவ்வேறு பிரித்துத் தாம் புதிதாகப் படைத்த பிரமனைப் படைப்புத் தேவன் என்றும், முத்தொழில் திருமாலைக் காப்புத் தேவன் என்றும், முத்தொழிற் சிவனை அழிப்புத் தேவனென்றும் முத்திருமேனிக் கொள்கையைப் புகுத்திவிட்டனர்.

அழிப்புத் தொழிற்கேற்ற வலிமிக்குடைய காற்றுத் தெய்வமாக ஆரியர் கொண்டிருந்த உருத்திரனைச் சிவனோடு இணைத்தனர். திருமாலைக் குறிக்கும் விண்டு என்னும் தென் சொல்லை ஒத்த விஷ்ணு என்னும் வடசொல் கதிரவனைக் குறித்த தேனும் சொல்லொப்புமை ஒன்றுபற்றியே திருமாலை ஆரியத் தெய்வமாகக் கொண்டு விட்டனர்.

பிரமனைத் திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய மகன் என்றும் மாயோன் என்னும் காளியின் தொடர்பினால் நீலி அல்லது நிலம்மை எனப் பெயர் பெற்ற மலைமகளை மாயோன் என்னும் திருமாலின் தங்கை என்றும் பொருத்தமற்ற ஓர் உறவும் பொருத்தி விட்டனர். இதனால் சிவனாக்கப்பட்ட முருகன் திருமாலின் மருகன் ஆனான்.

கடைக்கழகக் காலத்தில் கந்தப்பிள்ளை சாத்தனார் எனக் கருவூரில் ஒரு புலவர் வாழ்ந்தார். வேல் முருகன் என்பதற்கு வேலினை யுடைய பிள்ளையார் எனப் பழைய உரைகாரர் வரைந்தனர். குமரி நாட்டுக் குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனுக்குக் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய விநாயகரை மூத்த பிள்ளையார் ஆக்கினர்.

சாத்தன் என்னும் ஐயனாரை, சங்கரநாராயணன் புணர்ப்பில் தோன்றிய அரியர புத்திரனாக்கினர். வீரபத்திரன் வைரவன் என்பாரையும் சிவன் மக்களாகக் கதை செய்தனர்.

முருகனும் வள்ளியும் குமரி நாட்டிலேயே குறிஞ்சி நில மக்கள் உள்ளத்தில் தோன்றிவிட்டனர். அறுமுகன் கதையும் தேவயானைப் பிணைப்பும் தொல்கட்டாயின.

தமிழக நாகரிகத்தையும் மதங்களையும் ஆரியப்படுத்தற்கும் தமிழனைத் தாழ்த்திப் பின் பிராமணனை உயர்த்தற்கும் பதினெண் தொன்மங்களையும் (புராணங்களையும்) பதினெண்துணைத் தொன்மங்களையும் (உபபுராணங்களையும்) இயற்றினர். திருமாலின் தோற்றரவுக் கதைகள் திருமாலை ஆரியத் தெய்வமாக்கக் கட்டிய கட்டுமானக் கதைகளேயாம்.

**தெய்வ வடிவமாற்றம்**

பகீரதன் கதையால் சடைமேல் கங்கையும்
திங்கள் சாவம் பெற்ற கதையால் முடிமேல் பிறையும்
நஞ்சுண்ட கதையால் கழுத்தில் கருநிறமும்
தாருகவனக் கதையால் கரியுரிப் போர்வையும்
பிரமன், தலைகொய்த கதையால் கையில் மண்டையோடும்
பிராமண ஒப்புமையால் பூணூலும் குடுவையும்
தமிழச் சிவன் வடிவை ஆரிய வடிவாக மாற்றின.

### தெய்வப் பெயர் மாற்றம்

| | |
|---|---|
| அடியார்க்கு நல்லான் | பக்தவத்சல |
| உலகுடையான் | கதீசுவர |
| தாயுமானவன் | மாத்ருபூத |
| பெருவுடையான் | பிரகதீசுவரன் |
| அம்மை | அம்பா |
| அழகம்மை | அபிராமி |
| உலகம்மை | சகதாம்பா |
| கயற்கண்ணி | மீனாட்சி |
| அரங்கன் | அரங்க |
| திருவரங்கம் | ஸ்ரீரங்கம் |
| முதுகுன்றம் | விருத்தாசலம் |
| வெண்காடு | சுவேதவனம் |

### கொண்ட முடிபு (சித்தாந்தம்)

துறவினாலேயே வீடுபேறு என்றும் துறவு பிராமணனுக்கே உரியது என்றும் பிராமணன் வாழ்க்கை மாணவம் (பிரமசரியம்), மனை வாழ்வு (கிருகத்தம்), காடுறைவு (வானப்பிரத்தம்), துறவு (சன்னியாசம்) என நால்வகைப்பட்டது என்றும், ஆரியப் பார்ப்பான் (பிராமணன்), அரசமறவன் (சத்திரியன்), வேளாண் வணிகன் (வைசியன்), கீழ்மகன் (சூத்திரன்) என்னும் நால் வர்ணங்களும் இறைவன் படைப்பென்று ஒவ்வொரு வர்ணத்தினரும் தம்தம் குலத்தொழிலைச் செய்வதே ஒழுக்கம் (தருமம்) என்றும், சூத்திரன் தன்குலத் தொழிலில் நின்று பிராமணனுக்குத் தொண்டு செய்வதனால் மறுபிறப்பில் வைசியனாகி, பின்னர் இவ்வாறே படிமுறையாகப் பிறப்புயர்ந்து இறுதியிற் பிராமணன் ஆவான் என்றும், அவ்வவ்வர்ணத்திற் கேற்பவே முக்குணங்களும் முந்நாடிகள் போல் மிக்கும் குறைந்தும் நிற்குமென்னும், ஆரியர்தம் மேம்பாட்டிற்கு ஏதுவாகத் தம் மணம் போல் கொண்டு முடிபு வகுத்துக் கொண்டனர்.

### மந்திரம்

ஓம் என்னும் மூலமந்திரம் இறைவனை அம்மையப்பனாக உணர்த்தும் ஒலிவடிவாகும். அது ஓ என்னும் ஒரே எழுத்தே. இன்னிசை பற்றி மகர ஈறு சேர்க்கப்பட்டது. ஓங்காரம் எனினும் ஓகாரம் எனினும் பொருளளவில் ஒன்றே. ஓங்கார வரிவடிவம் தமிழ் ஓகார வரிவடிவே ஆதலாலும் அது யானை வடிவை ஒத்ததென்று விநாயக புராணம் கூறுவதாலும் ஓங்கார மந்திரம் தமிழ் மந்திரம் என்பது தெளிவாம்.

மந்திரம் என்பது மன வலிமையே அன்றி எழுத் தொலிப்பன்று. முன்னுதல் - கருதுதல். முன் - மன். மன் + திரம் (திறம்) மன்திறம் = மன்றிரம் - மந்திரம். மன் - மனம்.

**சொல்லுலகம்**

தமிழர் குமரி நாட்டில் தோன்றிய முந்திய இனத்தார் ஆதலின் அவர் மொழியில் முப்பது ஒலிகளே அமைந்துள்ளன. அவை பெரும்பாலும் மிக எளியன. ஆரியர் அவருள்ளும் வேத ஆரியர் மிக மிகப்பிந்தியவர் ஆதலின் அவர் மொழியில் 51 ஒலிகள் அமைந்துள்ள. அவற்றுட்பல ஒலித்தற்கு அரியன. சில செயற்கையானவை. சிவனிய மெய்ப்பொருளியலில் எழுத்து 51 என்று கூறியிருப்பது சமற்கிருதம் நோக்கியேயாம். அது தமிழர் மொழியன்று. கோலெழுத்துக் காலத்திலும் வட்டெழுத்துக் காலத்திலும் தமிழிலும் 51 எழுத்திருந்தன என்பது வரலாற்றறிவும் மொழி நூலறிவும் அறவும் இன்மையையே காட்டும். எழுத்தொலி அல்லது மொழியொலி மூச்சுக் காற்றாகிய உயிர்ப்பு வளியாற் பிறக்குமேயன்றி ஆரியர் கூறியது போல் உதானன் என்னும் உந்திவளியால் பிறவாது.

**இறை உயிர் உறவுக் கொள்கை**

இறைவனும் ஆதனும் ஒன்று என்று சொல்லிக் கொண்டே நால்வேறு மக்கள் வகுப்பும் பிராமணவுயர்வும் பிறப்பிலமைந்தவை என்று கூறுவது எத்துணைத் தன் முரணும் நெஞ்சழுத்துமான கூற்றாம்.

**மதப்பிரிவுகள்**

சிவனியம் மாலியம் என இரண்டாய் இருந்த மதங்கள் குமரனியம் (கௌமாரம்), ஆனைமுகவம் (காணபத்தியம்), கதிரவம் (சௌரம்), காளியம் (சாக்தம்) என்னும் நான்கொடு ஆறாயின.

**கடவுட் சமய மறைப்பு**

உருவ வழிபாட்டினாலேயே ஆரியர்க்குப் பிழைப்பும், தமிழரை முன்னேற ஒட்டாது என்றும் அடிமைத்தனத்துள் அமிழ்த்தும் வாய்ப்பும் உண்மையால் கடவுட் சமயம் மறைக்கப்பட்டது.

**தொழுகை நூற்புணர்ப்பு**

திருக்கோயில்களிலெல்லாம் என்றும் பிராமணரே பூசகராய் இருந்து சமற்கிருதத்தில் வழிபாடு நடத்துமாறு ஆகமம் தந்தரம் முதலிய தொழுகை நூல்களை அமைத்துக் கொண்டனர். ஆகமம் = தோன்றியம் (புதிதாகத் தோன்றியது.).

### தொன்ம மறவனப்புத் தொடர் சொற்பொழிவுகள்

பிராமணரைத் தெய்வமாக உயர்த்தியும் அவர்க்குத் தொண்டு செய்வதை வற்புறுத்தியும் கூறும் தொன்ம (புராண) மறவனப்பு (இதிகாச)க் கதைகளைத் தொடர்ந்து ஊர்தொறும் விழாக் காலங்களில் இசையொடு சொல்லி வந்ததனால், ஆரியப் பற்று பொதுமக்கள் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து, அரத்தத்தோடு அரத்தமாய்க் கலந்து ஊறிப் போயிற்று.

### சிவனியர் மாலியர் சார்புகள்

ஆரியத்தால் ஏற்பட்ட தமிழ மதக்கேடு, ஆரிய மேம்பாடு என்பவற்றை விளக்கும் பாவாணர் சிவனியர் ஆரியச் சார்பும் திருமாலியர் தமிழ்ச் சார்பும் எனப் பட்டியலிடுகிறார்

| சிவனியம் | மாலியம் |
|---|---|
| ஆரிய வேதமே வேதமெனத் தமிழராலும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. | நாலாயிரத் தெய்வப்பனுவலும் ஆரிய வேதத்தோடு ஒப்பத் திராவிட வேதம் என (தென்கலை)ப் பிராமண ராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. |
| மெய்ப்பொருளியல் ஆரியக் கலப்பு மிக்கது. | மெய்பொருளியல் ஆரியக் கலப்பு இல்லாதது. |
| திருஞானசம்பந்தராகிய பிராமணரே தலைசிறந்த அடியார். | நம்மாழ்வார் ஆகிய தமிழரே தலைசிறந்த அடியார். |
| தில்லை நடவரசன் திருப் படிமையைக் காணவந்த சிறந்த அடியாரான நந்தனார் தீண்டாதவர் என்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டார். | திருவரங்கநம்பி திருப்படிமையைக் காண அஞ்சித் தொலைவில் நின்ற திருப்பாணாழ்வார் திருவரங்க நம்பி ஏவலால் தலைமைப் பூசகராகிய பிராமணர் தோள் மீது ஏற்றிக் கொண்டு வரப்பட்டுத் தெய்வத் திருமுன்பு நிறுத்தப்பெற்றார். |
| தெய்வப் பெயரும் சமயக்குரவர் பெயரும் திருநகர்ப் பெயரும் பெரும்பாலும் வடசொற்களாக அமைந்தும் மாற்றவும் பட்டுள்ளன. | தெய்வப்பெயரும் ஆழ்வார் பெயரும் திருநகர்ப்பெயரும் பெரும்பாலும் தென் சொற்களாக அமைந்துள்ளன. |
| கொண்முடிபு வீடுபேற்று வாயில்களை ஆரிய முறைப் படி கூறுவது | கொண்முடிபு வீடுபேற்று வாயில்களைத் தமிழ்முறைப்படி கூறுவது. |

இவ்வாறு ஆய்ந்து காணும் பாவாணர்,

> சம்பந்தர் வேதத்தையும் வேதியரையும் வேள்வியையும் பலவிடத்தும் பாராட்டிப் போற்றியிருப்பதை நோக்குமிடத்து, அவர் சிவநெறியை மட்டுமின்றி வேத

> நெறியையும் காக்கவே சமண மதத்தைப் பாண்டி நாட்டில் தொலைத்தார் என்று கருத நேர்கின்றது.

என்கிறார்.

வேதவழியால் தமிழர் சமயம் எவ்வெவ்வாறெல்லாம் சிதைக்கப்பட்டது என்பதையும் தமிழர் சமயம் எப்படி அதனை ஒப்புக் கொண்டு தன்னிலை இழந்தது என்பதையும் பிற ஆய்வாளர்கள் செய்யாத அளவு பாவாணர் செய்தமை இக்குறிப்புகளால் புலப்படும்.

### கரவு வழி

**சமணர், பௌத்தர்** ஆயோர் தம் சமயத்தைத் தம் சமயமாகவே கொண்டு பரப்பினர். ஆனால், வைதியர் **வைதிக சமயம்** எனக் கொள்ளாமல், தமிழர் சமயத்தை ஊடுருவித் தம் சமயமாகவே ஆக்கிக் கொண்ட கரவின் அடிமூலம் என்ன என்பதை எண்ணுகிறார் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி.

> வைதிகப் பிராணமர் வைதிக மதப்பிரசாரம் செய்து, தம்முடைய **வைதிக மதத்தைப்** பரப்பவில்லை. காரணம் என்னவென்றால், பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டிய வைதிகப் பிராமணர், மற்றவர்களைத் தம்முடைய மதத்தில் சேர்த்தால் தங்கள் சாதி கெட்டுப்போகும் என்று கருதியது தான்

என்கிறார். அதனால்,

> வைதீகப் பிராமணர் தங்களுடைய வைதிக சமயத் தெய்வங்களைத் தமிழர்களின் (திராவிடரின்) கடவுளர் களோடு இணைத்துத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்கள். அதற்கு ஏற்பப் புராணக் கதைகளைக் கற்பித்துக் கொண்டனர்.
>
> திராவிடத் தெய்வங்களுடன் ஆரியத் தெய்வங்கள் பொருத்தப்பட்டு இரண்டும் ஒரே மதத் தெய்வங்கள் என்று சொல்லப்பட்டன. இந்தத் திராவிட ஆரிய உறவைத் தான் பிற்காலத்தில் வந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூறியுள்ளனர்

என்கிறார். (**சமயங்கள் வளர்த்த தமிழ்**: 47-51).

### உட்போர்

> சிவனியம் மாலியம் இரண்டும், முத்தொழில் முழு திறையாகக் கொள்ளப்பட்டிருந்ததை மும்மூர்த்தப் படுத்தியதால் தமிழமதத்துள் உட்போர் கிளர்வதாயிற்று.

> அதனால், "சிவ மாலருள் எவன் பெரியவன் என்று வினா எழுந்து அதனால் தமிழர்க்குள்ளேயே கடும்போர் மூண்டது

என்று சான்று காட்டுகிறார் பாவாணர்.

இரண்டாம் குலோத்துங்கன் சிவனியன். அவன், "சிவனிலும் பெரிய தெய்வமில்லை" என்னும் வாசகம் பொறித்த செப்புப் பட்டயத்தில் கையெழுத்திடுமாறு இராமானுச அடிகளை அழைத்தான். அடிகட்குப் பதிலாக அவர் மாணவர் கூரத்தாழ்வார் சொன்று, "சிவத்தினும்பெரியது துரோணம்" என்று கூறியதால் உடனே தம் இரு கண்களையும் இழந்தார். இராமானுசர் இவ்வினையை அறியுமுன்னரே ஒய்சள நாட்டுக்கு விரைந்து சென்று தப்பினார்.

வடமொழியில் சிவம் என்பது *குறுணி (ஒரு மரக்கால்) என்றும், **துரோணம் என்பது தூணி (இரு மரக்கால்) என்னும் திருமால் என்றும் பொருள்படும்.

இனி, சிவ மாலர்க்கு ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் 'ஹரிஹர தார தம்மியம்' என்னும் நூல் வடமொழியில் இயற்றப்பட்டுத் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இவ்வகையால் சிவனியமும் மாலியமும் முட்டி மோதிக் கொள்ளவும், தமிழர் பொது நெறி பிளவுபட்டுப் போகவும் வேதவழி தூண்டி நின்றது.

இன்னவற்றை ஆழ நினைவார்க்கு என்ன தோன்றும்? சமயச் சால்பு தானே தோன்றும்.

> சமயம் மாந்தரைப் பக்குவப்படுத்த அமைந்தது; சால்புடைய பெருமக்கள் தாம்பெற்ற பேற்றை உலகவரும் பெறவேண்டும் என்று தம் விரிந்து விழுமிய நோக்கால் பரப்பியது. உலகளாவிய நெறியாய் வழிவழி வருவது. அவற்றை ஏற்பார் ஏற்கலாம் ஏற்க மறுப்பார் ஏற்காதிருக்கலாம். இரண்டும் என்றும் எங்கும் உள்ளவையே. ஆனால் மாந்த நேயம் என்பது மாந்தப் பிறவி அனைத்திற்கும் உரியது. மாந்தராய்ப் பிறந்தது அரிது இல்லை. மாந்தராய் வாழ்வதே அரிது மாந்தராய் வழும் வாழ்வின் அடையாளம் மன அறிவு. மன அறிவுடையார் மனத்தர். 'மனித்தர்' அவர் தம்மைப் போல் பிறரையும் - ஏன்? - தம்மைப் பார்க்கிலும்

---

* மரக்காலைக் கவிழ்த்து வைத்தது போன்றது சிவலிங்கம், ஆதலால் குறுணி எனப்பட்டது.

** துரோணம் = வில்லேந்திய மால். தூணி அம்புப்புட்டில் பதக்கு என்னும் இரண்டு மரக்கால்.

> பிறரையும் மதித்து - நேசித்து - போற்றி - வாழ்வார்! அவருள் முரண் முட்டுதல் மோதுதல் தோன்றவே தோன்றா! அண்டம் கோடி எனினும் ஒன்றோடு ஒன்று முட்டி மோதாமல் தானும் இயங்கி பிற அண்டங்களும் தம்மில் இயங்க ஒன்றனுக்கு ஒன்று நின்று உதவினால் போல அமைதலே விழுமிய மாந்தப் பிறப்பாம்! இயற்கை இறைமைச் செந்நெறி இதுவாம்!

இச்சால்பு தோன்றினார்க்கு என்ன தோன்றும்? மதச்சம சமநோக்குத் தோன்றும்! மத சமநோக்கு என்பதை எழுதுகிறார் பாவாணர்.

சமநோக்கு தொழில்வழி வகையாலும் ஏற்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

### மதச் சமநோக்கு

> சிவனியம் மாலியம் உலகியம் (லோகாதயம் அல்லது சார்வாகம்) என்னும் மூன்றே தொன்றுதொட்டு வழங்கும் தமிழ் மதங்களாயினும், இன்று வெளிநாட்டு மதங்களும் தமிழரிடைப் புகுந்திருப்பதாலும் அம் மதத்தாரைத் தமிழர் அல்லர் என விலக்கல் கூடாமை யாலும், **இற்றை முறைப்படி சமணம், புத்தம் கிறித்தவம் இசுலாம் என்னும் மதங்களையும் தமிழ்நாட்டு மதங்களாகவே கூறல் வேண்டும்.**
>
> உலகியம் ஒன்றுமட்டும் உலகம் முழுமைக்கும் தொன்றுதொட்டுப் பொதுவாகும்.
>
> மதங்களெல்லாம் தேவியம் (Theism) அல்லது உள்ளியம் (ஆஸ்தியம்), தேவிலியம் (Atheism) அல்லது இல்லியம் (நாஸ்திகம்) என இருவகைப்பட்டிருப்பதால் மதவியல் வாயிலாக மக்களை ஒன்றுபடுத்தல் இயலாது. அதனாலேயே இந்திய ஒன்றியமும் (Indian Union) மதவியலைத் தழுவாது உலகியலையே (Secularism) தழுவியுள்ளது. ஆதலால், தாய்மொழி ஒன்றே ஓரினப் பல மதத்தாரையும் ஒன்றால் இணைக்க வல்லதாம்

என்கிறார்.

### தொழிற் சமநோக்கு

மாந்தர்தம் அகக் கரணங்களும் புறக்கரணங்களும் இயற்கையிலேயே வெவ்வேறு வகைப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு உயர்வு தாழ்வு செய்யாது ஒப்ப ஓம்ப வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். மாந்தரெல்லாரும் ஒரே திணையாயினும் நாகரிக வாழ்க்கையில் உணவுமட்டுமன்றி உடை, உறையுள், கருவி, தட்டுமுட்டு, ஊர்தி, மருந்து, இன்புறுத்தி, அறிவுநூல் முதலிய

பல்வேறு பொருள்கள் தேவையாய் இருப்பதால், அவற்றை யெல்லாம் உருவாக்குவதற்கு, அவர் அகக் கரணங்களும் புறக் கரணங்களும் இயற்கையிலேயே வெவ்வேறு வகைப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பொருளும் உழைப்பினாலேயே உருவாக்கப்படும். உடல் உழைப்பும் மதி உழைப்பும் என உழைப்பு இரு வகை. இருவகை உழைப்பும் இன்றியமையாதனவே உடல் உழைப்பாளிகள் உடல் வலிமை யராகவும், மதி உழைப்பாளிகள் மதி வலிமையராகவும் பிறக்கின்றனர். இது இறைவன் ஏற்பாடு. இதையே ஊழ் (விதி) என்பர்.

எல்லாரும் மதிவலியராயின் உடலுழைப்பே நடைபெறாது. இதை, எல்லாரும் பல்லக்கேறினால் எவர் தூக்குவது? என்னும் பழமொழி உணர்த்தும். ஆயின், உடல் உழைப்பாளியரைத் தாழ்வாகக் கருதுவதும், அவர்க்கு வேண்டிய வாழ்க்கைத் தேவைகளைத் தர மறுப்பதும் கொடுமையும் அஃறிணைத் தன்மையும் ஆகும். உடல் உழைப்பாளியரையும் உடன் பிறப்புப் போல் நன்கு மதிக்க வேண்டும்.

உடல் உழைப்பாளியர் தம் உரிமையைப் பெறும் பொருட்டே காரல் மார்க்சுவும் பிரெடிரிக்கு ஏஞ்சல்சுவும் சென்ற நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டனர்.

எல்லா மக்களும் வெவ்வேறு தொழிலும் வினையும் செய்து உடன்பிறப்புப் போல் கூடி வாழ்வதற்கே, அவர் உடல் உளம் மதி முதலியன வெவ்வேறு திறம்பட இறைவனால் படைக்கப்பட்டுள்ளன என்கிறார்.

தமிழகத்து வழக்கிலுள்ள சமயங்கள் எல்லாம் தமிழர் சமயமாகக் கொள்ள வேண்டும் என்று சமயச் சால்பால் கூறும் பாவாணர் அச்சமயச் சால்பு, அச்சமயங்கள் தமிழ்ச் சமயங்களாகத் திகழ்வதைக் கடைப்பிடியாகக் கொண்டிருத்தலைக் கொண்டே முடிவு செய்யப்படவேண்டும் என்பதையும் தெளிவாகவும் திட்டமாகவும் உரைக்கிறார். அதனை மேலே காணலாம்.

# 11. முடிநிலை

தமிழர் சமயம், சிவனியம் மாலியம் என இரண்டே. தமிழரால் தமிழ் மொழியில் வழிபாடு மெய்யியல் என்பவை எல்லாம் வகுக்கப்பட்ட சமயங்களாம் இவை.

**புத்தம் சமணம்** என்பவை, தமிழிந்தியமாக இருந்த நாளில் பழந்தமிழ் மூலமாய் முகிழ்த்த பாகத (பிராகிருத) மொழி வழிப்பட்ட இந்திய மண்ணின் சமயங்கள்.

தமிழிந்திய மண்ணுக்குப் புலம்பெயர்ந்த மண்ணில் இருந்து முதற்கண் - புத்தம் சமணம் என்பவை தோன்றுவதற்கு முதற்கண் - புகுந்தது, **வைதிகம்** என்னும் **வேத சமயம்.**

இசுலாமியப் படையெடுப்பு, ஆங்கில வணிகவழிக் கவர்ந்த நாட்டாட்சி என்பவற்றால் உண்டாகி நிலைத்துவிட்ட முகமதிய கிறித்துவ சமயங்கள், வைதிகம் போலவே நாட்டாலும் மொழியாலும் அயன்மைப்பட்டவை.

தமிழுக்கு வாய்ந்த முதல் நிகண்டாகிய திவாகரம், ஆரியர் என்னும் சொல்லுக்கு **மிலேச்சர்** என்னும் பொருளே கூறுகிறது.

இச்சமயங்களில் முதற்கண் வந்த வைதிகம் தனித்து நில்லாமல், சிவனியத்தையும் மாலியத்தையும் சிதைத்து, மேதக்க பேரறிவு படைத்த இறைமைத் தோன்றல்களாலும் பிரித்துக் கண்டுகொள்ள முடியாக் குலைவினைச் செய்ததோடு, 'சிவனியமும் மாலியமும் தமிழர் சமயம் இல்லை' என்பது போலவும், பெரும் பரப்புதல் தொடங்கி இன்று காறும் அக்கரவு நிலை தொடரவே செய்கின்றது.

தமிழர் மெய்யியல் கொள்கைகளையெல்லாம் தன் கொள்கையாக எடுத்துக் கொண்டு, தன் பூதவழி வேள்விச் சடங்குகளையெல்லாம் சிவனியம் மாலியம் என்பவற்றில் புகுத்தி, **கடவுட்சமயம்** என்னும் நிலையை முற்றிலும் மாற்றிச் சடங்குச் சமயம் என்பதை நிலைநாட்டி வந்திருப்பதும் அவ்வழியே வழியாய்த் தொடர்வதும் கண்கூடு. இவ்வழியால், பொருந்தாததும் பகுத்தறிவுக்கும் இறைமைக்கும் ஏலாததுமாம் தொன்மப் புனைவுகளை உருவாக்கித் தமிழர் வாழ்வியல் அடையாளமாகிய மொழியையும் மொழிக்கு அரணமாம் இலக்கண இலக்கியங்களையும் சிதைத்தது.

தமிழில் முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரம், சமண சமயக் கொடையாம். அச்சமயப் பரப்புதல் நோக்கிலே அது கிளர்ந்தது. அச்சமயப் பரப்புதலுக்கு எனவே படைக்கப்பட்ட சமண சமயத் தோன்றல், **காவுந்தி ஐயை** (கவுந்தியடிகள்). ஆயினும், மாடல வேதியன், சிவனெறிச் செங்குட்டுவன், மாலியச் சேடக் குடும்பி, மாதரி, குன்றவர், ஆயவர்களும், சிவனியம் மாலியம் முருகியம் கொற்றவியம் ஆகியவும் ஒப்பமதித்துப் போற்றப்படுகின்றமை ஒப்புரவுக் காப்பியப் பேற்றைத் தந்தது.

சிலப்பதிகாரத்தை அடியாக வைத்தே, "பெருங்காப்பிய நிலையே பேசுங்காலை, வாழ்த்து வணக்கம் வருபொருள்" எனத் **தண்டியலங்காரம்** வரம்பு செய்ய உதவியது. சிலப்பதிகாரக் காலத்திலே அக்கதைத் தொடர்ச்சியாகக் கிளர்ந்த மணிமேகலைக் காவியம், புத்தம் சார்ந்தது. சமண சமய இளங்கோவடிகட்கும் சிவனியச் செங்குட்டுவனுக்கும் உற்ற நண்பராக இருந்த மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றியது. அதிலே அப்புத்தம் தவிர்த்து அந்நாள் வழங்கிய சமயங்கள் பலவும் சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் மணிமேகலையாரால் மறுக்கப்படுகின்றன. தமிழில் கிளர்ந்த இரண்டாம் காப்பியம் அது. காலம் கதைத் தொடர்புகளைக் கருதி இவ்விருகாப்பியங்களையும் 'இரட்டைக் காப்பியம்' என்று சுட்டும் பேறு அமைந்தது.

ஆடவராயினும் பெண்டிராயினும், "தமக்கென வாழாப் பிறர்க்குரிய" வாழ்வராகத் திகழ முடியும். உலகம், "பசியும் பிணியும் அற்று வசியும் வளனும் உற்று" உய்ய முடியும் என்பது காட்டும் காப்பியம் அது. **இவை அயற்சமயங்கள் தமிழுக்குத் தந்த கொடை.** இக்கொடையின் **உயிர்நிலை** எது? இக் காப்பியங்கள் மொழிபெயர்ப்புக் காப்பியங்கள் அல்ல! - இம்மண்ணின் மக்களின் - வரலாறாக வாழ்வியலாக அமைந்து கிடந்தவற்றின் வெளிப்பாடு! ஆள்வோரும் வாழ்வோரும் வாழ்விடங்களும் வாழ்முறைகளும் அந்நாள் இருந்த முறையை, அறியக் காட்டிவரும் ஆவணங்கள்! அயற் சமயங்களாயினும் அச்சமயப் பரப்பலாயினும், அவை **தமிழ் மண்ணில் மலர்ந்து தமிழ்மணம் பரப்புபவை ஆயிற்றாம்.**

இவற்றுக்கு முந்தைத் தமிழ் நூல்களாம் தொல்காப்பியம் திருக்குறள் பாட்டுத் தொகை என்பவை, முழுமையான தமிழ்மண் தமிழ்ப் புலமையரின் தகவார்ந்த, தமிழ்க் கொடைகள். கடவுளர் வழிபாடு, தெய்வ வழிபாடு, நடுகல் வழிபாடு என்பவை இவற்றில் இருந்தமை அன்றிச் சமயப் பெயரோ, மதப்பெயரோ இல்லை! ஆதலால், அவை சமயம் தந்த கொடைகள் ஆகா. பிற்காலச் சமயங்கள் அவற்றைத் தம் சமய நூலாகக் கொள்ளுதல் தம் வழிபாட்டு இறைமைச் சார்பிலேயே ஆகும்.

பெருங்கதை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, சூளாமணி, நீலகேசி முதலிய நூல்களும் நிகண்டு நூல்களும் சமண பௌத்த சமயத்தவரால் தமிழில் தரப்பட்டன. நாலடியார், பழமொழி, ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் முதலிய அறநெறி நூல்களும், திருக்கலம்பகம் திருநூற்றந்தாதி என்பனவும் சமண நூல்களே. கிறித்தவ சமயத்தாரால் உரைநடை வளம்பெற்றது. நிகண்டுகளாக இருந்த சொற்பொருள் நூல்கள் அகராதிப் பேறு பெற்றன. தேம்பாவணி, இரட்சண்ய யாத்திரிகம், இரட்சண்ய மனோகரம், நீதிநூல், சர்வசமய சமரசக் கீர்த்தனை முதலிய நூல்களும் கிடைத்தன. இலக்கணம், மொழிபெயர்ப்பு என்பவையும் வாய்த்தன.

சிவனியம் மாலியம் என்பவற்றின் கொடைகளுக்கு இணையாக வாரப் பாடல், வரிப்பாடல், தேவபாணி, இசைப்பா, திருப்புகழ், மெய்யியல் நூல்கள், பாரகாவியம் ஆகியவற்றைப் பிற சமயங்கள் தந்துவிட முடியா! ஆனால் அச்சமயங்களும் 'வாளா' இல்லை! இயன்றவை செய்தன என்பதே இக்குறிப்பு. ஆனால் இச்சமயங்கள் இன்னும் செய்திருக்க வேண்டும். மொழித் தூய்மை பேணி இருக்கவேண்டும் என்பதில் கருத்து வேறுபட முடியாது. கருத்து வேறுபடின் அவரும் மொழிக்கேடரைச் சார்ந்தவரே ஆவர்!

சமயங்கள் வளர்த்த தமிழ் என்னும் தம் நூலில் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் குறிக்கும் செய்தியும் சான்றும் வருமாறு:

> ஆங்கில பைபிள் ஆங்கில இலக்கியத்திற்குச் சிறந்த இலக்கியமாக இருப்பதுபோல், தமிழ் பைபிள் தமிழ் இலக்கியத்தில் சிறந்த நூலாக அமையவில்லை. பொதுவாகப் பார்த்தபோது கிறித்துவமதம் வளப்பமுள்ள தமிழ் இலக்கியத்தைப் படைகக்வில்லை. 'பாதிரித் தமிழ்' 'கிறித்துவத் தமிழ்' என்று பெயர்பெற்ற ஒருவகைத் தமிழை அவர்கள் படைத்தார்கள். அந்தத் தமிழ் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஏற்றதாக இல்லை. இப்படிக் கூறுவதனால் கிறித்தவர்களுக்குத் தமிழ் தெரியாது என்று கூறுவதாகக் கருதவேண்டாம். எத்தனையோ சிறந்த புலவர்கள் கிறித்துவர்களில் இருந்திருக்கிறார்கள்.
>
> அண்மையில் காலம் சென்ற சிறந்த தமிழ்ப் புலவரான கிறித்துவர் ஒருவரைச் சில ஆண்டுகளுக்கு முன்னர் கண்டு பேசினேன். பாதிரித் தமிழையும் கிறித்துவத் தமிழையுப் பற்றி அவரிடம் கூறி ஏன் நல்ல தமிழைக் கிறித்துவர்கள் வளர்க்கக் கூடாது என்று கேட்டேன்.

> அவர் இந்தக் குறையை ஒப்புக் கொண்டு பெரிதும் மனம் வருந்தினார்.
>
> ‘என்ன செய்வது?’ ‘பாதிரிமார்கள் இடம்தரவில்லையே’ ‘சொன்னாலும் கேட்கவில்லையே’ என்று கூறி வருந்தினார். பாதிரிமார்களின் ஆதிக்கம் இருக்கும் வரையில், சமய இலக்கியங்களில் பாதிரிகள் தலையிடுகிற வரையில் கிறித்துவத் தமிழும் பாதிரித் தமிழும் இருந்தே தீரும்.

என்கிறார்.

இசைப்பேரறிஞர்: இசைப்பா இயற்றவும் கருவியோடு இசைக்கவும் வல்லார்; இசை நூல்கள் பல யாத்தவரும் அவர். யானும் அவரும் கிறித்தவக் கோயில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டோம். அக்கோயில் பாதிரியாரும் எங்களோடு இனிய தமிழ் பேசி அளவளாவி இருந்தார். பின் வழிபாட்டு மேடைக்குச் சென்றார். அவர் சென்றதும் பேராசிரியர்,

> இவர் இனியர்; நல்ல தமிழர்; நன்றாகப் பேசுவார்; ஆனால், வழிபாட்டு மேடை ஏறிவிட்டார் பாருங்கள், நடுக்கும் குளிருக்கு ஆட்பட்டவர் போலக் குரலை மாற்றிக் கொண்டு மொழி ஒலியையும் பொருளையும் சிதைத்துத் தீர்த்து விடுவார்

என்றார். ஆம்! அதை மெய்ப்பித்தார்.

ஆனால், உரோமைக் கிறித்தவ சமயத்தார் இதழ்கள் நூல்கள் மொழிபெயர்ப்புகள் பொழிவுகள் ஆகியவற்றை நான் நன்கு அறிந்தும் ஆய்ந்தும் வருகிறேன். அவர்கள் எச்சமயத் தாரினும் ஆம்! சிவனியர் மாலியரினும் மொழிப்பற்றாளராய் - தனித்தமிழ் போற்றுபவராய், தமிழ் வளர்ச்சியில் பங்களிப் பாளராய் விளங்கி வருதலைக் கண்கூடாகக் காண்கிறேன். இது எழுதும் ஆண்டு கி.பி. 2007. மயிலையார் 1966இலேயே, மேலே சுட்டிய குறிப்பை எழுதி விட்டு, **“ஆனால், இந்த நிலை இப்போது நீங்கி வருகிறது”** என்றார்.

முகமதிய மதம் நமது நாட்டிற்கு வந்து ஐந்நூறு ஆண்டுகள் ஆகியும் தமிழ்மொழிக்கு மிகத் தொண்டு செய்யவில்லை. சீறாப்புராணம், இராசநாயகம் என்பன போன்ற சில நூல்களைத் தவிர வேறு நல்ல இலக்கிய நூல்கள் இன்னும் தமிழில் வரவில்லை. தமிழ் முசுலீம்கள் குர்-ஆன் வேதத்தை மட்டும் ஓதினால் போதும் என்னும் கருத்தை அண்மைக்காலம் வரை கொண்டிருந்தார்கள். குர்-ஆன் அரபி மொழியில் இருப்பதால் அதைத் தமிழ் முசுலீம்கள் படிப்பதற்காக அரபுத் தமிழ் என்னும் ஒரு வகை எழுத்தை உண்டாக்கிக் கொண்டு அந்த எழுத்தில் தமது மத நூல்களை

எழுதிப் படித்தார்கள். குர்-ஆனை வேறுமொழியில் பெயர்க்கக் கூடாது என்னும் கொள்கையும் அவர்களுக்கு அண்மைக்காலம் வரை இருந்தது. இப்போதுதான் திருக்குர்ஆன் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் முசுலீம் தமிழர் தமிழிலே நல்ல நூல்களை எழுத முனைந்திருக்கிறார்கள் என்று சமயங்கள் வளர்த்த தமிழில் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் கூறுகின்றார்.

இசுலாமியத் தமிழர்கள் சிற்றிலக்கியங்கள் பலப்பல இயற்றியுள்ளனர்; வண்ணப்பாவலராகத் திகழ்ந்துளர்; மெய்ப் பொருள் பாடல்களும் பாடியுளர். தமிழ் வளர்த்த தாதாவாகவும் இருந்துளர். சதாவதானி செய்குதம்பிப் பாவலர் தூய சிவனிய நெறியராய் உண்டு, வள்ளலார் அருட்பா அருட்பாவே என்று நாட்டியதையும் இந்நாளில் மொழித் தொண்டில் ஈடுபட்டி ருப்பாரும் உளர். எனினும் அச்சமயய இலக்கியம் தமிழரால் விரும்புமாறு அமையாமை ஏன் என்பதை நல்லறிஞர் நடுவர் **இசுமாயில்** அவர்கள் கூறுவது செவ்விதாகவே புலப்படுகின்றது.

முசுலீம் இலக்கிய வாணர் தமிழ் மரபு மாறாது நூல்கள் இயற்றினும் மற்ற இலக்கியங்கள் தமிழ் மக்களிடையே பரவியுள்ள அளவுக்கு இசுலாமியத் தமிழிலக்கியம் பரவவில்லை. இத்தகைய இலக்கியம் இருக்கிறது என்பதுகூடப் பலருக்குத் தெரியாது.

இந்த நிலைக்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, இவ் விலக்கியங்கள் பல, அரபுச் சொற்களாலானதும், இசுலாத்தோடு சம்பந்தப்பட்டதுமான பெயர்களைக் கொண்டிருப்பதாகும்.

உதாரணமாக ஆரிபுநாயகம், புதூஹீஷ்ஷாம் என்பவை, தமிழ் இலக்கியங்களின் பெயராக இருக்க முடியும் என்று எத்தனை பேர்களால் உணர்ந்து கொள்ள முடியும்? இரண்டாவதாக ஓரளவு தமிழறிவு இருந்து இசுலாமியத் தமிழ் இலக்கியமும் இருக்கிறது என்று தெரிந்தவர்களும் கூட அவற்றைச் சரியாகப் படித்துப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இந்த இலக்கியங்களின் ஊடே தூய தமிழ்ச் சொற்களுக்கிடையே தமிழ் வடிவில் ஆளப்பட்டுள்ள அரபுச் சொற்கள் பல எதிருறுகின்றன.

இதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட சொல் தூயதமிழ்ச் சொல்லா தமிழ் வடிவம் கொடுக்கப்பட்ட அரபுச் சொல்லா என்று புரிந்துகொள்ள முடியாத மயக்கமும் ஏற்படுகிறது. இது போலவே இசுலாத்தின் அடிப்படையில் முஸ்லீம்களின் வாழ்க்கையில் இடம்பெற்றுவிட்ட பழக்க வழக்கங்களும் மரபுகளும் இந்த இலக்கியங்களில் ஆங்காங்கே சொல்லப் பெற்றுள்ளன. இவற்றிற் கெல்லாம் முழுமையான விளக்கம் தருகின்ற இவ்விலக்கியங்களின்

பதிப்புகள் வெளிவராத வரையில் இத்தகைய இலக்கியங்கள் இருக்கின்றன என்று தெரிந்தவர் களால் கூட அவற்றை அனுபவிக்கமுடியாது. அத்தகைய முயற்சி எக்காரணத்தினாலோ இதுவரையில் நடைபெறவில்லை என்கிறார்.

**தமிழ்**

> தமிழுக்கு வேலி, கடலோ மலையோ எல்லைகளோ இல்லை. தமிழ் வழக்கு ஒன்றே வேலி. அதனால், "தண்டமிழ் வேலித் தமிழ் நாட்டகம்" என்றது பரிபாடல். தமிழ் கூறு நல்லுலகம் என்றது தொல்காப்பியம்.
>
> ஆதலால் தமிழ்நாட்டில் தமிழ்மக்களுக்குத் தமிழ்ச் சமயம் என மெய்யாக ஏற்றுப்போற்றுதற்குக் கட்டாயமாக வேண்டுவது தமிழ்வேலி.

தமிழர் சமயமாயினும் அயலார் சமயமாயினும் தமிழ் வேலி கொள்ளாக்கால் தமிழர் சமயமாகக் கொள்ளும் தகுதியுடையதாக மாட்டாது. இவ்வடிப்படையைக் கொண்டு பாவாணர் முடிபு ஒன்றை வரம்பாகக் கூறுகிறார். தமிழர் எம் மதத்தார் ஆயினும் தமிழைத் தாய்போற் பேணிக்காத்தல் வேண்டும். தமிழ் என்பது தனித்தமிழே. அயல்நாட்டு மதம் என்னும் கரணியத்தால் அயன்மொழிச் சொற்களை ஆளுதல் கூடாது. தமிழ்மொழி பற்றியுள்ள அயன்மொழிச் சொற்களையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்தல் வேண்டும். நேர்த்தென்சொல் ஏற்கெனவேயில்லாவிடின் புதுச்சொற் புனைந்து கொள்ள வேண்டும் எனக் கூறும் பாவாணர் மதம் பற்றியும் கடவுள் பற்றியும் ஒவ்வொரு முடிபு கூறுகிறார்.

**மதம்**

மதம் என்பது, காணப்படாத மறுமை நோக்கியது. ஆதலால், எல்லா மதங்களையும் சமமாக நோக்குதல் வேண்டும். ஒவ்வொரு மதத்தார்க்கும் தம் மதத்தைப் பிறர்க்கு எடுத்துரைக்க உரிமை இருப்பினும், அது பற்றிப் பிற மதத்தாரை வெறுப்பதும் பகைப்பதும் மதநோக்கத்திற்கும் மாந்தன் தன்மைக்கும் முற்றும் மாறானதாகும்.

**கடவுள்**

கடவுள் இருப்பது உண்மையாயின் அவரை நம்புவாரையும் நம்பாதாரையும் அவரே மறுமையில் கவனித்துக் கொள்வார். இம்மையைப் பொறுத்தமட்டில் எல்லாரும் உடன்பிறப்பாக ஒன்றி வாழல்வேண்டும். அதுவே உயர்திணை என்னும் மக்கள் தன்மை.

இவை பாவாணர் சமயச் சால்பின் பிழிவு.

**வாழிய நலனே!**
**வாழிய நிலனே!**

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ்.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீயும் மேலை அறிஞரும் | 60.00 |
| அறந்தாங்கித் தொண்டைமான்கள் | 45.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| ஆறுமுக நாவலர் | 60.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |

**614 பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் 30.00**